முன்னுரை

அப்போஸ்தலர் பவுல் மக்கெதோனியா நாட்டின் வழியாக போகும்போது, அந்த நாட்டைக் கடந்தபின்பு, கொரிந்தியரிடத்திற்கு வருவதாக, தன்னுடைய முதலாவது நிருபத்தில் ஏற்கெனவே எழுதியிருக்கிறார் (1கொரி 16:5). ஆனால் அவர் கொரிந்து பட்டணம் போகவில்லை. அங்கு போவதற்கு அநேக தடைகள் உண்டாயிற்று. அங்கு போக காலதாமதம் உண்டானபடியினால், பவுல் அவர்களுக்கு இந்த இரண்டாம் நிருபத்தை எழுதுகிறார்.

கொரிந்து சபையில் ஒரு சிலர் பவுலுக்கு துக்கமுண்டாக்குகிறார்கள். அப்படிப்பட்டவனைப்பற்றி பவுல் இந்த நிருபத்தில் குறிப்பிடுகிறார் (2கொரி 2).

கொரிந்தியரைப்பற்றிப் புகழ்ந்து பேசுகிறார் (2கொரி 7). எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யும் காரியத்தில், கொரிந்தியரும் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார் (2கொரி 8,9).

அப்போஸ்தலர் பவுல் பல இடங்களுக்கும் சென்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார் (2கொரி 2). பழைய உடன்படிக்கையின் காலத்திற்கும், புதிய உடன்படிக்கையின் காலத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை பவுல் இங்கு குறிப்பிடுகிறார் (2கொரி 3). பவுலுக்கும் அவருடைய உடன்ஊழியருக்கும் அநேக உபத்திரவங்கள் உண்டாயிற்று (2கொரி 4,5). கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் அவிசுவாசிகளோடு ஐக்கியம் வைத்திருக்கக்கூடாது (2கொரி 6). அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை நியாயப்படுத்துகிறார் (2கொரி 10-12).

1 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தேவனுடைய சித்தத்தினாலே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகயிருக்கிறார் (2கொரி 1:1,2). கிறிஸ்துவினுடைய பாடுகள் தன்னிடத்தில் பெருகியிருப்பதாகவும், கிறிஸ்துவினாலே ஆறுதலும் பெருகியிருப்பதாகவும் பவுல் எழுதுகிறார் (2கொரி 1:3-6). தேவன் மரித்தோரை எழுப்புகிறவராகயிருக்கிறார் (2கொரி 1:7-11). பவுலும் அவருடைய உடன்ஊழியரும் உலகத்திலும், சகவிசுவாசிகள் மத்தியிலும் கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்ததாகச் சாட்சி சொல்லுகிறார் (2கொரி 1:12-14). தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும், அவருடைய வாக்குத்தத்தங்களும் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது (2கொரி 1:15-24).

அப்போஸ்தலனாகிய பவுல் 2கொரி 1 : 1,2

2கொரி 1:1. தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும், கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கும், அகாயா நாடெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் எழுதுகிறதாவது:

2கொரி 1:2. நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தேவனுடைய சித்தத்தினாலே அப்போஸ்தல ஊழியத்தை தம்முடைய ஊழியக்காரருக்குக் கொடுக்கிறார். பவுல் கிறிஸ்துவிடமிருந்து அப்போஸ்தல ஊழியத்தைப் பெற்றிருக்கிறார். இந்த நிருபத்தை எழுதும்போது தீமோத்தேயுவையும் தன்னோடு சேர்த்துக் கொள்கிறார். தீமோத்தேயுவைப்பற்றிச் சொல்லும்போது, அவரை "சகோதரன்" என்று அழைக்கிறார். அப்போஸ்தலர் பவுல் மிகப்பெரிய ஊழியக்காரராகயிருந்தாலும், கொரிந்து சபையாரிடத்தில் தன் உடன்ஊழியக்காரராகிய தீமோத்தேயுவை அறிமுகம் செய்து வைக்கிறார்.

பவுல் எழுதின இந்த நிருபம், கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கும், அகாயா நாடெங்குமுள்ள எல்லா பரிசுத்தவான்களுக்கும் எழுதப்பட்டிருக்கிறது. "அகாயா நாடெங்குமுள்ள எல்லா பரிசுத்தவான்கள்" என்னும் வாக்கியம், அகாயா நாட்டிலும், அதைச் சுற்றிலும் வாசம்பண்ணுகிற எல்லா விசுவாசிகளையும் குறிக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கு வாழ்த்துச் சொல்லும்போது, இரண்டு ஆசீர்வாதங்களைச் சொல்லுகிறார். அவை 1. கிருபை, 2. சமாதானம் என்பனவாகும். இவ்விரண்டு ஆசீர்வாதங்களும் சேர்ந்து கிடைக்கும்போது, அது மிகப்பெரிய ஆசீர்வாதமாகயிருக்கும். உண்மையான கிருபையில்லாமல், நமக்கு நீடித்த சமாதானம் இருக்காது. இவை இரண்டுமே பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் நமக்கு உண்டாகிறது.

ஆறுதலின் தேவன் 2கொரி 1 : 3-6

2கொரி 1:3. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவித மான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.

2கொரி 1:4. தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர் களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்.

2கொரி 1:5. எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.

2கொரி 1:6. ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன்செய்கிறது.

அப்போஸ்தலர் பவுலுக்கும், அவருடைய உடன்ஊழியருக்கும் அநேக பாடுகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. இவையெல்லாவற்றிற்கும் நடுவில் கிறிஸ்து அவர்களுக்கு நன்மை செய்கிறவராகவே இருந்திருக்கிறார். அவர்களிடத்தில் பாடுகள் பெருகும்போது, கிறிஸ்துவினாலே ஆறுதலும் பெருகிற்று. தனக்குண்டான பாடுகளையும், தனக்குக் கிடைத்த கிருபைகளையும் பவுல் இங்கு விரிவாக எடுத்துச் சொல்லி, தேவனைத் துதிக்கிறார்.

கர்த்தருக்கு நன்றிசொல்லும்போது, அவர் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லி, பவுல் கர்த்தருக்குத் தன்னுடைய ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கிற விசுவாசிகளாகிய நமக்கு, தேவன் கிறிஸ்துவின் பிதாவாகவும், தேவனாகவும் இருக்கிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் இயேசுகிறிஸ்து மத்தியஸ்தராகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய ஆவிக்குரிய வித்தாகயிருக்கிறார்.

தேவன் இரக்கங்களின் பிதாவாகயிருக்கிறார். எல்லா இரக்கங்களும் தேவனிடமிருந்தே நமக்கு வருகிறது. மனுஷருக்கு இரக்கம் காண்பிப்பது தேவனுடைய சுபாவம். நமக்கு இரக்கம் காண்பிப்பதில் தேவன் சந்தோஷப்படுகிறார். நம்முடைய தேவன் சகலவிதமான ஆறுதலின் தேவனாகயிருக்கிறார். நம்முடைய ஆறுதல்களெல்லாம் தேவனிடமிருந்தே நமக்கு வருகிறது.

அப்போஸ்தலர் பவுல் தேவனை இவ்வாறு துதிப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவையாவன: 1. பவுலும் அவருடைய உடன்ஊழியரும் தேவனால் ஆறுதலைப் பெற்றிருக்கிறார்கள். 2. தேவன் அவர்களை உபத்திரவத்தில் அகப்படுகிறவர்களுக்கு ஆறுதல் செய்ய திராணியுள்ளவர்களாக ஆக்கியிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுலும், அவருடைய உடன்ஊழியரும் தேவனிடத்திலிருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள். இந்த உலகத்தில் அவர்களுக்கு உபத்திரவமுண்டு. ஆனால் இயேசுகிறிஸ்துவிலோ அவர்களுக்கு சமாதானமுண்டு. அவர்களுடைய பாடுகள் "கிறிஸ்துவினுடைய பாடுகள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (2கொரி 1:5). தன்னுடைய பாடுகளை பவுல் கிறிஸ்துவினுடைய பாடுகள் என்று சொன்னாலும், இயேசுகிறிஸ்துவை ஆறுதல் செய்கிறவர் என்று அங்கீகரிக்கிறார்.

நம்முடைய ஆத்துமாக்களுக்கு தேவன் நன்மை செய்யும்போது, அவருடைய நன்மைகளை நாம் ருசிபார்க்கிறோம். நமக்கு உபத்திரவமுண்டாகும்போது இயேசு கிறிஸ்து நமக்கு ஆறுதலைக் கொடுக்கிறார். நம்முடைய சொந்த அனுபவத்திலிருந்து, கிறிஸ்து நமக்குக் கொடுக்கும் ஆறுதலை, பிறருக்குச் சாட்சியாக அறிவிக்கிறோம். நம்முடைய ஆத்துமாக்களுக்கு கிறிஸ்து செய்த நன்மைகளைப் பிறருக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறோம். மனுஷருக்கு மாத்திரமல்ல, தேவனிடத்திலும் கிறிஸ்து நம்முடைய ஆத்துமாக்களுக்குச் செய்த நன்மைகளை அறிக்கை செய்து அவரை ஸ்தோத்திரம்பண்ணுகிறோம்.

தேவன் அப்போஸ்தலருக்கு ஆறுதலைத் தருகிறார். அவர்கள் உபத்திரவப்படும்போது, தேவனுடைய ஆறுதல் அவர்களுக்குக் கிடைக்கிறது. இந்த ஆறுதலின் பலனை தான் மாத்திரம் அனுபவியாமல், உபத்திரவப்படுகிற மற்ற விசுவாசிகளுக்கும் அப்போஸ்தலர் பவுல் பகிர்ந்து கொடுக்கிறார். உபத்திரவத்தில் அகப்படுகிறவர்களுக்கு பவுல் ஆறுதல் செய்ய திராணியுள்ளவராயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். தனக்கு வரும் சகல உபத்திரவங்களிலும், இயேசுகிறிஸ்து அவருக்கு ஆறுதல் செய்கிறார். தான் பெற்றுக்கொண்ட இந்த ஆறுதலினால், பவுல் உபத்திரவப்படுகிற மற்ற விசுவாசிகளை ஆறுதல் செய்கிறார். அப்போஸ்தலர் பவுல் எப்போதுமே மற்ற விசுவாசிகளுக்கு பிரயோஜனமுண்டாக ஜீவிப்பதில் கவனம் செலுத்துகிறார்.

மரித்தோரை எழுப்புகிற தேவன் 2கொரி 1 : 7-11

2கொரி 1:7. நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல, எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக் குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்.

2கொரி 1:8. ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை, அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.

2கொரி 1:9. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.

2கொரி 1:10. அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்.

2கொரி 1:11. அநேகர்மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும் பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளை உற்சாகப்படுத்துகிறார். ஆசியாவிலே பவுலுக்கும் அவருடைய உடன் ஊழியருக்கும் அநேக உபத்திரவங்கள் உண்டாயிற்று. அவர்கள் தங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தார்கள். தேவன் அவர்களை மரணத்திலிருந்து தப்புவித்தார். இந்த சம்பவத்தை பவுல் கொரிந்தியருக்குச் சாட்சியாகச் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

கொரிந்தியர்கள் பவுலோடுகூட பாடுபடுகிறார்கள். அவரோடுகூட ஆறுதலும் அடைகிறார்கள். பவுல் அவர்களைக் குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவராயிருக்கிறார். ஆசியாவிலே பவுலுக்கு எப்படிப்பட்ட உபத்திரவமுண்டாயிற்று என்று இங்கு விவரிக்கப்படவில்லை. அவர் அநேகந்தரம் மரண ஆபத்தில் ஊழியம் செய்திருக்கிறார். பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, பவுல் பல சமயங்களில் ஊழியம் செய்திருக்கிறார். பவுல் இங்கு குறிப்பிடுவது அப்படிப்பட்ட ஒரு சம்பவமாகயிருக்கலாம். தன்னுடைய பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் பவுலுக்கு உண்டாயிற்று.

மரணம் வருமென்று பவுல் எதிர்பார்த்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் தன்மேல் நம்பிக்கை வைக்கவில்லை. அதற்குப் பதிலாக மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கை வைத்தார். தேவன் பல சமயங்களில் தம்முடைய பிள்ளைகளை இப்படிப்பட்ட உபத்திரவத்தின் வாசலுக்கு அழைத்து வந்து, அவர்களைப் பிழைக்கச் செய்திருக்கிறார். இதன் மூலமாய் தம்முடைய சர்வ வல்லமையை வெளிப்படுத்தியிருக்கிறார். எல்லா சூழ்நிலைகளிலும் நம்முடைய தேவன் நமக்குப் போதுமானவராகயிருக்கிறார், நம்மைப் பாதுகாக்க வல்லவராகயிருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய சுயபலத்தின்மீது நாம் நம்பிக்கை வைக்காமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கை வைக்கவேண்டும்.

மரித்தோரை எழுப்புகிற தேவனால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமில்லை. எல்லா வேளைகளிலும் தேவனை நம்புகிறதற்கு அவர் பாத்திரராகயிருக்கிறார். அவரே நம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரர். பவுலின் நம்பிக்கை வீணாய்ப்போகவில்லை. அவருடைய பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் அவருக்கு உண்டாயிற்று. இந்தச் சூழ்நிலையிலும் அவர் தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தார். தேவன் அவரை தப்புவித்தார். தன்னை தப்புவித்த தேவன் இப்பொழுதும் தப்புவிக்கிறார் என்றும், இன்னும் தப்புவிப்பார் என்றும் பவுல் தேவனையே நம்பியிருக்கிறார்.

பவுலோடுகூட அவருடைய உடன்ஊழியரும் தேவனையே நம்பியிருக்கிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு பல அனுபவங்கள் நிறைந்திருக்கும். இவையெல்லாம் நம்முடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வர்த்திக்கச் செய்யும். இதுவரையிலும் நம்மை தப்புவித்த தேவன், இனிமேலும் நம்மை தப்புவிப்பார் என்று நம்பவேண்டும். நமக்கு இனிமேல் உபத்திரவம் வந்தால், தேவன் நம்மை தப்புவிப்பாரோ அல்லது தப்புவிக்கமாட்டாரோ என்னும் சந்தேகம் நமக்கு வந்துவிட்டால், நம்முடைய துன்பமும் வேதனையும் அதிகரிக்கும்.

உபத்திரவத்திலிருந்து தேவன் தன்னையும், தன்னுடைய உடன்ஊழியரையும் தப்புவித்தார் என்று பவுல் கொரிந்தியருக்குச் சொல்லுகிறார். இந்தத் தயவு அநேகர் மூலமாய் தங்களுக்கு உண்டாயிற்று என்பதை அங்கீகரிக்கிறார். அவர்களுக்காக அநேகர் ஜெபிக்கிறார்கள். அநேகருடைய ஜெபங்களைத் தேவன் கேட்டு ஊழியக்காரர்களை உபத்திரவங்களிலிருந்து தப்புவிக்க செய்திருக்கிறார். இப்போதும் தங்கள் நிமித்தம் அநேகர் தேவனை ஸ்தோத்திரம் பண்ணவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். கொரிந்தியரும் ஜெபத்தினால் தங்களுக்கு உதவிசெய்யுமாறு அவர்களை வேண்டிக்கொள்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய ஜெபத்தின் மூலமாய், ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டும். தேவன் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார் என்று விசுவாசிக்கவேண்டும். தேவன் கொடுக்கிற நன்மையையும், கிருபையையும், இரக்கத்தையும், சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நாம் பெற்றுக்கொள்வோம் என்றும், ஜெபித்த நாமெல்லோரும் ஜெபத்திற்குப் பதில் கொடுத்த தேவனைத் துதிப்போம் என்றும், நமக்குள் ஒரு நம்பிக்கை இருக்கவேண்டும்.

திவ்விய உண்மை
2கொரி 1 : 12-14

2கொரி 1:12. மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ் சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது.

2கொரி 1:13. ஏனென்றால், நீங்கள் வாசித்தும் ஒத்துக் கொண்டுமிருக்கிற காரியங்களையே யன்றி, வேறொன்றையும் நாங்கள் உங்களுக்கு எழுதவில்லை; முடிவுபரியந்தமும் அப்படியே ஒத்துக் கொள்வீர்களென்று நம்பியிருக்கிறேன்.

2கொரி 1:14. கர்த்தராகிய இயேசுவினுடைய நாளிலே நீங்கள் எங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்பது போல, நாங்களும் உங்களுக்குப் புகழ்ச்சியாயிருக்கிறதை ஒருவாறு ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய வார்த்தையிலும், எழுத்திலும் உண்மையிருப்பத்தைச் சாட்சியாகச் சொல்லுகிறார். அவர் மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடக்கவில்லை. உலகத்திலும், விசுவாசிகளிடத்திலும், தேவனுடைய கிருபையினாலே கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தார். இதற்கு தன்னுடைய மனச்சாட்சியையே சாட்சியாகச் சொல்லுகிறார். தான் சொன்னபிரகாரம் பவுல் நடந்ததற்கு, தன்னுடைய மனது தனக்குச் சொல்லும் சாட்சியே, தனக்குப் புகழ்ச்சியாயிருக்கிறது என்று அறிக்கை செய்கிறார்.

மனச்சாட்சியின் சத்தம் தேவனுடைய சத்தமாயிருக்கிறது. தேவனுடைய பிரதிநிதியாக நம்முடைய மனச்சாட்சி கிரியை செய்கிறது. அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய மனது சொல்லுகிற சாட்சியில் சந்தோஷப்படுகிறார். நம்முடைய மனச்சாட்சி நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா வேளைகளிலும் நம்முடைய மனச்சாட்சி நம்மோடு பேசும். அது சொல்லும் சாட்சி நமக்குச் சந்தோஷமாயும் புகழ்ச்சியாயும் இருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுலின் மனது மூன்று காரியங்களை சாட்சியாகச் சொல்லுகிறது. அவையாவன: 1. பவுலின் நடத்தை 2. நடத்தையில் உண்மை 3. நடத்தையில் கபடமில்லாமை.

பவுல் மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடக்கவில்லை. கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தார். பவுலின் மனது அவரோடு பேசுகிறது. அவருடைய மனச்சாட்சி அவரை நியாந்தீர்க்கிறது. தேவனுடைய கிருபையினால் அவர் கபடமில்லாமல் திவ்விய உண்மையோடு உலகத்தார் மத்தியிலும், விசுவாசிகள் மத்தியிலும் ஜீவிக்கிறார். தன்னுடைய சுத்தமனச்சாட்சிக்கு தேவனுடைய கிருபையே காரணமென்று சாட்சியாக அறிவிக்கிறார்.

பவுலின் வார்த்தையில் உண்மையும், எளிமையும், தேவபக்தியும் இருக்கிறது. பவுல் ஒளிவு மறைவாக எதையும் சொல்வதில்லை. எதையும் வெளிப்படையாகச் சொல்லக்கூடியவர். ஒருவரிடத்தில் ஒருவிதமாகவும், வேறொருவரிடத்தில் வேறொரு விதமாகவும் பவுல் பேசமாட்டார். பவுலின் வார்த்தையில் முரண்பாடு இருக்காது. கபடமில்லாமல், திவ்விய உண்மையோடு பேசக்கூடியவர். தன்னுடைய வாயின் வார்த்தையின் பிரகாரம் ஜீவிக்கிறவர். பேச்சு ஒன்றும், நடத்தை ஒன்றுமாக அவரிடத்தில் வித்தியாசம் இருக்காது.

பவுலின் ஜீவியத்தை மாம்சத்திற்கேற்ற ஞானம் ஆளுகை செய்யவில்லை. தேவனுடைய கிருபையே அவரை ஆளுகை செய்கிறது. ஆகையினால் உலகத்திலேயும், விசுவாசிகள் மத்தியிலேயும் அவரால் கபடமில்லாமல், திவ்விய உண்மையோடே ஜீவிக்க முடிகிறது.

பவுல் தன்னைப்பற்றியும், தன்னுடைய உடன்ஊழியரைப்பற்றியும் கொரிந்தியருக்குச் சொல்லும்போது, அவர்களும் தன்னுடைய வார்த்தைகளை அங்கீகரிப்பார்களென்று எதிர்பார்க்கிறார். அவர்கள் பவுலிடத்தில் கண்ணிய குறைவான காரியம் எதையும் இதுவரையிலும் காணவில்லை. பவுல் எழுதிய காரியங்களை அவர்கள் வாசித்து ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முடிவுபரியந்தம் அதை அப்படியே ஒத்துக்கொள்வார்களென்று பவுல் நம்புகிறார். இதன் மூலமாய் அவர்கள் ஒருவருக்கொருவர் புகழ்ச்சியாயும், ஆசீர்வாதமாயும் இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவின் நாளிலே கொரிந்தியர்கள் தனக்கும் தன்னுடைய உடன்ஊழியருக்கும் புகழ்ச்சியாயிருப்பார்கள் என்பதை பவுல் எதிர்பார்க்கிறார். தாங்களும் அவர்களுக்கு புகழ்ச்சியாயிருப்பதை அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறார்.

இயேசுகிறிஸ்து ஆம் என்றே இருக்கிறார்
2கொரி 1 : 15-24

2கொரி 1:15. நான் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறபடியினால், உங்களுக்கு இரண்டாந்தரமும் பிரயோஜனமுண்டாகும்படி, முதலாவது உங்களிடத்தில் வரவும்,

2கொரி 1:16. பின்பு உங்கள் ஊர்வழியாய் மக்கெதோனியா நாட்டுக்குப் போகவும், மக்கெதோனியாவை விட்டு மறுபடியும் உங்களிடத்திற்கு வரவும், உங்களால் யூதேயா தேசத்துக்கு வழிவிட்டனுப்பப்படவும் யோசனையாயிருந்தேன்.

2கொரி 1:17. இப்படி நான் யோசித்தது வீணாக யோசித்தேனோ? அல்லது ஆம் ஆம் என்கிறதும், அல்ல, அல்ல என்கிறதும் என்னிடத்திலே இருக்கத்தக்கதாக, நான் யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படி யோசிக்கிறேனோ?

2கொரி 1:18. நாங்கள் உங்களுக்குச் சொன்ன வார்த்தை ஆம் அல்ல என்று இருக்கவில்லை; அதற்கு உண்மையுள்ள தேவனே சாட்சி;

2கொரி 1:19. என்னாலும், சில்வானுவினாலும், தீமோத்தேயுவினாலும், உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார்.

2கொரி 1:20. எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.

2கொரி 1:21. உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே.

2கொரி 1:22. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்.

2கொரி 1:23. மேலும் நான் உங்களைத் தப்பவிடும்படிக்கே இதுவரைக்கும் கொரிந்து பட்டணத்திற்கு வராதிருக்கிறேனென்று, என் ஆத்துமாவின்பேரில் தேவனையே சாட்சியாகக் கோருகிறேன்.

2கொரி 1:24. உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே.

அப்போஸ்தலர் பவுல் மக்கெதோனியா நாட்டிற்குப் போகவும், அங்கிருந்து கொரிந்துவுக்குப்போய் அதன்பின்பு யூதேயா தேசத்திற்குப் போகவும் யோசனையாயிருக்கிறார். அவருடைய யோசனை வீணான யோசனையல்ல. மாம்சத்தின்படியும் அவர் யோசிக்கவில்லை. அவருடைய யோசனையில் குழப்பம் எதுவுமில்லை. தன்னுடைய மெய்யான யோசனைக்கு உண்மையுள்ள தேவனே சாட்சி என்று பவுல் அறிக்கை செய்கிறார்.

கொரிந்து சபைக்குப்போய் அவர்களுக்கு பிரயோஜனமுண்டாக்க வேண்டுமென்பது பவுலின் விருப்பம். தன்னுடைய யோசனையில் அவர் உறுதியாகயிருக்கிறார். அவர்களுக்கு இரண்டாந்தரமும் பிரயோஜனமுண்டாக வேண்டுமென்று விரும்புகிறார். பவுல் கொரிந்து சபைக்கு வந்தால், அங்குள்ள விசுவாசிகளுக்கு அவருடைய வருகை ஆசீர்வாதமாகயிருக்கும். ஊழியக்காரர்கள் வரும்போது விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய போஜனம் கிடைக்கும்.

ஆனால் கொரிந்து பட்டணத்திற்கு பவுலால் போகமுடியவில்லை. அங்கு போக அவருக்கு ஏற்ற சூழ்நிலை உண்டாகவில்லை. தன்னுடைய யோசனையில் குழப்பம் எதுவுமில்லை என்பதை பவுல் தெளிவுபடுத்துகிறார். பவுல் தெளிவாகச் சிந்திக்கக்கூடியவர். உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் சொல்லக்கூடியவர். அவர் ஆம் என்பதை இல்லையென்றோ, இல்லையென்பதை ஆம் என்றோ சொல்லமாட்டார். அவர் ஒருபோதும் வீணாக யோசிக்கமாட்டார். கொரிந்து சபைக்குப்போகவேண்டுமென்பது பவுலின் மாம்சப்பிரகாரமான யோசனையுமல்ல.

ஏதோ ஒரு சில தவிர்க்க முடியாத காரணத்தினால் பவுல் கொரிந்து பட்டணத்திற்குப் போகவில்லை. தன்னுடைய திட்டத்தை தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் மாற்றியமைத்து, கொரிந்து சபைக்குப் போகாமலிருக்கிறார்.

பவுல் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாகவும் உறுதியாகவும் போதிக்கிறவர். அவருடைய சுவிசேஷத்தில் குழப்பம் இருக்காது. அவர் ஒருபோதும் நிச்சயமில்லாமல் பேசமாட்டார். தேவனைப்பற்றி அவர் சொல்லும் சத்தியம், "ஆம் அல்ல" என்று தீர்மானம்பண்ண முடியாதபடி குழப்பமாயிருக்காது. கிறிஸ்துவின் சுவிசேஷம் ஆம் என்றே இருக்கிறது. பவுலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உறுதியோடும் நிச்சயத்தோடும் பிரசங்கம்பண்ணுகிறார்.

தேவன் உண்மையுள்ளவர். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் உண்மையுள்ளவர். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார். தேவனிடத்தில் குழப்பமான சத்தியம் எதுவுமில்லை. எல்லா சத்தியமும் தெளிவாகவும், மாறாததாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தையில் பிழை எதுவுமில்லை.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது (2கொரி 1:10). கிறிஸ்துவின் சுவிசேஷம் மாறாத சத்தியம். சுவிசேஷத்தின் எல்லா பகுதியும் இசைவாய் இணைக்கப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தில் முரண்பாடுகள் இல்லை. எல்லாமே இயேசுகிறிஸ்துவில் ஆம் என்று இருக்கிறது. சுவிசேஷத்தின் உடன்படிக்கை மாறாதது. கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களும் மாறாதது.

தீயவர்கள் தவறுசெய்கிறார்கள். நல்லவர்கள் நன்மை செய்ய முயற்சிபண்ணுகிறார்கள். தேவனோ உண்மையுள்ளவராக யிருக்கிறார். அவருடைய வார்த்தையும், கிரியையும் உண்மையுள்ளதாகவே இருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் உண்மையுள்ளவை. அவை இயேசு கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் ஆமென் என்று இருக்கிறது. இயேசுகிறிஸ்துவே தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு உண்மையுள்ள சாட்சியாக இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களை உறுதிபண்ணுகிறார். தேவன் தம்முடைய பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்துகிறார். நம்மை அபிஷேகம்பண்ணுகிறார். நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தைக் கொடுக்கிறார். வாக்குத்தத்தம் நிறைவேறும் என்பதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு அச்சாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார். வாக்குத் தத்தங்களெல்லாம் நிறைவேறும்போது தேவனுக்கு மகிமையுண்டாகும்.

தான் கொரிந்து பட்டணத்திற்கு இதுவரைக்கும் வராமலிருப்பதற்கான காரணத்தையும் பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். கொரிந்து சபையின் விசுவாசிகளைத் தப்பவிடும்படிக்காகவே, பவுல் இதுவரைக்கும் கொரிந்து பட்டணத்திற்கு வராதிருக்கிறார். அவர்கள் மத்தியில் குழப்பமிருக்கிறது. மார்க்கபேதமிருக்கிறது. பவுல் அங்கு வந்தால் அவர்களைக் கடிந்துகொள்வார். மென்மையான வார்த்தைகளைப் பேசமாட்டார். எச்சரிப்பின் வார்த்தையைச் சொல்லுவார். கொரிந்து சபையாரைத் தன்னுடைய எச்சரிப்பின் சத்தத்திலிருந்து தப்பவிடும்படிக்கே, பவுல் இதுவரைக்கும் கொரிந்து பட்டணத்திற்கு வராதிருக்கிறார். கொரிந்து பட்டணத்திற்கு பவுல் வராமலிருப்பதற்கு இதுவே உண்மையான காரணம். தன்னுடைய வார்த்தைக்கு தன் ஆத்துமாவின் பேரில் தேவனையே சாட்சியாக வைக்கிறார்.

அவர்களுடைய விசுவாசத்திற்கு பவுல் அதிகாரியாயிருக்க விரும்பவில்லை. அவர்களுடைய விசுவாசத்தை அடக்கி ஆளுகை செய்யும் எண்ணம் பவுலுக்கு இல்லை. ஊழியக்காரர்கள் விசுவாசிகளுடைய விசுவாசத்திற்கு அதிகாரிகளாயிருக்கக் கூடாது. அவர்களுடைய சந்தோஷத்திற்கு சகாயராயிருக்கவேண்டும். அவர்களுடைய சந்தோஷம் விருத்தியடைவதற்கு உதவிபுரியவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் எதை விசுவாசிக்கவேண்டும் என்று பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். பவுல், அப்பொல்லோ ஆகியோர் கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே, விசுவாசிகள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரராகவே இருக்கிறார்கள் (1கொரி 3:5). அவர்கள் கொரிந்து சபையின் விசுவாசிகளுடைய சந்தோஷத்திற்கு சகாயராயிருக்கிறார்கள். சில்வானுவும், தீமோத்தேயுவும் கொரிந்து சபையாரிடத்தில் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவையே பிரசங்கிக்கிறார்கள். இவர்களும் கொரிந்தியரின் சந்தோஷத்திற்கு சகாயராய் மாத்திரமே இருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் விசுவாசத்தினாலே நிலை நிற்கிறோம். விசுவாசத்தினாலேயே நமக்குப் பெலன் உண்டாயிருக்கிறது. நம்முடைய ஆறுதலும் சந்தோஷமும் விசுவாசத்திலிருந்தே வருகிறது. விசுவாசமில்லையென்றால் நம்மால் கிறிஸ்துவுக்குள் நிலை நிற்கமுடியாது. நமக்கு விசுவாசமில்லையென்றால் நமக்கு ஆறுதலுமில்லை. சந்தோஷமுமில்லை.

2 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தான் கொரிந்து பட்டணத்திற்கு வராமலிருப்தற்கான காரணங்களைச் சொல்லுகிறார் (2கொரி 2:1-4). தனக்கு துக்கமுண்டாக்கினவனைப்பற்றி பவுல் எழுதுகிறார் (2கொரி 2:5-11). கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு தான் பட்ட பிரயாசங்களையும், அதன் பலன்களையும் பவுல் இங்கு குறிப்பிடுகிறார் (2கொரி 2:12-17).

துக்கத்துடனே வராதபடிக்கு 2கொரி 2 : 1-4

2கொரி 2:1. நான் துக்கத்துடனே உங்களிடத்தில் மறுபடியும் வராதபடிக்கு எனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டேன்.

2கொரி 2:2. நான் உங்களைத் துக்கப்படுத்தினால், என்னாலே துக்கமடைந்தவனேயல்லாமல், எவன் என்னைச் சந்தோஷப்படுத்துவான்?

2கொரி 2:3. என்னுடைய சந்தோஷம் உங்களெல்லாருக்கும் சந்தோஷமாயிருக்குமென்று, நான் உங்களெல்லாரையும் பற்றி நம்பிக்கையுள்ளவனாயிருந்து, நான் வரும்போது, என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டியவர்களால் நான் துக்கமடையாதபடிக்கு, அதை உங்களுக்கு எழுதினேன்.

2கொரி 2:4. அன்றியும், நீங்கள் துக்கப்படும்படிக்கு எழுதாமல், உங்கள்மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும்படிக்கே, மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய் அதிகக் கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன்.

தான் கொரிந்து பட்டணத்திற்கு இதுவரைக்கும் வராதிருப்பதற்கான காரணத்தைப் பவுல் சொல்லுகிறார். பவுல் அவர்களைத் துக்கப்படுத்த விரும்பவில்லை. அவர்களால் தான் துக்கப்படவும் விரும்பவில்லை. பவுல் அவர்களை துக்கப்படுத்தினால், அவர் தன்னைத்தானே துக்கப்படுத்தியதுபோல காணப்படுவார். ஏனெனில் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளே பவுலைச் சந்தோஷப்படுத்துகிறார்கள். அவர்கள் துக்கமடைந்தவர்களாயிருந்தால், அவர்களால் பவுலைச் சந்தோஷப்படுத்த முடியாது.

கொரிந்தியருக்கு எழுதிய முதலாவது நிருபத்தை தான் எழுதியதற்கான காரணத்தையும் பவுல் இங்கு சொல்லுகிறார். கொரிந்து சபையில் பவுலுக்குத் துக்கமுண்டாக்கினவன் ஒருவன் இருக்கிறான். தன் மூலமாக கொரிந்து சபையாருக்கு துக்கமுண்டாகக்கூடாது என்று பவுல் விரும்புகிறார். இந்த நிருபத்தை எழுதும்போது பவுலின் இருதயத்தில் மிகுந்த வியாகுலம் மனஇடுக்கமும் உண்டாயிருக்கிறது. பவுல் அதிகக் கண்ணீரோடே இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதுகிறார்.

துக்கமுண்டாக்கினவன் 2கொரி 2 : 5-11

2கொரி 2:5. துக்கமுண்டாக்கினவன் எனக்குமாத்திரமல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்க முண்டாக்கினான்; நான் உங்கள் எல்லார்மேலும் அதிக பாரஞ்சுமத்தாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.

2கொரி 2:6. அப்படிப்பட்டவனுக்கு அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும்.

2கொரி 2:7. ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல்செய்யவேண்டும்.

2கொரி 2:8. அந்தப்படி, உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

2கொரி 2:9. நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்தறியும்படி இப்படி எழுதினேன்.

2கொரி 2:10. எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள்நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்.

2கொரி 2:11. சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.

அப்போஸ்தலர் பவுல் தனக்கு துக்கமுண்டாக்கினவனைப்பற்றி இங்கு சொல்லுகிறார். அவன் பவுலுக்கு மாத்திரமல்ல, கொரிந்து சபையாரெல்லாருக்கும் துக்க முண்டாக்கியிருக்கிறான். அவனுக்கு அநேகரால் தண்டனை கிடைத்திருக்கிறது. இந்தத் தண்டனையே அவனுக்குப் போதுமென்று பவுல் சொல்லுகிறார். தனக்குத் துக்கமுண்டாக்கினவனுக்கு எப்படிப்பட்ட தண்டனை கிடைக்கவேண்டும் என்று பவுல் எதிர்பார்த்தாரோ, அந்தத் தண்டனை அவனுக்குக் கிடைத்திருக்கிறது. இனிமேல் அவனை மேலும் துக்கப்படுத்தக்கூடாது.

அவனை இன்னும் அதிகமாய்த் துக்கப்படுத்தினால், அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோய்விடுவான். ஆகையினால் கொரிந்து சபையார் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அவனை மறுபடியும் தங்கள் சபையின் ஐக்கியத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு பவுல் எழுதுகிறார்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் பவுலுக்கு துக்கமுண்டாக்கினவன்மீது தங்கள் அன்பை காண்பிக்கவேண்டும். அவர்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யும்போதுதான் அவர்களுடைய அன்பு வெளிப்படும். அவன்மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பு உறுதி செய்யப்படும். பாவம் செய்கிறவர்களை நேசித்து, அவர்கள்மீது அன்புகூர்ந்து, அவர்களைக் கடிந்துகொள்ளவேண்டும். அதே சமயத்தில் அவர்களுடைய பாவத்தின் நிமித்தம் அவர்களையும், அவர்களுடைய பாவங்களையும் வெறுக்கவேண்டும்.

பவுலுக்குத் துக்கமுண்டாக்கினவன் தேவனுக்கு விரோதமாகவும், தேவனுடைய ஊழியக்காரருக்கு விரோதமாகவும் பாவம் செய்திருக்கிறான். சபையார் அவனை வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள். இதன் மூலமாய் அவன்மீது அதிகப் பாரத்தைச்சுமத்தியிருக்கிறார்கள். இது அவனுக்கு ஒரு தண்டனையைப்போல் வந்திருக்கிறது. இதனால் அதிக துக்கப்படுகிறான். அவன் தன் துக்கத்தில் அமிழ்ந்துபோய்விடக்கூடாது என்று பவுல் அவன்மீது கரிசனையோடிருக்கிறார்.

நம்முடைய துக்கம் அதிகரிக்கும்போது அது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தைப் பாதிக்கும். நம்முடைய பாவத்தைப்பற்றிய துக்கம் அளவுக்கு அதிகமாகயிருந்தாலும் அதுவும் நம்மைச் சஞ்சலப்படுத்தும். நாம் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோய்விடுவோம். பாவம் செய்தவர்கள் துக்கத்தில் அமிழ்ந்துபோய்விடக்கூடாது. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனம்வருந்தி, தேவனிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் திருந்தவேண்டும். மறுபடியும் கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். பாவத்தில் அமிழ்ந்துபோயிருக்கிற அவர்களுடைய ஜீவியம், இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தத்தினால் புதுப்பிக்கப்படவேண்டும்.

நமக்கு விரோதமாக தீங்குசெய்தவர்களை மன்னிக்க வேண்டுமென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உபதேசம் செய்திருக்கிறார். நம்மைச் சபிக்கிறவர்களையும் நாம் ஆசீர்வதிக்கவேண்டும். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களும் இதே சத்தியத்தையே பிரசங்கம்பண்ணுகிறார்கள். நமக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களை நாம் மன்னிக்கும்போது, கிறிஸ்துவின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிறோம்.

தனக்குத் துக்கமுண்டாக்கினவனை மன்னித்து அவனுக்கு ஆறுதல் செய்யவேண்டுமென்று பவுல் எழுதுகிறார். கொரிந்து சபையார் பவுலின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவனை மன்னித்து அவனுக்கு ஆறுதல் செய்யும்போது, அவர்கள் பவுலின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிகிறார்கள். கொரிந்து சபையார் தன்னுடைய உபதேசங்களெல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந் திருக்கிறார்களா என்று அவர்களைச் சோதித்தறியும்படியாக, பவுல் இதை எழுதுகிறார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அன்பு நிறைந்திருக்கிறது. சுவிசேஷத்தின் மூலமாய் நாம் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்கிறோம். உண்மையாய் மனந்திரும்பிய பாவிகளெல்லோரும் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளலாம். இதற்குத் தடை எதுவுமில்லை. யாரும் இதற்குத் தடையாகவும் இருக்கக்கூடாது. தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பியவர்களை இயேசுகிறிஸ்து மன்னித்து, அவர்களுடைய ஆத்துமாக்களை இரட்சிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் கிறிஸ்துவின் சிந்தையும், சுபாவமும் காணப்படவேண்டும். நாமும் பாவிகளை மன்னித்து அவர்களுக்கு ஆறுதல் செய்யவேண்டும்.

மனந்திரும்பிய பாவிகளை மன்னிக்காமல், அவர்கள்மீது அதிகமான பாரத்தைச் சுமத்தினால், அவர்கள் அதிக துக்கத்திலே அமிழ்ந்துபோவார்கள். அவர்கள் துக்கத்தில் அமிழ்ந்துபோவதை சாத்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வான். அவர்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட முடியாதவாறு, அவற்றைக் கெடுத்துப் போடுவான்.

மனந்திரும்பியவர்கள் மன்னிக்கப்பட வேண்டும். விசுவாசிகளுடைய ஐக்கியத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். மனந் திரும்பியவர்களை மன்னிக்காவிட்டால், அவர்களுடைய துக்கம் அதிகரிக்கும். அவர்கள்மீது அதிக பாரம் சுமத்தப்படும். அவர்கள் அதிக துக்கத்திலிருப்பார்கள். அதிக கவலையும், அதிக துக்கமும் அவர்களுடைய ஆத்துமாவில் நிரம்பியிருக்கும்போது, சாத்தான் அவர்களுடைய ஆத்துமாவுக்குள் பிரவேசித்து, அவர்களை ஆளுகை செய்வான். இது சாத்தானுடைய தந்திரம். அவனுடைய தந்திரங்கள் பவுலுக்குத் தெரிந்திருக்கிறது. நாம் சாத்தானால் மோசம்போகாதிருக்க வேண்டும். அவனுடைய தந்திரங்களைத் தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

சாத்தான் கிறிஸ்துவுக்கும், அவருடைய ஊழியக்காரர்களுக்கும் விரோதமாக எப்போதும் கிரியை செய்து கொண்டிருக்கிறான். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு தடையாகயிருக்கிறான். இது சாத்தானுடைய வேலை. அவனுடைய வேலையை கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் பகிர்ந்து கொள்ளக்கூடாது. ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் தடையாகயிருக்கக்கூடாது.

பாவிகள் தங்கள் பாவங்களை உணர்ந்து, மனந்திரும்பி, தேவனிடத்தில் வரும்போது அவர் அவர்களை மன்னிக்கிறார். கர்த்தரைப்போலவே நாமும் இவர்களை மன்னிக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தர் மன்னித்தாலும், நான் மன்னிக்க மாட்டேனென்று பிடிவாதமாயிருக்கக் கூடாது. இந்தப் பிடிவாதகுணம் சாத்தானுடைய தந்திரம்.

ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படக்கூடாதபடிக்கு, நம்முடைய பிடிவாதகுணத்தை, சாத்தான் தனக்குச் சாதகமாக, தந்திரமாகப் பயன்படுத்துவான். பவுல் சாத்தானுடைய தந்திரத்தை அறிந்தவராக, தனக்கு துக்கமுண்டாக்கினவனை மன்னித்து, அவனுக்கு ஆறுதல் செய்ய வேண்டுமென்று எழுதுகிறார்.

விசுவாசிகள் யாருக்கு மன்னிக்கிறார்களோ அவர்களுக்கு தானும் மன்னிப்பதாகப் பவுல் சொல்லுகிறார். அதை அவர்களினிமித்தம், கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே பவுல் மன்னித்துவிடுகிறார். இயேசுகிறிஸ்து பாவிகளை மன்னிக்கும்போது, அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவற்றை மறந்துவிடுகிறார். கிறிஸ்துவின் சந்நிதானத்தில் நாமும் சிலருடைய பாவங்களை மன்னிக்கும்போது நம்முடைய மன்னிக்கும் சுபாவம் மெய்யானதாக இருக்கவேண்டும். நாம் மன்னித்து, அதை மறந்துவிடவேண்டும். நாம் மன்னித்தவர்களுக்கு ஆறுதல் செய்யவேண்டும்.

கிறிஸ்துவின் சுவிசேஷம்
2கொரி 2 : 12-17

2கொரி 2:12. மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி, துரோவாபட்டணத்தில் வந்தபோது, கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில்,

2கொரி 2:13. நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே, என் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது. ஆதலால் நான் அவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டு, மக்கெதோனியா நாட்டுக்குப் புறப்பட்டுப்போனேன்.

2கொரி 2:14. கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

2கொரி 2:15. இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்.

2கொரி 2:16. கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக் கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?

2கொரி 2:17. அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்.

பவுல் தன்னுடைய பிரயாணத்தைப்பற்றியும், சுவிசேஷ ஊழியத்தைப்பற்றியும் கொரிந்தியருக்கு எழுதுகிறார். பவுலின் ஊழியத்திலே கர்த்தராலே அவருக்கு கதவு திறக்கப்பட்டது. ஊழியம் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணினார். ஆனாலும் பவுல் ஊழியம் செய்தபோது, அவருடைய ஆவிக்கு அமைதல் இல்லாதிருந்தது (2கொரி 2:13). துரோவா பட்டணத்திலே பவுலுக்கு ஊழியத்தின் கதவு திறக்கப்பட்டிருந்தது. ஆனால் அங்கு சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே தன்னுடைய ஆவிக்கு அமைதல் இல்லாதிருந்ததாக பவுல் எழுதுகிறார்.

அதன்பின்பு தீத்து அங்கு வந்ததாக பவுல் எழுதுகிறார். "மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன்; உங்களைக்குறித்து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகலஉபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன். எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள்சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன. ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார். அவன் வந்ததினாலே மாத்திரமல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், என்னைப்பற்றி உங்களுக்கு உண்டான பக்திவைராக்கியத்தையும் அவன் கண்டு, உங்களால் அடைந்த ஆறுதலைத் தெரியப்படுத்தினதினாலும், நானும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்" (2கொரி 7:4-7).

பவுல் கர்த்தருடைய ஊழியத்தை ஓய்வில்லாமல், சரீரத்தில் சோர்வடையாமல் செய்கிறார். ஆனாலும் ஒரு சில காரணங்களினால் அவருடைய ஆவியில், சில சமயங்களில் அமைதல் இல்லாதிருக்கிறது. கர்த்தர் தனக்குக் கொடுத்த ஊழியத்தை பவுல் உண்மையாயும், பயபக்தியாயும், நேர்த்தியாயும் செய்கிறார். பிலிப்பு பட்டணத்திலிருந்து துரோவா பட்டணத்திற்கு கப்பலில் ஏறி பிரயாணம் செய்கிறார் (அப் 20:6). அதன்பின்பு அவர் அங்கிருந்து மக்கெதோனியா தேசத்திற்குப் போகிறார். தான் திட்டமிட்டபடி கர்த்தரின் ஊழியத்தைச் செய்வதற்கு, பவுலுக்கு ஒரு சில தடைகள் உண்டாயிற்று. ஆனாலும் பவுல் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதில் ஒருபோதும் சோர்ந்துபோகவில்லை. சோர்வில்லாமல் உற்சாகமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஊழியம் செய்கிறார்.

பவுலின் ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். தேவனே கிறிஸ்துவுக்குள் அவரை எப்பொழுதும் வெற்றி சிறக்கப்பண்ணுகிறார். கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை தேவனே வெளிப்படுத்துகிறார். இதை பவுலின் மூலமாக வெளிப்படுத்துகிறார். பவுல் எங்கெல்லாம் ஊழியம் செய்கிறாரோ, அங்கெல்லாம் ஜனங்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையைப் பெற்றுக்கொள்கிறார்கள். பவுல் இதைத் தன்னுடைய சுயபெருமைக்காகப் பேசவில்லை. தேவன் தன்னைத் தம்முடைய மகிமையான ஊழியத்தில் பயன்படுத்துவதற்காக, அவரை ஸ்தோத்திரித்து இதை எழுதுகிறார்.

நம்முடைய சுயபலத்தில் நாம் பலவீனராகயிருக்கிறோம். நம்முடைய சுயமுயற்சியினால் நமக்கு சந்தோஷமோ வெற்றியோ உண்டாகாது. ஆனால் கிறிஸ்துவில் நாம் பெலவான்களாகயிருக்கிறோம். கிறிஸ்துவில் நமக்கு சந்தோஷமும் வெற்றியும் உண்டாயிருக்கிறது.

பவுல் ஏராளமான ஜனங்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார். சுவிசேஷத்தைக் கேட்டவர்களில் சிலர் இரட்சிக்கப்படுகிறார்கள். வேறு சிலர் இரட்சிக்கப்படவில்லை. சுவிசேஷம் ஒன்றுதான். ஆனால் ஆத்துமாக்களில் அது ஏற்படுத்துகிற விளைவு வித்தியாசமாகயிருக்கிறது. பவுலோ கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையோடு அறிவிக்கிறார். ஒரு சிலர் இரட்சிக்கப்படாமல் போனாலும், பவுலோ தன் இருதயத்தில் ஆறுதலடைந்திருக்கிறார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் ஒரு சிலர் இரட்சிக்கப்படுகிறார்கள். வேறு சிலரோ அழிந்துபோகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷமானது கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரணவாசனையாயிருக்கிறது. மரணவாசனையை யாரும் விரும்புவதில்லை. கெட்டுப்போகிறவர்கள் தங்கள் மனக்கண்களை மூடிக்கொண்டு, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள். இதனால் அவர்களுடைய ஆத்துமா அழிந்துபோகிறது. அவர்கள் ஆவிக்குரிய மரணத்திற்குள் பிரவேசிக்கிறார்கள்.

இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே கிறிஸ்துவின் சுவிசேஷமானது ஜீவனுக் கேதுவான ஜீவவாசனையாகயிருக்கிறது. தாழ்மையுள்ள ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விரும்பி கேட்டு, அதைத் தங்கள் இருதயத்திற்குள் ஏற்றுக்கொள்ளும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் இவர்களுடைய ஆத்துமாக்களுக்கு ஆதாயமுண்டாகிறது. சுவிசேஷத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார்கள். இவர்களுக்கு சுவிசேஷமானது ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகயிருக்கிறது. இதனால் புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்தப் புதிய ஜீவன் அவர்களுக்கு நித்திய ஜீவனாகயிருக்கிறது. பாவத்தில் மரித்துப்போனவர்கள், இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டு, புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த ஜீவன் அவர்களுக்கு நித்திய ஜீவனாகயிருக்கும்.

கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் மகத்துவமானது. இது மிகவும் கனமான ஊழியம். இந்த ஊழியத்தை நடப்பிக்கிறதற்கு யாரும் தகுதியுள்ளவர்களல்ல. ஊழியம் பெரிது. நம்முடைய சுய பலமோ சிறிது. தம்முடைய மகத்துவமான ஊழியத்தைச் செய்வதற்கு தேவனே நம்மைத் தகுதிப்படுத்துகிறார். அவரே நமக்குப் போதுமானவராகயிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் இரட்சிக்கப்பட்டாலும், இரட்சிக்கப்படாமல் போனாலும், நாம் தேவனுக்கு கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கவேண்டும். நாம் செய்கிற ஊழியத்தின் வெற்றியினால் தேவன் நம்மை அங்கீகரிப்பதில்லை. தேவன் நம்மை அங்கீகரிப்பதற்கு, நம்முடைய திறமைகளையோ, தாலந்துகளையோ, பிரசங்கத் தகுதிகளையோ அளவுகோலாகப் பயன்படுத்துவதில்லை. நாம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக, பயபக்தியோடு ஊழியம் செய்கிறோமா என்பதுதான் முக்கியம். இதை அளவுகோலாக வைத்தே, தேவன் ஊழியக்காரர்களை அளந்து பார்த்து, அவர்களை அங்கீகரிக்கிறார்.

2 கொரிந்தியர் - விரிவுரை

II CORINTHIANS - COMMENTARY

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தேவவசனத்தை கலப்பில்லாமல் பேசவேண்டும். துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும் வசனத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் என்னும் உணர்வு நமக்குள்ளிருக்கவேண்டும். தேவன் நம்மை அங்கீகரிக்கவேண்டும். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். நம்முடைய இருதயத்தின் நினைவுகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கிறார்.

நம்முடைய பிரசங்கம் ஒருவிதமாகவும், நம்முடைய ஜீவியம் வேறுவிதமாகவும் இருக்கக்கூடாது. நம்முடைய சுயஇஷ்டத்தின் பிரகாரம் தேவவசனத்தை கலப்பாய்ப் பேசக்கூடாது. இவையெல்லாவற்றையும் தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள ஊழியக்காரராயிருக்க வேண்டும். கொஞ்சத்தில் ஊழியம் செய்தாலும் அதில் உண்மையும் உத்தமமும் இருக்கவேண்டும்.

3 அதிகாரம்

பவுல் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்காக, அவர் தன்னைத்தானே மெச்சிக்கொள்ளவில்லை. கர்த்தருடைய மகிமையான ஊழியத்தைச் செய்வதற்கு தேவனால் அவருக்கு தகுதி உண்டாயிருக்கிறது (2கொரி 3:1-5). பழைய உடன்படிக்கையையும் புதிய உடன்படிக்கையையும் பவுல் ஒப்பிட்டு எழுதுகிறார் (2கொரி 3:6-11). சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற ஊழியக் காரர்களுக்கு தேவன் சில கடமைகளைக் கொடுத்திருக்கிறார். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, நாம் கிறிஸ்துவின் மகிமையுள்ள சாயலாக, மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (2கொரி 3:12-18).

தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது 2கொரி 3 : 1-5

2கொரி 3:1. எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடங்குகிறோமோ? அல்லது சிலருக்கு வேண்டியதாயிருக்கிறது போல, உங்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பவும், உங்களிடத்தில் உபசார நிருபங்களைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்கு வேண்டியதோ?

2கொரி 3:2. எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

2கொரி 3:3. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.

2கொரி 3:4. நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம்.

2கொரி 3:5. எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது.

பவுல் தன்னுடைய வார்த்தையினால் தன்னைத் தானே மெச்சிக்கொள்வது போலத் தெரிகிறது. ஆனால் அவர் மனுஷரிடமிருந்து பாராட்டுதலைப் பெறவேண்டுமென்பதற்காக ஊழியம் செய்யவில்லை. அவர்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பி, அவர்களிடத்திலிருந்து உபசார நிருபங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பவுல் விரும்பவில்லை. கொரிந்தியர்கள் தன்னைப் பாராட்ட வேண்டுமென்பதற்காக, பவுல் அவர்களைப் பாராட்டி பேசவில்லை. இப்படிப்பட்ட ஊழியத்தைக் கள்ளத் தீர்க்கதரிசிகளும், கள்ளப் போதகர்களும் செய்கிறார்கள். தங்களை மனுஷர் பாராட்ட வேண்டுமென்று எதிர்பார்த்து, அவர்களுக்குப் பிரியமான காரியங்களை உபதேசம் பண்ணுகிறார்கள்.

கொரிந்தியர்கள் பவுலின் ஊழியத்திற்குப் புகழ்ச்சியாயிருக்கிறார்கள். அவர்கள் பவுலின் இருதயத்தில் எழுதப்பட்ட நிருபமாகயிருக்கிறார்கள். சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப் பட்டுமிருக்கிற நிருபமாக இருக்கிறார்கள்.

கொரிந்தியர்கள் தன்னைப் பற்றி உயர்வாகப் பேசினாலும், பவுல் துதி கன மகிமை அனைத்தையும் தேவனுக்கே செலுத்துகிறார். கொரிந்தியரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறார்கள் என்றே சொல்லுகிறார். அப்போஸ்தலர் பவுலும், அவருடைய உடன் ஊழியரும் கிறிஸ்துவின் கரத்தில் பயன்படுத்தப் படுகிற கருவியாகவே ஊழியம் செய்கிறார்கள்.

கிறிஸ்துவின் நிருபமானது மையினால் எழுதப்படவில்லை. இது ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினால் எழுதப்படுகிறது. கிறிஸ்துவின் நிருபம் கற்பலகைகளில் எழுதப்படவில்லை. இது இருதயங்களாகிய சதையான பலகைகளிலே எழுதப்பட்டிருக்கிறது. பவுல் இதைச் சொல்லும்போது, மாம்சமான பலகை என்று சொல்லாமல், சதையான பலகை என்றே சொல்லுகிறார். மாம்சம் என்பது உலகப்பிரகாரமான காரியத்திற்கு அடையாளம். தேவனுடைய கிருபையினால் நம்முடைய இருதயமானது மென்மையாக்கப்பட்டிருக்கிறது. கடினமான இருதயத்தைத் தேவன் மென்மையான இருதயமாக மாற்றியிருக்கிறார்.

கொரிந்தியர்கள் பவுலின் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறார்கள். பவுலினுடைய ஊழியத்தின் வெற்றிக்கு அவர்கள் சாட்சியாகயிருக்கிறார்கள். ஆனாலும் பவுல் தன்னை மேன்மைப்படுத்தவில்லை. தன்னுடைய ஊழியத்தை மெச்சிக்கொள்ள வில்லை. எல்லா மகிமையையும் பவுல் தேவனுக்கே கொடுக்கிறார்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற தகுதி, தனக்கு தேவனால் உண்டாயிருப்பதாக பவுல் அங்கீகாரம் பண்ணுகிறார். ஆகையினால் தன்னுடைய ஊழியத்தின் மூலமாய் நடைபெறுகிற எல்லா நன்மைகளுக்கும் தேவனே காரணமானவர் என்று அங்கீகரித்து, பவுல் அவரையே துதிக்கிறார். தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் ஊழியம் செய்யமுடியாது. ஊழியத்தின் வெற்றிக்கு தேவனுடைய கிருபையே காரணம். கர்த்தருடைய மகத்தான ஊழியத்தைச் செய்வதற்கு தேவகிருபையே நம்மைத் தகுதிப்படுத்துகிறது.

புது உடன்படிக்கையின் ஊழியக்காரர் 2கொரி 3 : 6-11

2கொரி 3:6. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.

2கொரி 3:7. எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே.

2கொரி 3:8. ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?

2கொரி 3:9. ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.

2கொரி 3:10. இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்கு முன்பாக மகிமைப்பட்டதல்ல.

2கொரி 3:11. அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்த தானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.

அப்போஸ்தலர் பவுல் பழைய உடன்படிக்கையையும், புதிய உடன் படிக்கையையும் இங்கு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். தானும், தன்னுடைய உடன்ஊழியரும் புதுஉடன்படிக்கையின் ஊழியக்காரராக இருப்பதாக சாட்சியாகச் சொல்லுகிறார். இந்த ஊழியத்தைச் செய்வதற்கு தேவனே தங்களை தகுதியுள்ளவராக்கினார் என்றும் அங்கீகாரம்பண்ணுகிறார்.

புது உடன்படிக்கையானது எழுத்திற்குரியதாயிராமல் ஆவிக்குரியதா யிருக்கிறது. எழுத்து கொல்லுகிறது. ஆவியோ உயிர்ப்பிக்கிறது. புதிய ஏற்பாட்டு ஊழியக்காரர்கள் எழுத்திற்கு ஊழியக்காரர்களாயிராமல் ஆவிக்கு ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். சுவிசேஷத்தின் ஆவி நித்திய ஜீவனைக் கொடுக்கிறது. ஆவி உயிர்ப்பிக்கிறது.

நியாயப் பிரமாணத்தை விட கிறிஸ்துவின் சுவிசேஷமே மகிமையுள்ளது. பழைய ஏற்பாடு எழுத்துக்களினால் எழுதப்பட்டு, கற்களில் பதிந்திருந்தது. இது மரணத்திற்கேதுவான ஊழியம். புதிய ஏற்பாட்டு ஊழியமோ ஜீவனுக்கேதுவான ஊழியம். நியாயப்பிரமாணம் ஆக்கினைத் தீர்ப்பைக் கொடுக்கிறது. சுவிசேஷமோ நீதியைக் கொடுக்கிறது. தேவனுடைய கிருபையும் இரக்கமும், புதிய ஏற்பாட்டிலே, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மூலமாகவே நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்று, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்கிறோம்.

புதிய ஏற்பாட்டு ஊழியம் அதிக மகிமையுள்ளது. இந்த மகிமைக்கு முன்பாக பழைய ஏற்பாட்டு ஊழியத்தின் மகிமை மங்கிப்போயிருக்கிறது. சுவிசேஷ ஊழியத்தின் சிறந்த மகிமைக்கு முன்பாக, வேறு எந்த ஊழியமும் மகிமைப்பட்டதல்ல.

நியாயப்பிரமாணம் ஒழிந்துபோகும். கிறிஸ்துவின் சுவிசேஷம் நிலைத்து நிற்கும். உலகத்தின் முடிவு பரியந்தம் கிறிஸ்துவின் சுவிசேஷம் நிலைத்து நிற்கிறது. மோசேயின் பிரமாணமோ ஒழிந்து போயிற்று. ஒழிந்துபோன நியாயப் பிரமாணம் மகிமையுள்ளதாக இருக்குமானால், நிலைத்து நிற்கிற சுவிசேஷம் அதிக மகிமையுள்ளதாகயிருக்கும்.

மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் 2கொரி 3 : 12-18

2கொரி 3:12. நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால், மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்.

2கொரி 3:13. மேலும் ஒழிந்துபோவதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப்பாராதபடிக்கு, மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட்டுக் கொண்டது போல நாங்கள் போடுகிறதில்லை.

2கொரி 3:14. அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது.

2கொரி 3:15. மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும் போது, இந்நாள் வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே.

2கொரி 3:16. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்.

2கொரி 3:17. கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.

2கொரி 3:18. நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை, தெளிவாகவும் தாராளமாகவும் பேச வேண்டும். நியாயப் பிரமாணத்தைவிட கிறிஸ்துவின் சுவிசேஷம் தெளிவாக இருக்கிறது. நியாயப் பிரமாணத்தின் முடிவை இஸ்ரவேல் புத்திரரால் நோக்கிப் பார்க்க முடியவில்லை. இதனால் மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட்டுக்கொண்டான்.

நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டு ஜீவிக்கிறவர்களைவிட, சுவிசேஷத்தின் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டு ஜீவிக்கிறவர்களுக்கு ஏராளமான சிலாக்கியங்கள் உண்டு. நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறவர்களுடைய மனது கடினப்பட்டிருக்கும். அவர்களுடைய மனக்கண்கள் மூடப்பட்டிருக்கும். அவர்கள் இருதயத்தின் மேல் முக்காடு இருக்கும்.

நியாயப் பிரமாணத்தின் கீழ் ஜீவிக்கிறவர்களுடைய முக்காடு நிரந்தரமானதல்ல. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம். அவர்களுக்கு விடுதலை உண்டாகும். இந்த விடுதலையைப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்றால் அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வரவேண்டும்.

கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வருகிறவர்களுக்கு வெளிச்ச முண்டாயிருக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருக்கும் முக்காடு இருக்காது. பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின்படி ஜீவிக்கிறவர்கள் மேல் முக்காடு போடப்பட்டிருக்கும். அது கிறிஸ்துவினாலே மாத்திரம் நீக்கப்படும். முக்காடு நீக்கப்படவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வரவேண்டும். இல்லையென்றால் அந்த முக்காடு அவர்கள்மேல் நீக்காமலேயேயிருக்கும்.

கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு. நாம் கர்த்தரிடத்தில் வரும்போது நம்முடைய இருதயத்தின்மேல் இருந்த முக்காடு நீக்கப்படுகிறது. நமக்கு விடுதலை கிடைக்கிறது. நாம் கர்த்தருடைய மகிமையை, முக்காடில்லாமல் திறந்த முகமாய், கண்ணாடியிலே காண்கிறது போல காண்போம்.

மோசே கர்த்தரை சீனாய் மலையிலே முகமுகமாய்த் தரிசித்தார். இது அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய சிலாக்கியம். புதிய உடன்படிக்கையின்கீழ், கர்த்தருடைய பிள்ளைகளாகயிருக்கிற, எல்லா விசுவாசிகளுக்கும் இந்த மேன்மையான சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா விசுவாசிகளும் கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார்கள். கண்ணாடியிலே காண்கிறது போல, கர்த்தருடைய மகிமையை திறந்த முகமாய்க் காண்கிறார்கள்.

கர்த்தரே ஆவியானவர். ஆவியாயிருக்கிற கர்த்தரால், கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும், அவருடைய சாயலாக, மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

4 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுலும் அவருடைய உடன்ஊழியரும் சோர்ந்துபோகாமல் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள் (2கொரி 4:1-7). அவர்களுக்கு பல பாடுகளும் உபத்திரவங்களுமுண்டாயிற்று. இவற்றிற்கு மத்தியிலும் அவர்கள் நீடிய பொறுமையோடும், தைரியத்தோடும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள்.

சோர்ந்துபோகிறதில்லை 2கொரி 4 : 1-7

2கொரி 4:1. இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை.

2கொரி 4:2. வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப்புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்.

2கொரி 4:3. எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்.

2கொரி 4:4. தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.

2கொரி 4:5. நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.

2கொரி 4:6. இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.

2கொரி 4:7. இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

கள்ளப் போதகர்கள் பவுலுக்கு விரோதமாக தவறான குற்றச் சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். கர்த்தருக்காக பவுல் செய்கிற ஊழியத்தைத் தூஷிக்கிறார்கள். அவர்களுக்குப் பிரதியுத்தரம் சொல்லும் விதமாக, பவுல் இந்த அதிகாரத்தில் அநேகக்காரியங்களை எழுதுகிறார். பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு உண்மையான ஊழியக்காரராகயிருக்கிறார். தேவனிடத்தில் இரக்கம் பெற்று சோர்ந்துபோகாமல் ஊழியம் செய்கிறார்.

பவுல் தன் சுயமுயற்சியினாலே ஊழியம் செய்யவில்லை. பவுல் சோர்ந்துபோகாமல் ஊழியம் செய்வதற்கு தேவனுடைய இரக்கமே பிரதான காரணம். இந்த உலகத்தில் ஏராளமானோர் பலவிதமான நற்கிரியைகளைச் செய்கிறார்கள். தொழில் செய்கிறார்கள். வியாபாரம் பண்ணுகிறார்கள். உலகப் பிரகாரமான இந்த வேலைகளைச் செய்கிறவர்கள், தங்கள் வேலைகளில் சோர்ந்து போவார்கள். இவர்களுக்கு தொழிலில் பிரச்சனைகளும் பாரங்களும் உண்டாகும்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற நாமோ தேவனிடத்திலிருந்து இரக்கத்தைப் பெற்று ஊழியம் செய்கிறோம். ஆகையினால் நாம் ஊழியத்தில் சோர்ந்து போவதில்லை. கிறிஸ்துவின் ஊழியம் உத்தமமானது. இந்த ஊழியத்தைச் செய்கிற நாமும் நம்மை மனுஷருக்கு முன்பாக உத்தமரென்று விளங்கப்பண்ண வேண்டும். நம்முடைய ஊழியத்தில் உண்மையிருக்க வேண்டும். கபடமோ, மாய்மாலமோ இருக்கக்கூடாது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் வெட்கமான அந்தரங்கக்காரியங்களை வெறுக்க வேண்டும். தந்திரமாய் நடக்கக் கூடாது. தேவனுடைய வசனத்தைப் புரட்டக்கூடாது. தேவனுடைய சத்தியத்தை கலப்பில்லாமல், புரட்டாமல், உண்மையாய் வெளிப்படுத்த வேண்டும். பிறருக்கு முன்பாக நாம் உத்தமர்போல நடிக்கக் கூடாது. உண்மையிலேயே நாம் உத்தமர்களாக விளங்கவேண்டும்.

ஒரு சிலர் தந்திரமாய் நடந்து, தேவனுடைய வசனத்தைப் புரட்டுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலர் பவுலோ சத்தியத்தைப் புரட்டாமல் வெளிப்படுத்தி, தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் தன்னை உத்தமர் என்று விளங்கப்பண்ணுகிறார். பவுலின் ஊழியம் மறைவாய் நடைபெறவில்லை. தேவனுக்கு முன்பாக நடைபெறுகிறது. ஆகையினால் தனக்கு தேவனையும், எல்லா மனுஷருடைய மனச்சாட்சியையும் சாட்சியாகச் சொல்லுகிறார்.

பவுல் வேதவசனத்தைப் புரட்டாமல், சத்தியத்தை மெய்யாய் வெளிப்படுத்துகிறார். ஆனாலும் ஒரு சிலரே இரட்சிக்கப்படுகிறார்கள். ஒருசிலரோ இரட்சிக்கப்படாமல் போகிறார்கள். சுவிசேஷம் ஒரு சிலருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. வேறுசிலருக்கோ சுவிசேஷம் மறைபொருளாயிருக்கிறது. இதற்கான காரணத்தையும் பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்குமென்று பவுல் சொல்லுகிறார் (2கொரி4:3). இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கியிருக்கிறான் (2கொரி 4:4).

இவர்கள் பிசாசின் ஆளுகைக் குட்பட்டிருக்கிறார்கள். பிசாசானவனை, அப்போஸ்தலர் பவுல், "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" என்று அழைக்கிறார். பிசாசுக்கு இந்த உலகத்தில் அதிக ஆசைகளும், உலகத்தின்மீது அதிக அக்கறையும் உண்டு. இவன் அந்தகாரத்தின் பிரபுவாகயிருக்கிறான். இந்த உலகத்தின் அந்தகார வல்லமையை ஆளுகை செய்கிறான். ஆகையினால் மனுஷருடைய புரிந்துகொள்ளும் சக்தியை இருளாக்கி விடுகிறான். அவர்களுக்கு சுவிசேஷத்தின் ஒளி பிரகாசமாய் தெரிய வில்லை. அவர்களுடைய மனக்கண்களை பிசாசானவன் குருடாக்கியிருக்கிறான்.

மனுஷருடைய மனதில் கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி பிரகாசமாகயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இதுவே தேவனுடைய திட்டம். ஆனால் பிசாசானவனோ மனுஷருடைய மனதை குருடாக்கி, அவர்களை அறியாமையில் வைத்திருக்கிறான். பிசாசு இருளுக்கு அதிபதியாகயிருக்கிறான். கிறிஸ்துவின் சுவிசேஷமோ ஒளியாகயிருக்கிறது. அவிசுவாசிகளுடைய மனது குருடாக்கப்பட்டிருப்பதினால், கிறிஸ்துவின் சுவிசேஷம் அவர்களுக்கு மறை பொருளாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தன்னைப்பற்றி பிரசங்கிக்கவில்லை. கிறிஸ்து இயேசுவை கர்த்தரென்றும், தன்னை இயேசுவினி மித்தம் அவர்களுடைய ஊழியக் காரரென்றும் பிரசங்கிக்கிறார். இயேசு கிறிஸ்துவே கிறிஸ்தவ உபதேசம் எல்லாவற்றிற்கும் மையமாகயிருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கும் போது, அவரைப்பற்றி என்னென்ன சத்தியங்களையெல்லாம் சொல்ல வேண்டுமோ, அவை யெல்லாவற்றையும் சொல்லவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் பெருமையின் ஆவி இருக்கக் கூடாது. அவர்கள் மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு ஊழியக்காரரா யிருக்கிறார்கள். மனுஷரைப் பிரியப்படுத்தும் ஊழியத்தை நாம் செய்யக் கூடாது. மனுஷர் நம்மைப் போற்ற வேண்டுமென்றோ, புகழவேண்டுமென்றோ விரும்பி, அதற்கேற்ற பிரகாரம் உபதேசம் பண்ணக்கூடாது. இயேசு கிறிஸ்துவை கர்த்தரென்று பிரசங்கிக்கவேண்டும். கர்த்தரை உயர்த்தவேண்டும். நம்மைத் தாழ்த்தவேண்டும்.

தேவன் இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்னவர். இயேசுகிறிஸ்துவின் முகத்தில் தேவன் தம்முடைய மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணியிருக்கிறார். அதற்காகவே தேவன் ஊழியக்காரருடைய இருதயங்களில் பிரகாசிக்கிறார். காலையில் சூரியன் உதிப்பதைப் பார்க்கும்போது நம்முடைய கண்களுக்கு அழகாகயிருக்கும். சுவிசேஷமானது இருதயங்களில் பிரகாசிப்பதைப் பார்க்கும்போது, நம்முடைய கண்களுக்கு அதைவிட அழகாகயிருக்கும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களைப்பற்றி பிரசங்கம்பண்ணக்கூடாது. ஏனெனில் மனுஷரெல்லோருமே மண்பாண்டங்களாகயிருக்கிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் பலவீனராகவும், உடைந்து போகக் கூடிய மண் பாத்திரங்களாகவும் இருக்கிறார்கள். ஊழியக்காரர்கள் எல்லோருமே தங்களுக்கு நியமிக்கப்பட்ட நாளில் மரிக்கவேண்டியவர்கள். விரைவில் அவர்கள் உடைந்துபோகக்கூடியவர்கள். இப்படிப்பட்ட மண்பாண்டங்களில் தேவன் தம்முடைய பொக்கிஷத்தைக் கொடுத்திருக்கிறார்.

நாம் பலவீனமாகயிருந்தாலும் தேவனுடைய வல்லமை மகத்துவ முள்ளதாகயிருக்கிறது. பலவீனமான பாண்டங்களைப் பயன்படுத்தும் போது, தேவனுடைய சர்வவல்லமை பிரத்தியட்சமாக வெளிப்படுகிறது. மண்பாண்டங்களில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் அதில் வைக்கப்பட்டிருக்கிற பொக்கிஷமே பிரதானம். அது தேவனுக்குரியது. தேவன் தம்முடைய மகத்துவமான ஊழியத்தை, தம்முடைய கிருபையினாலே, மண்பாண்டங்களாகிய தம்முடைய ஊழியக் காரரிடத்தில், நம்பி ஒப்புக் கொடுத்திருக்கிறார்.

பாடுகளும் பொறுமையும் 2கொரி 4 : 8-12

2கொரி 4:8. நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிற தில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;

2கொரி 4:9. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.

2கொரி 4:10. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும் படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.

2கொரி 4:11. எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும் படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறோம்.

2கொரி 4:12. இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன்செய்கிறது.

பவுலுக்கும் அவருடைய உடன் ஊழியக்காரருக்கும் அநேக பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று. இவை யெல்லாவற்றையும் அவர்கள் நீடிய பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள். அவர்கள் எப்பக்கத்திலும் நெருக்கப் பட்டார்கள். ஆனாலும் அவர்கள் ஒடுங்கிப் போவதில்லை. தங்களுக்குத் தேவையான உதவியை அவர்கள் தேவனிடத்தில் கண்டார்கள். தங்களுக்குத் தேவைப்படும் எல்லா உதவிகளையும் அவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு கலக்க முண்டாயிற்று. ஆனாலும் அவர்கள் மனம் முறிவடையவில்லை. தேவன் தங்களைப் பாதுகாப்பார் என்றும், தங்களுக்கு உண்டாயிருக்கிற எல்லா இக்கட்டுக்களிலிருந்தும் தேவன் தங்களை விடுவிப்பார் என்றும் அவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கையிருந்தார்கள்.

அப்போஸ்தலர்கள் துன்பப்படுத்தப் பட்டார்கள். ஆனால் அவர்கள் தேவனால் கைவிடப்படவில்லை. அவர்கள் கீழே தள்ளப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் மடிந்துபோகவில்லை. தேவன் அவர்களை இந்நாள் வரையிலும் பாதுகாத்து வருகிறார். தண்ணீருக்குள் அவர்கள் மூழ்கினாலும், அவர்களுடைய சிரசை தண்ணீரின்மீது தேவன் நிலைநிற்கச் செய்கிறார். எவ்வளவு பெரிய துன்பங்கள் வந்தாலும், அந்தத் துன்பங்களில் அவர்கள் மூழ்கிப்போகவில்லை. தேவன் அவர்களைத் துன்பங்களிலிருந்து விடுவிக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்த உலகத்தில் உபத்திரவங்கள் உண்டு. நெருக்கங்களும் கலக்கங்களும் உண்டு. நமக்குத் துன்பங்களும் உண்டு. நாம் கீழே தள்ளப்படலாம். இவை யெல்லாவற்றிற்கும் மத்தியில், நம்முடைய தேவன் சர்வவல்லவராக நம்மோடு கூடயிருக்கிறார். எல்லா தீங்குகளிலிருந்தும் அவர் நம்மை விடுதலை செய்கிறார். அவரே நமக்கு ஆறுதலாகயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் ஊழியக் காரருக்கு உண்டாயிருக்கும் பாடுகளை கிறிஸ்துவின் பாடுகளோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய ஜீவன் தங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை தங்கள் சரீரத்தில் எப்பொழுதும் சுமந்து திரிவதாக அப்போஸ்தலர் பவுல் சாட்சியாக அறிவிக்கிறார். தங்களுடைய மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவன் விளங்கும் படிக்கே, தங்கள் சரீரத்தில் இயேசுவின் மரணத்தை அவர்கள் சுமந்து திரிகிறார்கள்.

அப்போஸ்தலருடைய சரீரம் சாவுக் கேதுவாகயிருக்கிறது. இந்த மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவன் விளங்கும்படிக்கு, இயேசுவினிமித்தம் தங்களை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கிறார்கள். இதனால் மரணமானது அப்போஸ்தலரிடத்தில் பெலன் செய்கிறது. அப்போஸ்தலர்கள் தங்களை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பதினால், விசுவாசிகளிடத்தில் ஜீவனானது பெலன் செய்கிறது.

விசுவாசம்
2கொரி 4 : 13-18

2கொரி 4:13. விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிற படியால் பேசுகிறோம்.

2கொரி 4:14. கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்.

2கொரி 4:15. தேவனுடைய மகிமை விளங்குவதற் கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது.

2கொரி 4:16. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

2கொரி 4:17. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

2கொரி 4:18. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

அப்போஸ்தலருக்கு ஏராளமான பாடுகள் உண்டானபோதிலும் அவர்கள் சோர்ந்துபோகவில்லை. அவர்களுடைய விசுவாசம், அவர்கள் சோர்ந்து போவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறது. தேவன் தம்முடைய கிருபையினால் அப்போஸ்தலருக்கு விசுவாசத்தைக் கொடுத்திருக்கிறார். விசுவாசிகளுக்கு பாடுகளும் வேதனைகளும் உண்டாகும் போது, அவர்களிடத்திலுள்ள விசுவாசம், அவர்கள் சோர்ந்து போகாமல் அவர்களைப் பாதுகாக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தங்களுடைய விசுவாசத்தைப் பற்றிச் சொல்லும்போது, தாவீது சொன்ன வார்த்தைகளை இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார். “விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்” (சங் 116:10) என்று தாவீது பாடுகிறார். அதையே பவுல் இங்கு, “விசுவாசித்தேன் ஆகையால் பேசினேன்” என்று சொல்லி, தாங்கள் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாகயிருப்பதாக சாட்சி சொல்லுகிறார். தாங்கள் விசுவாசிக்கிற படியினால் பேசுவதாகவும் சொல்லுகிறார்.

அப்போஸ்தலர்கள் தங்கள் பாடுகளின் மத்தியில் சோர்ந்து போகாமலிருக்கிறார்கள். விசுவாசம் அவர்களை சோர்ந்து போகாமல் பாதுகாக்கிறது. உயிர்த்தெழுதலின்மீது அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கையும், அவர்களை சோர்ந்து போகாமல் பாதுகாக்கிறது. அப்போஸ்தலருடைய நம்பிக்கை உறுதியானது. நல்ல அஸ்திபாரத்தில் அவர்களுடைய நம்பிக்கை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை எழுப்பியிருக்கிறார். அவர் தங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்புவார் என்று அப்போஸ்தலர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மரிக்கும் போது பயப்படக்கூடாது. கர்த்தராகிய இயேசுவை எழுப்பின தேவன், நம்மையும் இயேசுவைக் கொண்டு எழுப்புவார் என்னும் நம்பிக்கை நம்மிடத்தில் காணப்பட வேண்டும். தம்முடைய பிள்ளைகளெல்லோரையும் கிறிஸ்துவானவர் எழுப்புவார். இது எல்லா விசுவாசிகளுக்கும் கிடைத்திருக்கிற ஆனந்த பாக்கிய நம்பிக்கை. நாம் மரிக்கும்போது, நாம் உயிர்த்தெழுவோம் என்னும் நம்பிக்கையோடு மரிக்கவேண்டும். பயப்படாமல், சந்தோஷத்தோடு நம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

சபையிலுள்ள விசுவாசிகள் அப்போஸ்தலருக்காக ஜெபிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் ஸ்தோத்திர பலிகளை ஏறெடுகிறார்கள். ஸ்தோத்திரம் பெருகும் போது தேவகிருபையும் பெருகும். அப்போஸ் தலருக்கு பலவிதமான பாடுகள் வந்தபோதிலும், அவற்றிற்கு மத்தியிலும் விசுவாசிகளுடைய ஜெபத்தினால், தாங்கள் சோர்ந்துபோகாமல் நிலைத்திருப்பதாக பவுல் சாட்சியாக அறிவிக்கிறார். மற்றவர்கள் நமக்காக ஜெபிக்கிறார்கள் என்னும் உணர்வு நம்மிடத்தில் வரும்போது, நாம் சோதனைகளைப் பொறுமையோடு சகித்துக் கொள்வோம். நம்முடைய ஊழியத்தினிமித்தம் அநேகர் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

அப்போஸ்தலர்கள் தங்கள் புறம்பான மனுஷனையும் உள்ளான மனுஷனையும் நோக்கிப்பார்க்கிறார்கள். புறம்பான மனுஷன் அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது. அப்போஸ்தலர்கள் தங்கள் சோதனைகளுக்கு மத்தியில், இதைச் சிந்தித்துப் பார்த்து, சோர்ந்துபோகாமலிருக்கிறார்கள்.

நம்முடைய சரீரம் வியாதியாயிருந்தாலும், நம்முடைய ஆத்துமா ஆரோக்கியமாகயிருக்க வேண்டும். நம்முடைய சரீரத்தில் வேதனையிருந்தாலும், நம்முடைய ஆத்துமாவில் சந்தோஷம் நிரம்பியிருக்க வேண்டும். நம்முடைய உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும். புதிய கிருபைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். துன்மார்க்கரோ நாளுக்கு நாள் அழிந்து போவார்கள். கர்த்தருடைய பரிசுத்த வான்களோ நாளுக்கு நாள் புதிதாக்கப்படுவார்கள்.

அப்போஸ்தலர்கள் தங்கள் பாடுகளுக்கு மத்தியிலும், தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற நித்திய ஜீவனையும், அதன் சந்தோஷத்தையும் விசுவாசத்தோடு நோக்கிப்பார்க்கிறார்கள். இதனால் பாடுகள் மத்தியிலும் அவர்கள் சோர்ந்து போகாமலிருக்கிறார்கள். தங்களுக்கு உண்டாயிருக்கிற உபத்திரவம், தங்களுக்கு நித்திய கனமகிமையை உண்டாக்குவதாக நம்புகிறார்கள். உபத்திரவம் இலேசானதாகவும், அது சீக்கிரத்திலே நீங்கக் கூடியதாகவும் இருக்கிறது. ஆனால் கனமகிமையோ நித்தியமானது, மிகவும் அதிகமானது.

தங்களுக்கு இப்போது பாடுகளும் உபத்திரவங்களும் இருந்தாலும், முடிவோ நித்தியகன மகிமையாகயிருக்கும் என்று விசுவாசித்து பாடுகளைச் சகித்துக் கொள்கிறார்கள். பாடுகள் மத்தியிலும் சோர்ந்போகாதிருக்கிறார்கள்.

காணப்படுகிறவைகள் அநித்திய மானவைகள் என்றும், காணப்படா தவைகள் நித்தியமானவைகள் என்றும் அப்போஸ்தலர் பவுல் நிதானித்து அறிந்து சொல்லுகிறார். விசுவாசத்தினாலே அப்போஸ்தலர்களால் இப்படிப்பட்ட நீதியான தீர்ப்பைப் புரிந்துகொள்ள முடிகிறது. விசுவாசத்தினால் நாம் இவைகளைப் பகுத்தறிகிறோம். நாம் எப்போதுமேஅநித்தியமான காரியங்களைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. நித்தியமானவைகள் காணப்படாதவை களாகயிருந்தாலும், அவைகளையே விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்க வேண்டும். இதைத் தெளிவாகப் பார்க்கும்படி நம்முடைய மனக்கண்கள் பிரகாசமுள்ளதாகயிருக்கவேண்டும்.

5 அதிகாரம்

அப்போஸ்தலர்களுக்கு இப்பிரபஞ்சத்தில் பல பாடுகளும் வேதனைகளும் உண்டானபோதிலும், அவர்கள் சோர்ந்துபோகாமலிருக்கிறார்கள். தங்கள் சரீர மரணத்திற்குப் பின்பு ஒரு சந்தோஷமான மறுவாழ்வு இருப்பதை நிச்சயத்தோடு நம்புகிறார்கள் *(2கொரி 5:1-5).* விசுவாசிகள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கவேண்டும் *(2கொரி 5:6-8).* கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக நாமெல்லோரும் வெளிப்படவேண்டும். அப்போது நல்ல பலனை அடையும்படிக்கு, நாமெல்லோரும் இப்போது நன்மை செய்யவேண்டும் *(2கொரி 5:9-11).* அப்போஸ்தலர் பவுல் மறுபடியுமாக, கொரிந்தியருக்கு முன்பாக தன்னை மெச்சிக்கொள்கிறார் *(2கொரி 5:12-15).* புது சிருஷ்டியும், ஒப்புரவாகுதலும் *(2கொரி 5:16-21).*

பூமிக்குரிய கூடாரம்
2கொரி 5 : 1-5

2கொரி 5:1. பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.

2கொரி 5:2. ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்.

2கொரி 5:3. தரித்துக்கொண்டவர்களானால், நிர்வாணிகளாய்க் காணப்படமாட்டோம்.

2கொரி 5:4. இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்துபோட வேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

2கொரி 5:5. இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே; ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே.

அப்போஸ்தலருடைய எதிர்பார்ப்பையும், வாஞ்சையையும், நிச்சயத்தையும், நித்திய சந்தோஷத்தையும் பவுல் இங்கு வெளிப்படுத்துகிறார். தங்களுடைய மரணத்திற்குப் பின்பு, தங்களுக்கு நித்திய சந்தோஷம் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று விசுவாசிகள் எதிர்பார்க்கிறார்கள். தேவனால் கட்டப்பட்ட நித்திய வீடு, ஒவ்வொரு விசுவாசிக்கும் பரலோகத்திலே உண்டாயிருக்கிறது. இதை விசுவாசிகளாகிய நாம் அறிந்திருக்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் பரலோகத்தைப்பற்றி நோக்கிப் பார்க்கும்போது, அது தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு என்பதை நாம் விசுவாசிக்கவேண்டும். இது நம்முடைய பிதாவின் வீடு. இதுவே நம்முடைய நித்திய வாசஸ்தலம். இந்த வீடு நமக்குப் பரலோகத்தில் தேவனால் கட்டப்பட்டிருக்கிறது. இது தேவனுடைய வீடு. பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோகும். ஆனால் தேவனால் கட்டப்பட்ட வீடோ நித்திய காலமாய் நிலைத்திருக்கும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், மண்பாத்திரங்களைப்போன்ற, சாதாரண குடிசைகளில் இப்போது வாசம்பண்ணுகிறோம். நமக்கு பரலோகத்திலே கைவேலையல்லாத நித்திய வீட்டை தேவன் கட்டியிருக்கிறார்.

பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோகும். இது அழிந்துபோனாலும் நமக்கு வேறு ஒரு வீடு பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கிறது. இந்த வீடு கையினால் கட்டப்படவில்லை. அந்த வீட்டில் நாம் தேவனோடு நித்திய காலமாய் வாசம்பண்ணுவோம். பரலோகத்திலே நாம் தேவனோடுகூட நடப்போம்.

பூமிக்குரிய கூடாரமாகிய இந்த வீட்டில் நாம் தவிக்கிறோம். நம்முடைய பரமவாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர் களாயிருக்கிறோம். இப்போது நமக்கு தவிப்பு உண்டாயிருக்கிறது. மிகுந்த பாரத்தினால் வருத்தப்பட்டு தவிக்கிறோம். இந்த கூடாரத்திலிருக்கிற நாம் பாரம் சுமந்து தவிக்கிறோம். நம்முடைய சரீரம் பாவத்தின் சரீரமாகயிருக்கிறது. இதன் பாரத்தினால் நாம் தவிக்கிறோம்.

பூமிக்குரிய இந்த கூடாரத்திலே நாம் பாரம் சுமந்து தவித்தாலும், நம்முடைய பரமவாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர் களாயிருக்கிறோம். விசுவாசி களெல்லோரும் இந்த எதிர்பார்ப்பினால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வரப்போகிற சந்தோஷத்தை எதிர்பார்த்து இந்த தவிப்பு நமக்கு உண்டாயிருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் இந்த தேகத்தைவிட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். நம்முடைய சரீரமானது அழிந்துபோகிற போர்வையைப்போல இருக்கிறது. இதைக் களைந்துபோட்டுவிட்டு, மகிமையின் போர்வையைத் தரித்துக்கொள்ள ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம்.

மகிமையைத் தரித்துக்கொண்டால் நாம் நிர்வாணிகளாகயிருக்கமாட்டோம். பரலோகத்திலே நம்முடைய ஆத்துமா நிர்வாணமாயிராது. இது துதியின் வஸ்திரங்களைத் தரித்திருக்கும்.

பரலோகத்திலே நாம் நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு, தேவனே நம்மை ஆயத்தப்படுத்துகிறார். அவரே நமக்கு ஆவி என்னும் அச்சாரத்தைத் தந்திருக்கிறார். இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போதே நாம் தேவனுடைய கிருபையை அனுபவிக்கிறோம். இந்த கிருபையானது வரப்போகிற ஆசீர்வாதத்திற்கு அச்சாரமாகயிருக்கிறது. பரலோகத்தின் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம் என்னும் நிச்சயம் தேவகிருபையினால் நமக்கு உண்டாயிருக்கிறது.

பரலோகத்திற்காக நியமிக்கப் பட்டிருக்கிறவர்கள், இந்தப் பூமியில் ஜீவிக்கிறபோதே, பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய கட்டிடத்திலுள்ள கற்கள், இந்தப் பூமியிலேயே பணிதீர்க்கப்படவேண்டும். ஏனெனில் பரலோகத்தில் நமக்கு கைவேலையல்லாத நித்திய வீடு உண்டாயிருக்கிறது. கைவேலைகளெல்லாம் இந்தப் பூமியிலேயே செய்து முடிக்கப்படவேண்டும். தேவன் நமக்கு பரலோகத்திலே கைவேலையல்லாத நித்திய வீட்டை கட்டியிருக்கிறார். நம்முடைய பரமவாசஸ்தலத்தை நாம் தரித்துக்கொள்வோம் என்பதற்கு பரிசுத்த ஆவியானவரே அச்சாரமாகயிருக்கிறார். தேவனே இந்த அச்சாரத்தை நமக்குக் கொடுத்து ஆசீர்வதிக்கிறார்.

விசுவாசித்து நடக்கிறோம்
2கொரி 5 : 6-8

2கொரி 5:6. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.

2கொரி 5:7. இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களா யிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்.

2கொரி 5:8. நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.

விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் தேவனுடைய கிருபையினால் ஆறுதல் உண்டாயிருக்கிறது. நாம் இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாக யிருக்கிறோம். இங்கு தேவன் நம்மோடு கூடயிருக்கிறார். ஆனால் நாம் அவரோடு எப்படியிருக்கவேண்டுமோ, அப்படி அவரோடுகூட இல்லை. நாம் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாகவே இருக்கிறோம். ஆனாலும், இதை அறிந்திருந்தும் எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். ஏனெனில் நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்த உலகத்தில் நமக்கு விசுவாசம் தேவைப்படுகிறது. பரலோகத்திலோ நமக்கு தரிசனம் தேவைப்படுகிறது.

இந்தத் தேகத்தில் நாம் மரிக்கும்போது, ஆறுதலாகவும் தைரியமாகவும் மரிக்கிறோம். நாம் தைரியமாகவே இருந்து, இந்தத் தேகத்தைவிட்டு குடிப்போகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் விரும்புகிறோம். நம்முடைய ஜீவன் நம்மைவிட்டு நீங்கும்போது நாம் பரமவாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்வோம் என்னும் நம்பிக்கை நம்மிடத்திலுள்ளது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிப்பதைவிட, மரிப்பதையே விரும்புகிறோம்.

இந்தப் பிரபஞ்சத்தில், இந்தச் சரீரத்தில் குடியிருக்கிற நாம் பாரம் சுமந்து தவிக்கிறோம். இந்தச் சரீரமானது ஒரு போர்வையைப்போல இருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் எப்போதும் இப்பிரபஞ்சத்தின் பாடுகளை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. உலகக்காரியங்களைப் பார்த்தால் நமக்கு அதிக சோர்வு உண்டாகும். ஆகையினால் இவ்வுலகத்திற்கு நம்முடைய கண்களை மூடிக்கொண்டு, மகிமையான பரலோகத்தை கண்களைத் திறந்து காணவேண்டும். நம்முடைய விசுவாசம் தரிசனமாக மாறும். நாம் தரிசித்து நடக்காமல் விசுவாசித்து நடக்கவேண்டும். விசுவாசித்து நடக்கிறவர்கள் எப்போதும் தைரியமாயிருப்பார்கள்.

கிறிஸ்துவின் நியாயாசனம்
2கொரி 5 : 9-11

2கொரி 5:9. அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.

2கொரி 5:10. ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.

2கொரி 5:11. ஆகையால், கர்த்தருக்கு பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம்; தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருக்குப் பிரியமானவர்களாகயிருக்க வேண்டும். நாம் சரீரத்தில் குடியிருந்தாலும், குடியிராமற்போனாலும், கர்த்தருக்குப் பிரியமானவர்களாய் இருக்கவே நாடவேண்டும். நாமெல்லோருமே கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். அப்போது சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்கபலனை அடைவான். விசுவாசிகளாகிய நாம் நன்மை செய்து நல்ல பலனை அடையும்படி வாஞ்சையோடிருக்கவேண்டும்.

நம்முடைய பரமவாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள நாம் மிகவும் வாஞ்சையுள்ளவர் களாயிருக்கிறோம். மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காக போர்வை தரித்தவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இந்தத் தேகத்தைவிட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.

தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு என்று அறிந்திருக்கிறோம். நம்முடைய பரமவாசஸ்தலத்தை தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிற நாம், கர்த்தருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடவேண்டும். கர்த்தர் நம்மை அங்கீகரிக்கவேண்டும். நம்முடைய சிந்தையும் செயலும் கர்த்தருக்குப் பிரியமானதாகயிருக்க வேண்டும்.

பரமவாசஸ்தலத்தை தரித்துக் கொள்ளவும் நாம் வாஞ்சையுள்ளவர்களாயிருக்க வேண்டும். இந்த உலகத்தில் ஜீவிக்கும்போது, கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்து, அவருக்குப் பிரியமானவர்களாயிருக்கவும் நாம் வாஞ்சையுள்ளவர்களாயிருக்க வேண்டும். பூமிக்குரிய கூடாரமாகிய இந்த வீட்டைவிட்டு வெளியேறிப்போகும்போது, நம்முடைய பரமவாசஸ்தலத்தில் குடியேறுவோம். அது மாத்திரமல்ல. நாம் மரித்தபின்பு, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாமெல்லோரும் வெளிப்படவேண்டும். இந்த நியாயத்தீர்ப்பு எல்லோருக்கும் நிச்சயம் உண்டு. எல்லோருமே இந்த நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படுவார்கள். நாமும் வெளிப்படவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நியாயசனத்தில், பிரதான நியாயாதிபதியாய் அமர்ந்திருந்து, நம்மை நியாயம் விசாரிப்பார். நம்முடைய சரீரத்தில் நாம் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை நமக்குக் கொடுப்பார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை அப்போஸ்தலர் பவுல் "கர்த்தருக்குப் பயப்படத்தக்கது" என்று சொல்லுகிறார். இந்தச் சரீரத்தில் நாம் தீமை செய்தால், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம் வெளிப்படும்போது, நாம் செய்த தீமைக்குத் தக்க பலனை அடைவோம். இதைத் தியானித்துப் பார்த்து நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பவேண்டும். பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய நியாயாசனத்தில் அமர்ந்திருக்கும்போது, நியாயத்தீர்ப்பு பயங்கரமானதாக யிருந்தாலும், கர்த்தருடைய சமுகத்தில் நாம் பயப்படாமல் சமாதானமாக நிற்கவேண்டும். இந்தப் பயம் நீங்கவேண்டுமென்றால், நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கும்போது, நம்முடைய சரீரத்தில் அதிக நன்மைகளைச் செய்யவேண்டும். அப்போது கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நாம் செய்த நன்மைக்கு தக்க பலனை அடைவோம்.

மேன்மை பாராட்டும்படிக்கு 2கொரி 5 : 12-15

2கொரி 5:12. இதினாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு எதிரே எங்களைக்குறித்து நீங்கள் மேன்மை பாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம்.

2கொரி 5:13. நாங்கள் பைத்தியங்கொண்டவர்களென்றால் தேவனுக்காக அப்படியிருக்கும்; தெளிந்தபுத்தியுள்ளவர்களென்றால் உங்களுக்காக அப்படியிருக்கும்.

2கொரி 5:14. கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;

2கொரி 5:15. பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல் தன்னையும், தன்னுடைய உடன்ஊழியரையும் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளுக்கு முன்பாக மறுபடியும் மெச்சிக்கொள்கிறார். இதற்காக அவர் பெருமைப்படவில்லை. ஒரு சிலர் வெளிவேஷத்தை மேன்மை பாராட்டுகிறார்கள். மேன்மை பாராட்டத்தக்க விஷயம் அவர்களிடத்தில் ஒன்றும் இல்லாதிருக்கிறபோதும், அவர்கள் தங்களை மேன்மை பாராட்டிக்கொள்கிறார்கள். பவுலும் அவருடைய உடன்ஊழியரும் மெய்யாகவே மேன்மை பாராட்டுதலுக்குப் பாத்திரராகயிருக்கிறார்கள்.

வெளிவேஷக்காரரிடம் தங்களைக் குறித்து மேன்மை பாராட்டும்படி, பவுல் விசுவாசிகளுக்கு எடுத்துச்சொல்லுகிறார். கொரிந்து சபையில் பவுலுக்கு விரோதமாக ஒரு சிலர் எழும்பியிருக்கிறார்கள். அவருக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். விசுவாசிகள் தன்னைக் குறித்து நல்ல வார்த்தைகளைச் சொல்லுவதற்கு ஏதுவாக, பவுல் தன்னைக்குறித்து மேன்மை பாராட்டப்படவேண்டிய விஷயங்களை அவர்களுக்குச் சொல்லுகிறார்.

தங்களைக்குறித்து விசுவாசிகள் ஏன் மேன்மை பாராட்டவேண்டுமென்பதற்கான காரணத்தையும் சொல்லுகிறார். தேவனுடைய நாமமகிமைக்காகவும், சபையின் பிரயோஜனத்திற்காகவும் பவுல் தன்னைப்பற்றி கொரிந்தியரிடம் மேன்மையாகப் பேசுகிறார். கிறிஸ்துவினுடைய அன்பு பவுலையும் அவருடைய உடன்ஊழியரையும் நெருக்கி ஏவுகிறது. நம்மிடத்தில் கிறிஸ்துவின் அன்பு நிரம்பியிருக்கும்போது, நாம் நம்மைப்பற்றி புகழ்ந்து பேசமாட்டோம். கிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்வோம்.

கிறிஸ்து நமக்காக மரித்திருக்கவில்லையென்றால் நம்மால் பிழைத்திருக்க முடியாது. ஆகையினால் பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல், கிறிஸ்துவுக்கென்று பிழைத்திருக்க வேண்டும். ஏனெனில் அவரே எல்லாருக்காகவும் மரித்தவர். அவர் நமக்காக மரித்து எழுந்திருக்கிறார். நாமெல்லோரும் பாவத்திலும் மீறுதலிலும் மரித்தவர்களாகயிருக்கிறோம். நமக்கு ஆவிக்குரிய மரணமுண்டாயிருக்கிறது. அப்படிப்பட்ட நமக்காக கிறிஸ்து மரித்தார்.

கிறிஸ்து நமக்காக மரித்தபடியினால், நாம் இனி நமக்காகப் பிழைக்காமல், கிறிஸ்துவுக்காகப் பிழைக்கவேண்டும். கிறிஸ்து நமக்காக மரித்தார். ஆகையினால் நாம் கிறிஸ்துவுக்காக எப்படி பிழைத்திருக்கவேண்டுமோ அப்படி பிழைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவுக்காக எப்படி ஊழியம் செய்யவேண்டுமோ அப்படி ஊழியம் செய்யவேண்டும்.

புது சிருஷ்டி
2கொரி 5 : 16,17

2கொரி 5:16. ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.

2கொரி 5:17. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

நாம் கிறிஸ்துவுக்காகப் பிழைத்திருப்பதற்கு இரண்டு காரியங்கள் தேவைப்படுகிறது. அவையாவன: 1. புது சிருஷ்டி 2. ஒப்புரவாகுதல் இந்த உலகத்தின் ஆசாபாசங்களுக்கு மரித்து, கிறிஸ்துவுக்காக பிழைத்திருப்பதே புதிய சிருஷ்டி. இது வரையிலும் நம்முடைய இருதயத்தில் உலக சிநேகம் இருந்தது. நாம் புது சிருஷ்டி ஆனபோதோ நம்முடைய இருதயங்களில் கிறிஸ்துவின் மீதுள்ள அன்பே நிரம்பியிருக்கிறது. இந்த உலகம் நம்முடைய காலுக்கு அடியில் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தார்கள். ஆனாலும் இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம் என்று பவுல் சொல்லுகிறார். அவருடைய ஆவிக்குரிய பிரசன்னத்தில் நாம் ஜீவிக்கவேண்டும். இந்தப் பிரசன்னத்தில் நமக்குக் கிடைக்கிற ஆறுதலில் சந்தோஷமடையவேண்டும்.

நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும்போது நம்முடைய இருதயம் மாற்றமடைகிறது. நாம் புதுசிருஷ்டியாயிருக்கிறோம். நம்முடைய ஜீவியம் புதிதாயிருப்பது மாத்திரமல்ல, நம்முடைய இருதயமும் சுபாவமும் புதிதாகிறது. பழையவைகள் ஒழிந்துபோகிறது. எல்லாம் புதிதாகிறது.

ஒப்புரவாகுதல்
2கொரி 5 : 18-21

2கொரி 5:18. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

2கொரி 5:19. அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

2கொரி 5:20. ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

2கொரி 5:21. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

ஒப்புரவாகுதல் என்று சொல்லும்போது, ஏற்கெனவே மீறுதல் இருந்திருக்கிறது என்பதும் தெளிவாகிறது. சண்டையிட்டுக் கொள்பவர்கள்தான் ஒப்புரவாகவேண்டும். நட்பை முறித்துக்கொள்கிறவர்கள் தான் ஒப்புரவாகவேண்டும். உடன்படிக்கையை மீறுகிறவர்கள் தான் ஒப்புரவாகவேண்டும். மனுஷருடைய பாவத்தினால் நாமும் தேவனுடைய உடன்படிக்கையை மீறியிருக்கிறோம். தேவனுக்குச் சத்துருக்களாகயிருக்கிறோம். ஆனால் தேவனோ இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்மோடு ஒப்புரவாகியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் மத்தியஸ்தராகயிருக்கிறார். தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மை தம்மோடே ஒப்புரவாக்கியிருக்கிறார். ஒப்புவாக்குதலின் உபதேசத்தை தேவன் அப்போஸ்தலரிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். அப்போஸ்தலரின் ஊழியம் ஒப்புரவாக்குதலின் ஊழியமாகயிருக்கிறது. மனுஷனை தேவனோடு ஒப்புரவாகுமாறு வேண்டிக்கொள்வதே அப்போஸ்தலரின் ஊழியம்.

தேவன் நம்மோடு ஒப்புரவாகவேண்டுமென்று விரும்புகிறார். நாமும் தேவனோடு ஒப்புரவாகவேண்டும் என்று விரும்பவேண்டும். நாம் தேவனோடு ஒப்புரவாகவில்லையென்றால், தேவனுக்கு ஒரு இழப்புமில்லை. ஆனாலும் தேவன் நம்மோடு ஒப்புரவாகவேண்டுமென்றே விரும்புகிறார். நாம் தேவனோடு ஒப்புரவாவதலினால் தேவனுக்கு ஒரு நன்மையுமில்லை. ஆனாலும் அவர் தம்முடைய ஊழியக்காரர் மூலமாக, நாம் அவரோடு ஒப்புரவாகவேண்டுமென்று விரும்புகிறார்.

தேவன் ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை தம்முடைய ஊழியக்காரர்களிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். தேவன் அவர்களைக்கொண்டு மனுஷருக்குப் புத்திசொல்லுகிறார். ஊழியக்காரர்கள் கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதிகளாயிருக்கிறார்கள். தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் ஜனங்களை வேண்டிக்கொள்கிறார்கள்.

நம்முடைய மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து பாவம் அறியாதவர். அவர் பரிசுத்தர். தேவன் பாவம் அறியாத இயேசுகிறிஸ்துவை நமக்காகப் பாவமாக்கினார். நம்முடைய பாவத்திற்கு பிராயச்சித்தம் உண்டாவதற்காக, இயேசுகிறிஸ்துவையே பாவநிவாரண பலியாக ஆக்கினார். நாம் இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாக வேண்டுமென்பதற்காகவே, இயேசுகிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப்பட்டார். கிறிஸ்துவிடம் ஒரு பாவமும் இல்லாதிருந்தபோதும், அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார்.

நமக்குச் சொந்தமாக எந்த நீதியும் இல்லாதிருக்கிறபோதிலும், நாம் இயேசுகிறிஸ்துவில் தேவனுடைய நீதியாக ஆக்கப்பட்டிருக்கிறோம். இது நமக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். நமக்குண்டாயிருக்கிற தேவனுடைய நீதி நம்முடைய சுயமுயற்சியினாலோ, சுயபக்தியினாலோ, சுயபுத்தியினாலோ உண்டாகவில்லை. இயேசுகிறிஸ்து நமக்காக பலியாகச் செலுத்தப்பட்டதினால், இந்தச் சிலாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. தேவனுக்கு முன்பாக பாவிகளாகயிருந்த நாம், இப்போது இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகயிருக்கிறோம்.

6 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்குப் புத்திசொல்லுகிறார் (2கொரி 6:1-10). விசுவாசிகள் அந்நிய நுகத்திலே, அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருக்க வேண்டும் (2கொரி 6:11-18).

புத்திசொல்லுகிறோம் 2கொரி 6 : 1-10

2கொரி 6:1. தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.

2கொரி 6:2. அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச்செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்கிறேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்.

2கொரி 6:3. இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும் எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்.

2கொரி 6:4. மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும்,

2கொரி 6:5. அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும்,

2கொரி 6:6. கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும்,

2கொரி 6:7. சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும்,

2கொரி 6:8. கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப் பட்டாலும் நிஜஸ்தராகவும்,

2கொரி 6:9. அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப் பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப் படுகிறவர்கள் என்னப் பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும்,

2கொரி 6:10. துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்.

அப்போஸ்தலர் பவுல், தான் பிரசங்கம் செய்த எல்லா ஜனங்களுக்கும், பொதுவான புத்திமதிகளை இங்கு கூறுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், சுவிசேஷத்தைக் கேட்கிற எல்லோருக்கும் தேவகிருபையினால் நிறைந்து புத்தி சொல்லவேண்டும். அவர்கள் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளுமாறு அவர்களுக்கு ஆலோசனை சொல்லவேண்டும். அப்போஸ்தலர்களுக்கு கனமான ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இயேசு கிறிஸ்துவின் உடன்வேலையாட்களாக யிருக்கிறார்கள். அவர்கள் தேவனோடு ஊழியம் செய்தாலும், தேவனுக்குக் கீழ்ப்படிந்தே ஊழியம் செய்கிறார்கள்.

ஊழியக்காரர்கள் விசுவாசத்தோடும் உண்மையோடும் ஊழியம் செய்யவேண்டும். அப்போதுதான் தேவன் அவர்களோடுகூட கிரியை செய்வார். அவர்களுடைய ஊழியம் பிரயோஜனமுள்ளதாகயிருக்கும். அவர்கள் கனிதரும் ஊழியத்தைச் செய்வார்கள்.

சுவிசேஷமானது முரட்டுத்தனமாக அறிவிக்கப்படவில்லை. மென்மையான ஆவியினால் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. அன்பும் கிருபையும் நம்முடைய வார்த்தையில் நிரம்பியிருக்கவேண்டும். விசுவாசிகள் தேவனுடைய கிருபையை விருதாவாய் பெறாதபடிக்கு அவர்களுக்கு அன்புடன் புத்திசொல்லவேண்டும். ஊழியக்காரரிடத்தில் எரிச்சலின் ஆவியோ, கோபத்தின் ஆவியோ இருக்கக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியரிடம் அன்பாகவும், மென்மையாகவும் பேசுகிறார். அவர்களுக்கு பிரயோஜனமுள்ள புத்திமதிகளைச் சொல்லுகிறார். தேவனுடைய கிருபை இப்போது தாராளமாய்க் கொடுக்கப்படுகிறது. இதைப் பெற்றுக்கொள்வதற்கு இதுவே ஏற்றவேளை. இந்த வேளையை நாம் அசட்டை செய்துவிடக்கூடாது. தேவனுடைய கிருபையைப் புறக்கணித்துவிடக்கூடாது. தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டாலும் அதை விருதாவாய்ப் பெற்றுக்கொள்ளக்கூடாது. தேவகிருபையை நமக்குப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தேவகிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவே ஏற்றவேளை என்று பவுல் சொல்லுகிறார். "இதோ, இப்பொழுதே அநுக்கிரகக்காலம், இப்பொழுதே இரட்சணியநாள்" என்று குறிப்பிடுகிறார். நாளையதினம் நமக்குரியதல்ல. நாளைதினத்தில் என்னென்ன சம்பவங்கள் நடைபெறும் என்பது நமக்குத் தெரியாது. ஆகையினால் நாம் இரட்சிக்கப்பட வேண்டிய நாள் இந்த நாள்தான். தேவனுடைய அநுக்கிரகத்தை பெற்றுக்கொள்ளவேண்டிய நாளும் இந்த நாள்தான்.

அப்போஸ்தலர் பவுலும் அவருடைய உடன்ஊழியரும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். தங்களுடைய ஊழியம் எந்தவிதத்திலும் குற்றப்படாதபடிக்கு மிகவும் கவனமாக ஊழியம் செய்கிறார்கள். யாதொன்றிலும் இடறல் உண்டாகாமல் கவனமாயிருக்கிறார்கள். எவ்விதத்திலும் தங்களை தேவஊழியக்காரராக விளங்கப் பண்ணுகிறார்கள்.

நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது சத்துரு நமக்கு விரோதமாக விரோதிகளை எழுப்பிவிடுவான். அவர்கள் நம்மை குற்றப்படுத்தாதபடிக்கு மிகவும் எச்சரிப்போடிருக்கவேண்டும். நாம் யாருக்கும், யாதொன்றிலும் இடறலாயிருக்கக்கூடாது. விசுவாசிகளும், விசேஷமாக ஊழியக்காரரும் யாருக்கும் இடறல் இல்லாமல் ஜீவிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுலும் அவருடைய உடன்ஊழியரும், எல்லா விஷயத்திலும் தங்களை தேவஊழியராக விளங்கப்பண்ணுகிறார்கள். தங்களை உண்மையுள்ள ஊழியக்காரர்களாக நிரூபிக்கிறார்கள். தேவஊழியக்காரர் என்று நமக்குநாமே சொல்லிக்கொள்வது எளிது. மற்றவர்கள் நம்மை தேவஊழியக்காரர் என்று சொல்லவேண்டும். தேவனும் நம்மை தம்முடைய ஊழியக்காரர் என்று அங்கீகரிக்கவேண்டும். தேவன் தன்னை அங்கீகரிக்கவேண்டுமென்று, பவுல் எல்லா விஷயங்களிலும் மிகுந்த எச்சரிப்போடிருக்கிறார்.

பவுலுக்கு உபத்திரவங்கள் உண்டாயிற்று. அதில் மிகுந்த பொறுமையோடிருக்கிறார். அவர் பல பாடுகளை அனுபவித்தார். பல வேதனைகளைத் தாங்கிக்கொண்டார். அவருக்கு நெருக்கங்களும் இடுக்கங்களும் உண்டாயிற்று. இவற்றின் மத்தியிலும் அவர் மிகுந்த பொறுமையோடு, கர்த்தருக்காக ஊழியம் செய்தார். அவருக்கு அடிகள் கிடைத்தது. பவுலை காவல்களில் வைத்தார்கள். அவருக்கு விரோதமாக கலகங்கள் எழும்பிற்று. இவையெல்லாவற்றிலும் பவுல் மிகுந்த பொறுமையினால் தன்னை தேவஊழியக்காரர் என்று விளங்கப்பண்ணியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அதிகப் பிரயாசத்தோடு உபதேசம் செய்தார். பல இடங்களுக்கு பிரயாசப்பட்டு பிரயாணம் செய்து சுவிசேஷ ஊழியம் செய்தார். விழித்திருந்து ஜெபித்தார். உபவாசித்து ஜெபித்தார்.

கர்த்தருக்குத் தங்களை உண்மையுள்ள தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறவர்கள், தங்களுக்கு உண்டாகும் உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கங்களிலும், அடிகளிலும் காவல்களிலும், கலகங்களிலும் மிகுந்த பொறுமையோடிருப்பார்கள். தேவனுடைய ஊழியத்தை சந்தோஷமாய்ச் செய்வார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது பதட்டமடையாமல் சமாதானத்தோடிருப்பார்கள். தேவனுடைய சித்தத்தை பொறுமையோடு நிறைவேற்றுவார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர் களிடத்தில் நற்குணங்கள் நிரம்பியிருக்கவேண்டும். இவர்கள் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறவர்கள். இவர்களுடைய ஜீவியத்தில் நற்குணம் வெளிப்படவேண்டும். கற்புள்ளவர்களாக இருக்கவேண்டும். பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். பரிசுத்தமில்லாமல் தேவபக்தியில்லை. இவர்களிடத்தில் தேவனைப்பற்றிய அறிவு காணப்படவேண்டும். தேவனைப்பற்றிய மெய்யான அறிவு இல்லாமல், பக்திவைராக்கியமாகயிருப்பது, மதியீனமாகவே இருக்கும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நீடிய சாந்தத்திலும், தயவிலும் நிரம்பியிருக்கவேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். மனுஷருடைய கடினமான இருதயங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும். அவர்களுடைய கரங்களிலிருந்து ஊழியக்காரருக்கு கடினமான தண்டனை கிடைக்கும்போது, அதை நீடிய சாந்தத்தோடும், நீடிய பொறுமையோடும் சகித்துக்கொள்ளவேண்டும்.

தேவஊழியக்காரர்கள் பரிசுத்த ஆவியில் நிரம்பியிருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் அவர்களை வழிநடத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு, ஊழியக்காரர்கள் கீழ்ப்படிந்து, இயேசுகிறிஸ்துவின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். ஊழியக்காரரிடத்தில் மாயமற்ற அன்பு காணப்படவேண்டும். தேவனுடைய சத்திய வார்த்தை அவர்களை ஆளுகை செய்யவேண்டும். இவர்களுடைய இருதயம் சத்திய வசனத்தினால் நிரம்பியிருக்கவேண்டும். தேவனுடைய பலத்தைப் பெற்றிருக்கவேண்டும். திவ்விய பலத்தில் நிரம்பியிருக்கவேண்டும்.

கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் ஒரு போர்வீரனைப்போல ஆவிக்குரிய யுத்தம்பண்ணவேண்டும். போர்வீரனுக்குரிய ஆயுதங்களைத் தரித்திருக்கவேண்டும். நீதியாகிய வலது இடது பக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கவேண்டுமென்று பவுல் புத்திசொல்லுகிறார். தன் ஊழியக்காரர் வலதுகரத்திலுள்ள ஆயுதத்தினால் சோதனைக்கு விரோதமாக யுத்தம்பண்ணி தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும். பணஆசை, உலக ஆசை, பொருளாசை போன்ற உலகப்பிரகாரமான காரியங்கள் மூலமாகவும், மாம்ச இச்சையின் மூலமாகவும் வரும் சோதனைகளுக்கு விரோதமாக ஊழியக்காரர்கள் யுத்தம் பண்ணவேண்டும். இடதுகரத்திலுள்ள ஆயுதத்தினால் சத்துருவின் சோதனையை மேற்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லா சூழ்நிலையிலும் நல்நடத்தை யுடையவர்களாக இருக்கவேண்டும். இவர்களுடைய குணம் வேளைக்குவேளை மாறக்கூடாது. சூழ்நிலைக்குத் தகுந்தவாறு வேஷம் போடக்கூடாது. ஊழியக்கார ரிடத்தில் மாய்மாலம் இருக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரருக்கு கனமும் வரும். கனவீனமும் வரும். அவர்களுக்கு நற்கீர்த்தியும் உண்டாகும். துர்க்கீர்த்தியும் உண்டாகும். ஊழியக்காரருக்கு வெவ்வேறு விதமான அனுபவங்கள் உண்டானாலும், எல்லா சூழ்நிலைகளிலும் அவர்கள் தேவனுக்கு உண்மையாய் ஊழியம் செய்யவேண்டும்.

சோதனையைத் தாங்கிக் கொள்வதற்கு நமக்கு தேவகிருபை தேவை. கனத்தினால் நமக்கு சோதனை வரும்போது, புகழ்ச்சி நம்மை அடிமைப்படுத்திவிடக்கூடாது. பெருமையில்லாமல் நற்கீர்த்தி பெறவேண்டும். சில சமயங்களில் நமக்கு கனவீனமுண்டாகலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட நமக்கு துர்க்கீர்த்தி உண்டாகாமல் கனவீனத்தைத் தாங்கிக்கொள்ளவேண்டும்.

ஜனங்கள் ஊழியக்காரர்களை வெவ்வேறு விதமாக பேசுவார்கள். ஒரு சிலர் ஊழியக்காரர்களை நல்லவர்கள் என்பார்கள். சிலர் கெட்டவர்கள் என்பார்கள். ஒரு சிலர் ஊழியக்காரர்களை உண்மையுள்ளவர்கள் என்பார்கள். வேறு சிலரோ அவர்களை எத்தர்கள் என்றும், ஏமாற்றுக்காரர்கள் என்றும் சொல்லுவார்கள். ஊழியக்காரர்கள் உலகத்தாருக்கு அறியப்படாதவர்களாக இருக்கிறார்கள். என்றாலும் இவர்கள் சபையிலுள்ள விசுவாசிகளால் நன்றாய் அறியப்பட்டவர்களாகயிருக்கிறார்கள்.

உலகப்பிரகாரமான ஜனங்கள் ஊழியக்காரரைப்பார்த்து சாகிறவர்கள் என்றோ, உயிரில்லாதவர்கள் என்றோ, செத்துப்போனவர்கள் என்றோ சொல்லலாம். ஆனால் ஊழியக்காரர்களோ உயிரோடிருக்கிறவர் களாகவே இருக்கிறார்கள். ஊழியக்காரர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். தேசத்தின் வெவ்வேறு சட்டப்பிரிவுகளின் பிரகாரம், ஊழியக்காரர்மீது பொய்யாய்க் குற்றம் சுமத்தப்பட்டு, தண்டிக்கப்படுகிறார்கள். ஊழியக்காரர்கள் உலகத்தாரால் தண்டிக்கப்பட்டாலும், அவர்கள் கொல்லப்படாதவர் களாகவே இருக்கிறார்கள்.

ஊழியக்காரர்களைத் துக்கப் படுகிறவர்கள் என்று சொல்லுகிறார்கள். சந்தோஷமில்லாதவர்கள் என்றும், இந்த உலகத்தை சந்தோஷமாய் அனுபவிக்கத் தெரியாதவர்கள் என்றும் ஊழியக்காரர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். ஊழியக்காருடைய சிநேகிதர்களும், அவர்களைப் போலவே சந்தோஷமில்லாதவர்கள் என்றும், துக்கமுள்ளவர்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளோ தேவனுடைய சமுகத்தில் எப்போதும் சந்தோஷப்பட்டு களிகூருகிறார்கள். உலகத்தாரிடம் இருப்பது உலகப்பிரகாரமான சந்தோஷம். இது மாயையான சந்தோஷம். இது சீக்கிரத்தில் அழிந்துபோகும். கர்த்தருடைய பிள்ளைகளிடத்திலிருப்பதோ மெய்யான சந்தோஷம். இது நித்தியமானது.

உலகத்தார் ஊழியக்காரரைத் தரித்திரர் என்று சொல்லுகிறார்கள். ஊழியக்காரருக்கு பொருள் சம்பாதிக்கத் தெரியாது என்றும், அவர்களிடத்தில் சொத்துக்கள் எதுவும் இல்லையென்றும், அவர்கள் தரித்திரர் என்றும் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்கள். ஊழியக்காரர்கள் தரித்திரராகயிருந்தாலும் அநேகரை ஐசுவரியவான் களாக்குகிறவர்களாக இருக்கிறார்கள். அநேகருடைய ஐசுவரியத்திற்கு இவர்களே காரணமானவர்கள்.

ஊழியக்காரர்களிடத்தில் ஒன்றுமில்லை என்று உலகத்தார் சொல்லுகிறார்கள். ஆனால் ஊழியக்காரர்களோ சகலத்தையும் உடையவர்களாக தங்களை விளங்கப் பண்ணுகிறார்கள். உலகப்பிரகாரமான ஐசுவரியம் எதுவும் ஊழியக்காரரிடத்தில் இல்லை. ஆனால் இவர்கள் கிறிஸ்துவுக்குள் சகலத்தையும் உடையவர்கள். உலகத்தில் இவர்கள் தரித்திரராகயிருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஐசுவரியவான்களாக இருக்கிறார்கள்.

விசுவாசிகளுக்கு இவ்வாறு பல்வேறுவிதமான சூழ்நிலைகள் உண்டாகலாம். நாம் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவரை மகிமைப்படுத்தவேண்டும். அவர் நமக்கு போதுமானவராகயிருக்கிறார் என்று அங்கீகரித்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும்.

அவிசுவாசிகள்
2கொரி 6 : 11-18

2கொரி 6:11. கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது, எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது.

2கொரி 6:12. எங்கள் உள்ளம் உங்களைக்குறித்து நெருக்கமடையவில்லை, உங்கள் உள்ளமே எங்களைக்குறித்து நெருக்கமடைந்திருக்கிறது.

2கொரி 6:13. ஆதலால் அதற்குப் பதிலீடாக நீங்களும் பூரிப்பாகுங்களென்று, பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

2கொரி 6:14. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?

2கொரி 6:15. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

2கொரி 6:16. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள்ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

2கொரி 6:17. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

2கொரி 6:18. அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

விசுவாசிகள் அவிசுவாசிகளோடு அந்நிய நுகத்திலே பிணைக்கப்படாதிருக்க வேண்டும் என்று பவுல் எச்சரிக்கிறார். இந்த எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்வதற்கு முன்பாக, பவுல் கொரிந்தியரோடு அன்பான வார்த்தைகளினால் பேசுகிறார் (2கொரி 6:11-13). தன்னுடைய அன்பையும், கரிசனையையும் அவர்களுக்கு விளங்கப்பண்ணுகிறார். "கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களேடே பேச திறந்திருக்கிறது, எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது" என்று கொரிந்தியரிடம் அன்போடு சொல்லுகிறார்.

தங்களுடைய உள்ளம் கொரிந்தியரைக் குறித்து நெருக்கமடையவில்லை என்றும், அவர்களுடைய உள்ளமே தங்களைக் குறித்து நெருக்கமடைந்திருப்பதாகவும் பவுல் சொல்லுகிறார். தங்களால் முடிந்த எல்லா ஊழியங்களையும், பவுலும் அவருடைய உடன்ஊழியரும் கொரிந்தியர் மத்தியில் நிறைவேற்ற ஆவலாயிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் ஊழியம் நிறைவேறவில்லையென்றால் அதற்கு ஊழியக்காரர்கள் காரணமல்ல. அதற்கு கொரிந்தியரே காரணம். ஏனெனில் அவர்கள் தங்கள் இருதயங்களில் நெருக்கமடைந் திருக்கிறார்கள். ஊழியக்காரரின் இருதயமோ பூரித்திருக்கிறது. கொரிந்தியருடைய இருதயமோ நெருக்கமடைந்திருக்கிறது.

பவுல் கொரிந்தியருக்கு புத்திசொல்லும்போது, பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல சொல்லுகிறார். அவர்கள் தங்கள் உள்ளத்தில் நெருக்கமடையாமல், பூரிப்பாய் இருக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார். விசுவாசிகள் ஊழியக்காரர்களை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் ஊழியக்காரருடைய பிரசங்கச் செய்தியை, அவர்கள் தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்வார்கள். விசுவாசிகளுக்கு ஊழியக்காரர்கள்மீது வெறுப்பு உணர்வு இருக்குமென்றால், அவர்களுடைய செய்தியை விசுவாசிகள் தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பூரிப்பாய் இருக்கிற இருதயமே சத்தியத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளும்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியரிடத்தில் அன்போடு பேசிவிட்டு, அவர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளையும் சொல்லுகிறார். விசுவாசிகளாகிய கொரிந்தியர்கள் அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருக்கவேண்டும் என்று எச்சரிக்கிறார். நற்குணமுள்ளவர்கள் துன்மார்க்கரோடு சிநேகம் வைத்துக்கொள்ளக் கூடாது. தேவபக்தியுள்ளவர்கள் தேவனைத் தூஷிக்கிறவர்களோடு ஐக்கியமாயிருக்கக் கூடாது.

நல்லவர்களுடைய பழக்கத்தினால் தீயவர்கள் திருந்துவதற்கு வாய்ப்புள்ளது. அதைவிட அதிக வாய்ப்பு தீயவர்களுடைய பழக்கத்தினால் நல்லவர்கள் கெட்டுப்போவதற்கு உள்ளது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள் பிறரோடு மிகவும் எச்சரிப்போடு பழகவேண்டும். விசுவாசிகள் அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாதிருக்க வேண்டும். அவிசுவாசிகளோடும், துன்மார்க்கரோடும் சிநேகம் வைத்துக்கொள்வதை தவிர்க்கவேண்டும்.

அவிசுவாசிகளோடும், துன்மார்க்கரோடும் சாதாரணமாக பேசி பழகுவதில் தவறில்லை. ஆனால் அவர்களோடு பிணைக்கப்படக்கூடாது. அவர்களுடைய அந்நிய நுகத்தைக் குறித்து நாம் எச்சரிப்போடிருக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவின் நுகத்தைச் சுமக்கவேண்டியவர்கள். அந்நிய நுகத்தைச் சுமக்கும் பொறுப்பு நமக்கு உண்டாகக்கூடாது. இந்த விஷயத்தில் நாம் அவிசுவாசிகளோடு பங்காளிகளாகயிருக்கக் கூடாது. அவர்களுடைய விக்கிரகாராதனையில் பங்குபெறக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகள் நீதியுள்ளவர்கள். நீதிக்குரிவர்கள். அவிசுவாசிகளோ அநீதியுள்ளவர்கள். அநீதிக்குரியவர்கள். நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமில்லை. விசுவாசிகள் இந்த உலகத்தில் கர்த்தருக்கு ஒளியாகயிருக்கிறார்கள். அவிசுவாசிகளோ இருளாகயிருக்கிறார்கள். ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமில்லை.

கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவில்லை. விசுவாசியும் அவிசுவாசியும் சமாதானத்தோடு ஐக்கியமாயிருக்க முடியாது. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவில்லாமல் இருப்பதினால், அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கில்லை.

விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய ஆலயமாகயிருக்கிறோம். நம்முடைய தேவன் ஜீவனுள்ளவர். தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமில்லை. அவிசுவாசிகளோடு விக்கிரகாராதனையில் ஐக்கியமாயிருப்பது, விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்கும். இது மிகவும் ஆபத்தானது. ஆகையினால் விசுவாசிகள் அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாதிருக்க வேண்டும்.

விசுவாசிகள் அந்நிய நுகத்திலே அவிசிவாசிகளோடு பிணைக்கப் படாதிருப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்று பவுல் கர்த்தருடைய ஆலோசனையை இங்கு சொல்லுகிறார். விசுவாசிகள் அவிசுவாசிகள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருக்க வேண்டுமென்று பவுல் கர்த்தருடைய ஆலோசனையைச் சொல்லுகிறார். நம்மை எந்த விஷயத்திலும் அசுத்தப்படுத்திக்கொள்ளக் கூடாது. அதிலும் விசேஷமாக பாவத்தினால் நம்மை அசுத்தப்படுத்தக்கூடாது. பாவிகளோடு ஐக்கியமாகயிருப்பதினால், நாமும் பாவத்தினால் அசுத்தப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இதைத் தவிர்ப்பதற்கு பாவிகளின் நடுவிலிருந்து விசுவாசிகளாகிய நாம் புறப்பட்டு பிரிந்துபோய்விடவேண்டும். அவர்களுடைய அசுத்தமான பாவங்களில் நாம் பங்குபெறாதிருக்கவேண்டும்.

விசுவாசிகளுக்குத் தேவன் அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். ஏராளமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார். அவர் நமக்குப் பிதாவாகயிருக்கிறார். சர்வவல்மையுள்ள கர்த்தருக்கு நாம் குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கிறோம். இது விசுவாசிகளாகிய நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இவ்வளவு ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தும், நாம் அவிசுவாசிகளோடு அந்நிய நுகத்திலே பிணைக்கப்பட்டு, பாவம் செய்தால், கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்களாகயிருப்போம்.

நம்முடைய கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பயபக்தியோடு அவரைச் சேவிக்கவேண்டும். பரிசுத்த அலங்காரத்துடனே அவரைத் தொழுதுகொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவக்கறைகளெல்லாம் கழுவப்பட வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். கர்த்தரை விசுவாசிக்கிற நாம், அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடு பிணைக்கப்பட்டு, நம்மை மறுபடியும் அசுத்தப்படுத்திவிடக்கூடாது.

7 அதிகாரம்

விசுவாசிகள் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (2கொரி 7:1-4). தீத்து வந்ததினாலே தனக்குண்டான ஆறுதலைப்பற்றி பவுல் எழுதுகிறார் (2கொரி 7:5-7). கொரிந்தியர் மனந்திரும்புவதினால் பவுலுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. கொரிந்தியரும் தானும் ஆறுதலடைந்திருப்பதாக சொல்லி பவுல் இந்த அதிகாரத்தை நிறைவு செய்கிறார் (2கொரி 7:12-16).

பரிசுத்தமாகுதல்
2கொரி 7 : 1-4

2கொரி 7:1. இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம்.

2கொரி 7:2. எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள் ஒருவனுக்கும் அநியாயஞ் செய்யவில்லை, ஒருவனையும் கெடுக்கவில்லை, ஒருவனையும் வஞ்சிக்கவில்லை.

2கொரி 7:3. உங்களைக் குற்றவாளிகளாக்கும் பொருட்டாக இப்படி நான் சொல்லுகிறதில்லை; முன்னே நான் சொல்லியபடி, உங்களுடனேகூடச் சாகவும் கூடப் பிழைக்கவுந்தக்கதாக எங்களிருதயங்களில் நீங்கள் இருக்கிறீர்கள்.

2கொரி 7:4. மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன்; உங்களைக் குறித்து மிகவும் மேன்மை பாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகலஉபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்.

ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த மாயிருக்கவேண்டும். பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பாவத்திற்கு மரித்திருக்கிறோம். மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். சரீரத்தினால் பாவம் செய்யும்போது மாம்சம் அசுத்தமாயிருக்கும். இவை மாம்சத்தின் பாவங்களாகும். இதுபோல நம்முடைய ஆவியின் பாவங்களும் உண்டு. இவ்விரண்டு அசுத்தங்களையும் நாம் சுத்தப்படுத்தவேண்டும்.

பாவத்திற்கு மரித்திருக்கிற நாம் நீதிக்கும் பரிசுத்தத்திற்கும் ஜீவிக்க வேண்டும். நம்முடைய பரிசுத்தத்தில் பரிபூரணம் இருக்கவேண்டும். இப்போதுள்ள பரிசுத்தம் போதுமென்று அசதியாயிருந்துவிடக்கூடாது. பரிசுத்த மாகுதலை தேவபயத்தோடே பூரணப் படுத்தவேண்டும். பாவமில்லாத பரிபூரணமான பரிசுத்தத்தை நோக்கி நாம் ஒவ்வொரு நாளும் முன்னேறிச்செல்லவேண்டும். தெய்வபய மில்லாமல் பரிசுத்தமில்லை. ஆகையினால் தெய்வபயத்தோடு, பரிசுத்தமாகுதலைப் பூரணப்படுத்தவேண்டும்.

சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கவேண்டும். தங்களுக்கு இடங்கொடுக்க வேண்டுமென்று பவுல் சொல்லுகிறார். சுவிசேஷ ஊழியக்காரர்களைக் கனம் பண்ணாதவர்கள் சுவிசேஷத்தையும் கனம்பண்ணமாட்டார்கள்.

ஊழியக் காரர்களை அசட்டை பண்ணுகிறவர்கள் சுவிசேஷத்தையும் அசட்டைபண்ணு வார்கள். பவுல் ஒருவனுக்கும் அநியாயம் செய்யவில்லை. ஒருவனையும் கெடுக்கவில்லை. ஒருவனையும் மன்னிக்கவில்லை.

கொரிந்தியர்கள் தன்னுடைய இருதயத்தில் நிரம்பியிருப்பதாகப் பவுல் சொல்லுகிறார். பவுல் அவர்கள்மீது அன்பாயிருக்கிறார். அவர்களுடனேகூட சாகவும் ஆயத்தமாயிருக்கிறார். கொரிந்துவிலே விசுவாசிகளினிமித்தம் மரித்துப்போகவும் பவுல் ஆயத்தத் தோடிருக்கிறார். அவர்களுடனேகூட சாகவும், கூடப்பிழைக்கவும் பவுல் விருப்பமாயிருக்கிறார்.

கொரிந்தியர்மீது பவுலுக்கு மிகுந்த அன்பு இருக்கிறது. ஆகையினால்தான் பவுல் இவ்வளவு தைரியமாகத் தன்னுடைய அன்பை வெளிப்படுத்துகிறார். மிகுந்த தைரியத்தோடே அவர்களோடு பேசுவதாக எழுதுகிறார். அவர்களைக் குறித்து மிகவும் மேன்மை பாராட்டுகிறார். ஆறுதலால் நிறைந்திருக்கிறார். ஊழியத்தில் பவுலுக்கு ஏராளமான உபத்திரவங்கள் உண்டாயிற்று. விசுவாசிகள் மீதுள்ள அன்பினால், பவுல் சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறார்.

தீத்து
2கொரி 7 : 5-7

2கொரி 7:5. எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள்சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப் பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன.

2கொரி 7:6. ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார்.

2கொரி 7:7. அவன் வந்ததினாலேமாத்திரமல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், என்னைப்பற்றி உங்களுக்கு உண்டான பக்திவைராக்கியத்தையும் அவன் கண்டு, உங்களால் அடைந்த ஆறுதலைத் தெரியப் படுத்தினதினாலும், நானும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்.

துரோவாவிலே தீத்து பவுலை வந்து சந்திக்கவில்லை. பவுல் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, அவருடைய சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாதிருந்தது. மக்கெதோனியாவிலே தீத்து பவுலை உடனே வந்து சந்திக்கவில்லை. இதனால் பவுலுக்கு எப்பக்கத்திலேயும் உபத்திரவமுண்டாயிற்று. புறம்பே போராட்டங்களும் உள்ளே பயங்களும் இருந்ததாகப் பவுல் எழுதுகிறார்.

இதன்பின்பு தீத்து பவுலிடத்திற்கு வருகிறார். அவர் வந்ததினால் பவுலுக்கு ஆறுதல் உண்டாயிற்று. இந்த ஆறுதலைப்பற்றிச் சொல்லும்போது தேவன் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிறவர் என்றும், அவர் தீத்து வந்ததினால் தங்களுக்கு ஆறுதல் செய்ததாகவும் பவுல் எழுதுகிறார். தீத்து கொரிந்தியரிடத்திலிருந்து பவுலிடத்திற்கு வந்திருக்கிறார். கொரிந்தியரிடமிருந்து நற்செய்தியைக் கொண்டு வந்திருக்கிறார். அந்தச் செய்தி பவுலுக்கு மிகுந்த ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறது.

தீத்து கொரிந்தியரால் ஆறுதலடைந் திருக்கிறார். இந்தச் செய்தியைக் கேட்டு பவுலும் ஆறுதலடைகிறார். அதிக சந்தோஷப்படுகிறார். இவையெல்லா வற்றிற்கும் தேவனே காரணமென்று சொல்லி, அவரைத் துதிக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு தேவன் ஆறுதல் செய்கிறவர்.

தீத்து வந்ததினால் தேவனே தங்களுக்கு ஆறுதல் செய்தததாக, பவுல் தேவனைத் துதிக்கிறார்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் வாஞ்சையோடிருக்கிறார்கள். பவுலைக்குறித்து வைராக்கியத்தோடிருக்கிறார்கள். தீத்து இதைக்கண்டு மிகுந்த ஆறுதலடைந்திருக்கிறார். தான் அடைந்த ஆறுதலை பவுலுக்குத் தெரியப்படுத்துகிறார். இதனால் பவுலும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப் படுகிறார்.

மனந்திரும்புதல்
2கொரி 7 : 8-11

2கொரி 7:8. ஆதலால் நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத் துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டிருந்தும், இப்பொழுது மனஸ்தாபப்படுகிறதில்லை.

2கொரி 7:9. இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப் பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப் படாத படிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே.

2கொரி 7:10. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.

2கொரி 7:11. பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே, அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ் சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்தி வைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்.

கொரிந்தியரின் மனந்திரும்புதலைக் கேள்விப்பட்டு பவுல் மிகுந்த சந்தோஷமடைகிறார். தன்னுடைய நிருபத்தினால் பவுல் கொரிந்தியரைத் துக்கப்படுத்தியிருக்கிறார். தன்னுடைய நிருபம் அவர்களைத் துக்கப்படுத்தினது என்று கண்டு பவுலும் மனஸ்தாபப்பட்டிருக்கிறார். ஆனால் இப்பொழுது தான் மனஸ்தாபப்படவில்லை என்று அறிவிக்கிறார். இப்போது மனஸ்தாபப்படுவதற்குப் பதிலாக சந்தோஷப்படுகிறார். ஏனெனில் கொரிந்தியர்கள் மனந்திரும்புகிறதற்கு ஏதுவாகத் துக்கப்பட்டார்கள். அதற்காக பவுல் சந்தோஷப்படுகிறார்.

தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. இந்தத் துக்கம் நம்முடைய பாவத்தினிமித்தம் உண்டாயிற்று. இது தேவனுக்கேதுவான துக்கம் என்று அழைக்கப்படுகிறது. தேவனுக்கேதுவான துக்கம் முடிவில் மனந்திரும்புதலை உண்டாக்கும். மனுஷருக்கு லௌகீக துக்கமும் உண்டு. லௌகீக துக்கம் மரணத்தை உண்டாக்கும். உலகப்பிரகாரமான காரியங்களுக்காக துக்கப்படுகிறவர்கள், தங்கள் துக்கத்தில் மூழ்கி, சீக்கிரத்தில் மரித்துப்போவார்கள். ஆனால் தேவனுக்கேற்ற துக்கம் உடையவர்களோ ஜீவனைப் பெறுவார்கள்.

நாம் மனந்திரும்பவேண்டுமென்றால் நாம் செய்த பாவத்தை நினைத்து துக்கப்படவேண்டும். நம்மைத் தாழ்த்தவேண்டும். இவை இரண்டும் தேவனிடத்திலிருந்தே வருகிறது. தேவனே எல்லா கிருபைகளையும் நமக்குத் தருகிறவர். எல்லாவற்றையும் கொடுக்கிற தேவன் தமக்கேற்ற துக்கத்தையும் கொடுக்கிறார். அது இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை நமக்குள் உண்டாக்குகிறது.

உண்மையான மனந்திரும்புதலினால் நல்ல விளைவுகள் உண்டாகும். இருதயம் மாற்றமடையும்போது நம்முடைய கிரியைகளும், சுபாவங்களும் மாற்றமடையும். நம்முடைய ஜீவியம் மாற்றமடையும். பாவத்தைக்குறித்து வெறுப்பும் பயமும் உண்டாகும். தேவனைக் குறித்து பயமுண்டாகும். பக்திவைராக்கியமான பயம் நம்மிடத்தில் காணப்படும்.

தேவனுக்கேற்ற துக்கம் நமக்குள் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்கும்போது, நமக்குள் இருக்கிற குழப்பங்கள் நீங்கும். தெளிவு பிறக்கும். அக்கரையில்லாமல், ஏனோதானோவென்று ஜீவித்த சுபாவம் மாறி, மிகுந்த ஜாக்கிரதையாய் ஜீவிக்க ஆரம்பிப்போம். பாவத்திற்கு விரோதமாக நமக்குள் வெறுப்பும் கண்டிப்பும் உண்டாயிருக்கும். எல்லாவிதத்திலும் நாம் நம்மை சுத்தவான்கள் என்று விளங்கப்பண்ணுவோம்.

நம்மிடத்தில் தேவனுக்கேற்ற துக்கம் வரும்போது, அது இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. பாவத்தைக்குறித்த குற்றவுணர்வு நம்மைவிட்டு நீங்குகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னித்திருக்கிறார் என்னும் நிச்சயம் நமக்குள் நிரம்பியிருக்கிறது. தேவனுக்கு முன்பாக சுத்த மனச்சாட்சியோடு நிற்பதற்கு தேவன் நமக்கு கிருபை கொடுக்கிறார்.

ஆறுதல்
2கொரி 7 : 12-16

2கொரி 7:12. ஆதலால் நான் உங்களுக்கு அப்படி எழுதியிருந்தும், அநியாயஞ் செய்தவனிமித்தமுமல்ல, அநியாயஞ் செய்யப்பட்டவனிமித்தமுமல்ல, தேவனுக்குமுன்பாக உங்களைக்குறித்து எங்களுக்கு உண்டாயிருக்கிற ஜாக்கிரதை உங்களுக்கு வெளிப்படும் பொருட்டே அப்படி எழுதினேன்.

2கொரி 7:13. இதினிமித்தம் நீங்கள் ஆறுதலடைந்ததினாலே நாங்களும் ஆறுதலடைந்தோம்; விசேஷமாகத் தீத்துவினுடைய ஆவி உங்கள் அனைவராலும் ஆறுதலடைந்ததினாலே, அவனுக்கு உண்டான சந்தோஷத்தினால் அதிக சந்தோஷப்பட்டோம்.

2கொரி 7:14. இப்படியிருக்க, உங்களுக்கு புகழ்ச்சியாய் நான் அவனுடனே சொன்ன யாதொன்றைக்குறித்தும் வெட்கப்பட மாட்டேன்; நாங்கள் சகலத்தையும் உங்களுக்குச் சத்தியமாய்ச் சொன்னதுபோல, தீத்துவுடனே நாங்கள் உங்களுக்குப் புகழ்ச்சியாய்ச் சொன்னதும் சத்தியமாக விளங்கிற்றே.

2கொரி 7:15. மேலும் நீங்களெல்லாரும் கட்டளைக்கு அமைந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் தன்னை ஏற்றுக் கொண்டதை அவன் நினைக்கையில், அவனுடைய உள்ளம் உங்களைப்பற்றி அதிக அன்பாயிருக்கிறது.

2கொரி 7:16. ஆகையால் எல்லாவிதத்திலும் உங்களைக்குறித்து எனக்குத் திடநம்பிக்கை உண்டாயிருக்கிறதென்று சந்தோஷப்படுகிறேன்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியரை ஆறுதல் படுத்துகிறார். அவர்களுக்கு பவுல் முதலாவது எழுதின நிருபத்தில், அவர்களைக் கடிந்துகொண்டார். பவுலுக்கு விரோதமாக ஒரு சிலர் அநியாயம் செய்தார்கள். ஒரு சிலருக்கு அநியாயம் செய்யப்பட்டது.

பவுல் அவர்களைக் குறித்து அதிக அக்கறை காண்பிக்கவில்லை. பவுல் தேவனுக்கு முன்பாக கொரிந்தியரைக் குறித்து மிகுந்த ஜாக்கிரதை யாயிருக்கிறார். அவர்கள்மீது அன்பாயிருக்கிறார். அந்த அன்பும் ஜாக்கிரதையும் வெளிப்படும் பொருட்டாகவே, பவுல் தன்னுடைய முதலாவது நிருபத்தில் கண்டிப்பான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்.

பவுல் அவர்களுக்கு கண்டிப்பான வார்த்தைகளில் உணர்த்தி எழுதியதினால் அவர்களும் ஆறுதலடைந் திருக்கிறார்கள். பவுலும் அவருடைய உடன்ஊழியரும் ஆறுதலடைந்தி ருக்கிறார்கள். தீத்துவும் ஆறுதலடைந் திருக்கிறார். தீத்துவினுடைய ஆவி கொரிந்தியர் அனைவராலும் ஆறுதலடைந்திருப்பதாக பவுல் இங்கு குறிப்பிடுகிறார். தீத்துவுக்குச் சந்தோஷ முண்டாயிற்று. அந்தச் சந்தோஷத்தைப் பார்த்து பவுலும் சந்தோஷப்படுகிறார்.

தீத்து கொரிந்தியரோடு கூடயிருந்த போது அவர் மிகுந்த ஆறுதலோடி ருந்தார். அதிக சந்தோஷத்தோடிருந்தார். கொரிந்தியர்கள் தீத்துவை அன்போடு ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் பயத்தோடும் நடுக்கத்தோடும் தீத்துவை ஏற்றுக்கொண்டார்கள். இதை நினைத்து தீத்துவின் உள்ளம் அவர்கள்மீது அதிக அன்பாயிருக்கிறது.

பவுல் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு மிகுந்த சந்தோஷப்படுகிறார். கொரிந்தியரைக் குறித்து பவுலுக்கு திடநம்பிக்கை உண்டாயிற்று. இதை நினைத்தும் அவர் அதிக சந்தோஷப்படுகிறார்.

தேவனுக்கேற்ற துக்கமுண்டாகும் போது, அதைத் தொடர்ந்து அதிக ஆறுதலும் சந்தோஷமுமுண்டாகும். பவுல் சந்தோஷப்படுகிறார். தீத்து சந்தோஷப் படுகிறார். கொரிந்தியர்கள் ஆறுதலடைந் திருக்கிறார்கள். பாவியான ஒரு மனுஷன் மனந்திரும்பும்போது, இந்தப் பூமியிலும் சந்தோஷமுண்டாகும், பரலோகத்திலும் சந்தோஷமுண்டாகும்.

பவுல் தீத்துவுடனே கொரிந்தியரைப் பற்றி புகழ்ச்சியாகச் சொல்லியிருக்கிறார். தான் சொன்னதைப்பற்றி பவுல் வெட்கப்படவில்லை. பவுல் கொரிந்தியரைப்பற்றி எப்படிச் சொன்னாரோ, அப்படியே அவர்கள் இருக்கிறார்கள். பவுல் சகலத்தையும் அவர்களுக்கு சத்தியமாய்ச் சொல்லி யிருக்கிறார். கொரிந்தியரைப்பற்றிப் புகழ்ச்சியாய்ச் சொன்னதும் சத்தியமா யிருக்கிறது. கொரிந்தியரைக் குறித்து பவுலுக்கு எல்லாவிதத்திலும் திடநம்பிக்கை உண்டாயிருக்கிறது. இதை நினைத்து பவுல் அதிக சந்தோஷப்படுகிறார்.

8 அதிகாரம்

பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்மஊழியத்தை கொரிந்தியர்கள் உற்காகமாய்ச் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். யூதேயாவிலும் எருசலேமிலும் மிகுந்த பஞ்சமுண்டாயிற்று. அங்குள்ள பரிசுத்த வான்களுக்கு உதவி தேவைப்படுகிறது. மக்கெதோனியா நாட்டு சபைகள் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுக்கிறார்கள். அவர்களைப்போலவே கொரிந்தியரும் உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

கொரிந்தியருடைய உபகாரங்களைச் சேகரிப்பதற்கு பவுல் தீத்துவை அனுப்புகிறார் (2கொரி 8:1-6). கொரிந்தியருடைய செல்வம் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களின் வறுமைக்கு உதவவேண்டுமென்று பவுல் விரும்புகிறார் (2கொரி 8:7-15). தர்மப்பணத்தை கொண்டுபோவதற்கு யாரெல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பவுல் எழுதுகிறார். தங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் மிகுதியான தர்மப்பணத்தைக் குறித்து ஒருவனும் தங்களை குற்றப்படுத்தாத படிக்கு பவுல் எச்சரிக்கையாயிருக்கிறார்.

மக்கெதோனியா நாட்டு சபைகள்
2கொரி 8 : 1-6

2கொரி 8:1. அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

2கொரி 8:2. அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப் படுகையில், கொடிய தரித்திரமுடை யவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்து வமாய்க் கொடுத்தார்கள்.

2கொரி 8:3. மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர் களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்.

2கொரி 8:4. தங்கள் உபகாரத்தையும், பரிசுத்த வான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி, அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள்.

2கொரி 8:5. மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.

2கொரி 8:6. ஆதலால் தீத்து இந்தத் தர்மகாரியத்தை உங்களிடத்தில் தொடங்கினபடியே, அதை முடிக்கவும் வேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டோம்.

பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்மஊழியத்தில் கொரிந்தியரும் பங்குபெறவேண்டும். மக்கெதோனியா நாட்டு சபைகள் இந்த ஊழியத்தில் உற்சாகமாய் பங்கு வகிக்கிறார்கள். பவுல் அவர்களை எடுத்துக்காட்டாகச் சொல்லி, இந்த ஊழியத்தில் கொரிந்தியரும் சந்தோஷமாய் ஈடுபடவேண்டுமென்று அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

மக்கெதோனியா நாட்டு சபையார் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மிகுந்த சந்தோஷத்தோடே கொடுத்தார்கள். நாம் தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவரிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதை நமக்குப் பயன்படுத்துவதுபோல, பிறருக்கும் கொடுத்து உதவி செய்யவேண்டும்.

பிறருக்குக் கொடுத்து உதவுகிற விஷயத்தில் அப்போஸ்தலர் பவுல் மக்கெதோனியா நாட்டு சபையாரைப் புகழ்ந்து பேசுகிறார். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்பட்டார்கள். கொடிய தரித்திரமுடையவர் களாயிருந்தார்கள். இவற்றிற்கு மத்தியிலும் அவர்கள் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே, மிகுந்த உதாரத்து வமாய்க் கொடுத்தார்கள்.

அவர்களுக்கு மிகுந்த உபத்திரவம் இருந்தாலும், பிறருக்குக் கொடுக்கும்போது மிகுந்த சந்தோஷமும் இருந்தது. அவர்களிடத்தில் மிகுதியான பொருள் இல்லை. கொடிய தரித்திரத்திலிருந்தார்கள். இவற்றிக்கு மத்தியிலும் தேவன் தங்களுடைய தேவைகளைச் சந்திப்பார் என்று எதிர்பார்த்து, தங்களிடத்திலுள்ளதை மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள்.

மக்கெதோனியா நாட்டு சபையார் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்த தினால், அவர்கள் அதிகமாய்க் கொடுப்பார்கள் என்று பவுல் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர்களோ தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க மனதுள்ளவர்களாயிருந்தார்கள். இதற்கு தான் சாட்சியாயிருப்பதாக பவுல் சொல்லுகிறார். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்மஊழியத்தையும், அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொள்ளும்படி, மக்கெதோனியா நாட்டு சபையார் அவர்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள். உண்மையான பக்தியிருக்குமிடத்தில் உண்மையான அன்பு இருக்கிறது.

மக்கெதோனியா நாட்டு சபையார் முதலாவதாக தங்களையே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். தங்களிடத்தில் உள்ளவை அனைத்தையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒப்புக்கொடுத் தார்கள். தேவனுடைய நாமமகிமைக்காக தங்களுடைய உபகாரங்களை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே பரிசுத்தப்படுத்தி, முதலாவது தங்களையே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத் தார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ முதலாவது நம்மையே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்காமல் நம்மால் எந்த ஊழியமும் செய்யமுடியாது. நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், நாம் யாருக்கும் பிரயோஜனமுள்ளவர் களாகயிருக்கமாட்டோம். முதலாவதாக நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வில்லையென்றால், நாம் செய்கிற தர்மஊழியம் தேவனுடைய சமுகத்தில் அங்கீகரிப்படாது.

தர்மகாரியத்தைப்பற்றி எழுதும்போது பவுல் தீத்துவைப்பற்றி எழுதுகிறார். தீத்து கொரிந்தியரிடத்தில் வந்து தர்மப் பணத்தைச் சேகரிக்கவேண்டுமென்று விரும்புகிறார். தீத்து ஏற்கெனவே கொரிந்தியர் மத்தியில் இந்தத் தர்மக்காரியத்தைத் தொடங்கியிருக்கிறார். தொடங்கிய அவரே அதை முடிக்கவும் வேண்டுமென்று பவுல் தீத்துவைக் கேட்டுக்கொள்கிறார்.

ஒருவர் ஒரு நல்ல காரியத்தை ஆரம்பிக்கும்போது, அதை முடிவு வரையிலும் பொறுப்போடு நிறைவேற்ற வேண்டும். அதற்கு அவர் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தர்மக்காரியத்தில் நல்லவர்கள் பங்குபெற வேண்டும்.

தகுதியுள்ளவர்கள் இந்த ஊழியத்திலிருந்து விலகிப்போய் விடக்கூடாது. சாட்சியுள்ளவர்கள் தர்மபணத்தைச் சேகரிக்கும்போது, விசுவாசிகள் உற்சாகமாகக் கொடுப்பார்கள்.

தர்மக்காரியத்திலும் பெருக வேண்டும் 2கொரி 8 : 7-15

2கொரி 8:7. அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக்காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மக்காரியத்திலும் பெருகவேண்டும்.

2கொரி 8:8. இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும்பொருட்டே சொல்லுகிறேன்.

2கொரி 8:9. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே.

2கொரி 8:10. இதைக்குறித்து என் யோசனையை உங்களுக்கு அறிவிக்கிறேன்; இதைச் செய்கிறதற்கு மாத்திரமல்ல, செய்யவேண்டுமென்று உற்சாகப்படுகிறதற்கும் ஒரு வருஷமாய் ஆரம்பம்பண்ணின உங்களுக்கு இது தகுதியாயிருக்கும்.

2கொரி 8:11. ஆகையால் அதை இப்பொழுது செய்து நிறைவேற்றுங்கள்; கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக.

2கொரி 8:12. ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்.

2கொரி 8:13. மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும் படியாகவே சொல்லுகிறேன்.

2கொரி 8:14. எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம்,

2கொரி 8:15. சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக.

கொரிந்தியர்கள் ஆவியின் வரங்களில் பெருகியிருக்கிறார்கள். நற்கிரியைகளில் பெருகியிருக்கிறார்கள். நற்குணத்தில் பெருகியிருக்கிறார்கள். விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும் பெருகியிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் மேலுள்ள அன்பிலும் பெருகியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் எல்லா காரியங்களிலும் பெருகியிருக்கிறது போல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகியிருக்கவேண்டுமென்று பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

இந்த நல்ல காரியத்தை கொரிந்தியர்கள் செய்யவேண்டுமென்று பவுல் அவர்களுக்குச் சொல்லும்போது, இதை அவர் அவர்களுக்கு கட்டளையாகச் சொல்லவில்லை. மற்றவர்கள் இந்தக் காரியத்தில் ஜாக்கிரதையுள்ளவர்களாக யிருக்கிறார்கள். கொரிந்தியரும் இந்த விஷயத்தில் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் அவர்களுடைய அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டாகவே, பவுல் இதை கொரிந்தியரிடம் சொல்லுகிறார்.

நாம் ஒருவரிடத்தில் தர்மப்பணத்தைச் சேகரிக்கும்போது, கொடுக்கிற நபரைப் போற்றுவது வழக்கம். கொடுக்கிறவர்களும் தங்களைப் பாராட்டவேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள். வாங்குகிறவர்கள் கொடுக்கிறவர்களைப்பற்றி நல்ல வார்த்தைகளினால் புகழவேண்டும். இது நீதியானது. கொடுக்கிறவர்களுக்கு நாம் மரியாதை காண்பிக்கவேண்டும். உதவிசெய்கிறவர்களை கனப்படுத்தும்போது, தேவனுடைய கிருபையை நாம் விளங்கப்பண்ணுகிறோம்.

கொரிந்தியரிடம் என்னென்ன நற்காரியங்கள் இருக்கிறது என்பதை பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். அவர்கள் எதில் பெருகியிருக்கிறார்கள் என்று அட்டவணையாகச் சொல்லுகிறார். முதலாவதாக கொரிந்தியர்கள் விசுவாசத்தில் பெருகியிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் விசுவாசமே ஆதரமாயிருக்கிறது. விசுவாசத்தில் பெருகியிருக்கிறவர் மற்ற கிருபைகளிலும், நற்கிரியைகளைச் செய்வதிலும் பெருகியிருப்பார்.

கொரிந்தியரின் விசுவாசத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் போதிப்பிலும் பெருகியிருப்பதாகப் பவுல் சொல்லுகிறார். ஒரு சிலருக்கு விசுவாசம் அதிகமாகயிருக்கும். ஆனாலும், அவர்களுக்குப் போதிப்பும் தேவைப்படும். போதிப்பு கிடைக்கும்போதுதான் தேவனைப்பற்றி அறிவு பெருகும். ஒரு சிலர் போதிப்பிலும் அறிவிலும் பெருகியிருப்பார்கள். ஆனால் அவர்களிடத்தில் விசுவாசம் இருக்காது. அதிகமாகப் பேசுகிறவர்கள் ஒரு காரியத்தையும் ஒழுங்காகச் செய்யமாட்டார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் விசுவாசத்திலும், அறிவிலும், போதிப்பிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும் பெருகியிருக்கவேண்டும்.

கொரிந்தியர்கள் ஊழியக்காரர்கள்மீது அன்பு செலுத்துவதில் பெருகியிருக்கிறார்கள். இதுபோல அவர்கள் எல்லா காரியங்களிலும் பெருகியிருந்தாலும், இந்தத் தர்மகாரியத்திலும் அவர்கள் பெருகியிருக்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். இதை அவர்களுக்குக் கட்டளையாகச் சொல்லவில்லை. அவர்களுடைய அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறார். இதை தன்னுடைய ஆலோசனையாக அவர்களுக்குச் சொல்லுகிறார்.

நாம் அநேகக்காரியங்களைச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் நற்காரியங்களைச் செய்யவேண்டும். அவற்றைச் செய்வது நமக்கு நல்லது. ஆனாலும் அவற்றை நாம் செய்யவேண்டுமென்று பிறர் நம்மைக் கட்டாயப்படுத்துவதை நாம் விரும்புவதில்லை. அது நம்முடைய கடமையாகயிருந்தாலும், நமக்கு ஆலோசனை சொல்லுகிறவர்கள் மிகுந்த கவனத்தோடு சொல்லவேண்டும். நாமும் பிறருக்கு இதைக் கட்டளையாகச் சொல்லாமல், ஆலோசனையாகவே சொல்லவேண்டும்.

கொரிந்தியர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறார்கள். அவர் ஐசுவரிய முள்ளவராயிருந்தும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, நம் நிமித்தம் அவர் தரித்திரரானார். நாம் தேவனுடைய அன்பில் ஐசுவரியவான்களாயிருக்கிறோம். புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் ஐசுவரியவான்களாயிருக்கிறோம். நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கைகளில் நாம் ஐசுவரியவான்களாயிருக்கிறோம்.

நம்மிடத்திலுள்ளதிலிருந்து நாம் தரித்திரருக்குக் கொடுத்து உதவிசெய்யவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையினால் பிழைக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கிறிஸ்துவினுடைய தரித்திரத்தினாலே நாம் ஐசுவரியவான்களாயிருக்கிறோம் என்பதை எப்போதும் நினைவுகூரவேண்டும்.

கொரிந்தியர்கள் தரித்திரருக்கு ஏன் உதவிசெய்யவேண்டும் என்பதற்கான காரணங்களை, பவுல் ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு வருகிறார். தர்மகாரியத்தை கொரிந்தியர்கள் ஒரு வருஷமாய் ஆரம்பம் பண்ணியிருக்கிறார்கள். ஆரம்பம் பண்ணியதை முடிக்கவேண்டும். தர்மகாரியத்தை ஒரு வருஷமாய் ஆரம்பம் பண்ணிய கொரிந்தியர்கள், இப்பொழுது அதைச் செய்து நிறைவேற்றவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்தது. இப்பொழுது தங்களுக்குள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாயிருக்கவேண்டும் என்று பவுல் சொல்லுகிறார்.

நல்ல நோக்கங்கள் மெய்யாகவே நற்கிரியைகளாகவே இருக்கிறது. நல்ல திட்டங்களும், நல்ல நோக்கங்களும் மலர்களைப்போன்றவை. ஒரு காலத்தில் மலர்கள் கனிதரும். கனிகிடைக்கும் என்னும் நம்பிக்கை மலர்களிடத்தில் உண்டு. மலர்கள் கனிதரவில்லையென்றால், அவற்றின் அழகினால் பிரயோஜனமில்லை. அதுபோலவே நற்காரியங்களை ஆரம்பம் செய்துவிட்டு, அதை முடிக்காமல் போனால் அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. தேவன் ஆரம்பத்தைவிட முடிவை விரும்புகிறார். கொடுக்கவேண்டும் என்னும் மனவிருப்பத்தைவிட, கொடுப்பதையே தேவன் அங்கீகரிக்கிறார்.

நற்கிரியைகளைச் செய்யவேண்டும் என்னும் விருப்பம் நம்மிடத்தில் இருக்கலாம். இந்த விருப்பமுள்ளவர்கள் நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்யவேண்டும். நம்மால் செய்ய முடிகிறதை ஜெபத்தோடு உற்சாகமாய்ச் செய்யவேண்டும். தேவன் நம்முடைய பிரஸ்தாசங்களை அங்கீகரிக்கிறார். நமக்குத் திராணியிருக்கும்போது நாம் நற்காரியங்களைச் செய்ய முன்வரவேண்டும். நமக்குத் திராணியில்லாதபோது, நாம் நற்காரியங்களைச் செய்யவில்லை என்பதற்காகத் தேவன் நம்மைப் புறக்கணிக்கமாட்டார்.

கொரிந்தியர்கள் தரித்திரருக்கு ஏன் உதவிபுரியவேண்டுமென்பதற்கு, பவுல் மற்றொரு காரணத்தையும் சொல்லுகிறார். தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை இந்த உலகத்தில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்திருக்கிறார். நம்மிடத்திலுள்ளது எல்லாமே தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் உதவியாயும் ஒத்தாசையாயும் இருக்கவேண்டும். மனுஷரெல்லோரும் சமநிலையில் இருக்கவேண்டும். ஒருவருக்கு வருத்தமும், ஒருவருக்கு சகாயமும் இருக்கக்கூடாது. நம்முடைய செல்வம் பிறருடைய வருமைக்கு உதவியாயிருக்கவேண்டும். அதுபோலவே மற்றவர்களுடைய செல்வம் நம்முடைய வறுமைக்கும் உதவிபுரியவேண்டும். தேவனுடைய ஆசீர்வாதங்கள் மனுஷர் மத்தியிலே சமநிலையாயிருப்பது அவருடைய சித்தமாயிருக்கிறது.

நம்மிடத்தில் அதிகமான செல்வம் இருக்கும்போது, அவையெல்லாவற்றையும் நாமே அனுபவிக்கவேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. தரித்திரரையும் நினைத்துப்பார்த்து அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். நம்முடைய செல்வம் பிறருடைய வறுமைக்கும், பிறருடைய செல்வம் நம்முடைய வறுமைக்கும் உதவியாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணினார்கள். தேவன் அவர்களுக்கு வனாந்தரத்திலே மன்னாவை போஷிக்கக் கொடுத்தார். அப்போது ஒரு சிலர் மிகுதியாய்ச் சேர்த்தார்கள். ஒரு சிலர் கொஞ்சமாய்ச் சேர்த்தார்கள். மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதில்லை. கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்கு குறைவானதுமில்லை. எல்லோருக்கும் மன்னா சமமாகக் கிடைத்தது. பவுல் அந்தச் சம்பவத்தை இங்கு நினைவுபடுத்தி எழுதுகிறார்.

தீத்து
2கொரி 8 : 16-24

2கொரி 8:16. அன்றியும் உங்களுக்காக இப்படிப்பட்ட ஜாக்கிரதை உண்டாயிருக்கும்படி தீத்துவின் இருதயத்தில் அருளின தேவனுக்கு ஸ்தோத்திரம்.

2கொரி 8:17. நாங்கள் கேட்டுக்கொண்டதை அவன் அங்கிகரித்ததுமல்லாமல், அவன் அதிக ஜாக்கிரதையாயிருந்து, தன் மனவிருப்பத்தின்படியே உங்களிடத்திற்கு வரப் புறப்பட்டான்.

2கொரி 8:18. சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சிபெற்ற ஒரு சகோதரனை அவனோடேகூட அனுப்பியிருக்கிறோம்.

2கொரி 8:19. அதுமாத்திரமல்ல, கர்த்தருக்கு மகிமையுண்டாகவும், உங்கள் மனவிருப்பம் விளங்கவும், எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் கொண்டுபோகையில், எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படி, அவன் சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாயும் இருக்கிறான்.

2கொரி 8:20. எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து,

2கொரி 8:21. கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்.

2கொரி 8:22. மேலும், அநேக காரியங்களில் ஜாக்கிரதையுள்ளவனென்று நாங்கள் பலமுறை கண்டறிந்தவனும், இப்பொழுது உங்கள்மேலுள்ள மிகுந்த நம்பிக்கையினாலே அதிக ஜாக்கிரதையுள்ளவனுமாகிய நம்முடைய சகோதரனையும் இவர்களோடேகூட அனுப்பியிருக்கிறோம்.

2கொரி 8:23. தீத்துவைக்குறித்து ஒருவன் விசாரித்தால், அவன் எனக்குக் கூட்டாளியும், உங்களுக்காக என் உடன்வேலையாளுமாயிருக்கிறானென்றும்; எங்கள் சகோதரரைக்குறித்து ஒருவன் விசாரித்தால், அவர்கள் சபைகளுடைய ஸ்தானாபதிகளும், கிறிஸ்துவுக்கு மகிமையுமாயிருக்கிறார்களென்றும் அறியக்கடவன்.

2கொரி 8:24. ஆதலால் உங்கள் அன்பையும், நாங்கள் உங்களைக் குறித்துச் சொன்ன புகழ்ச்சியையும், சபைகளுக்கு முன்பாக அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்துங்கள்.

அப்போஸ்தலர் பவுல் தீத்துவை கொரிந்தியருக்கு நல்வார்த்தைகளினால் அறிமுகம் செய்துவைக்கிறார். கொரிந்தியரிடத்தில் தர்மப்பணத்தை சேகரிப்பதற்காக, தீத்துவை அனுப்ப வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். தீத்துவின் இருதயத்திலும் இந்த வாஞ்சை உண்டாயிருக்கிறது. தேவனே இந்த வாஞ்சையை உண்டாக்கியிருக்கிறார் என்று அங்கீகரித்து, பவுல் தேவனைத் துதிக்கிறார்.

நாமோ அல்லது மற்றவர்களோ, நற்காரியங்களைச் செய்யும்போது, இதைச்செய்யும் வாஞ்சை தேவனால் உண்டாயிருக்கிறது என்று அங்கீகரித்து, தேவனைத் துதிக்கவேண்டும். தீத்து இந்த ஊழியத்தைச் செய்வதில் அதிக ஜாக்கிரதையாயிருக்கிறார். பவுல் கேட்டுக்கொண்டவுடன், தீத்து பவுலின் வேண்டுகோளை அங்கீகரித்து, உடனே கொரிந்தியரிடத்திற்கு வர புறப்பட்டுப்போகிறார். நற்காரியத்தைச் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறார்.

தர்மபணத்தைச் சேகரிப்பது கஷ்டமான ஊழியம். எல்லோரும் உற்சாகமாகக் கொடுக்கமாட்டார்கள். சிலர் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு கொடுக்காமல் போய்விடுவார்கள். வேறு சிலரோ ஒன்றும் கொடுக்காமல், தர்மப்பணம் சேகரிப்பதைப்பற்றி விவாதம் பண்ணுவார்கள்.

அநேகர் இந்த ஊழியத்தை விரும்பவில்லையென்றாலும், இது ஒரு நல்ல ஊழியமாகவே இருக்கிறது. இந்த ஊழியமும் தேவைப்படுகிறது.

அப்போஸ்தலர் பவுல் தீத்துவோடு, மற்றொரு சகோதரரையும் அனுப்ப சித்தமுள்ளவராகயிருக்கிறார். சுவிசேஷ ஊழியத்தில் எல்லா சபைகளிலும் புகழ்ச்சி பெற்ற ஒரு சகோதரரை தீத்துவுடனே கூட அனுப்புகிறார். அவர் லூக்காவைப்பற்றித்தான் இங்கு சொல்லுகிறார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். லூக்கா இந்த ஊழியத்திற்காக சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவராகயிருக்கிறார்.

பவுலின் விண்ணப்பத்தின் பிரகாரம் சபையார் லூக்காவை இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தியிருக்கலாம். ஏனெனில் தங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து, ஒருவரும் தங்களை குற்றப்படுத்தாத படிக்கு, பவுலும் அவருடைய உடன்ஊழியரும் எச்சரிக்கையாயிருக் கிறார்கள். பவுல் கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறார்.

நாம் இந்த உலகத்தில் எதைச் செய்தாலும் உலகத்தார் நம்மை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மறைவான காரியம் எதுவுமேயில்லை. ஆகையினால் மற்றவர்கள் நம்மைக் குற்றப் படுத்தாதபடிக்கு மிகவும் எச்சரிக் கையாயிருக்கவேண்டும். கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் குற்றமில்லாதவர்களாக யிருக்கவேண்டும். எந்த விஷயத்திலும் யாரும் நம்மை குற்றப்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையோடு ஊழியம் செய்யவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தீத்துவையும், லூக்காவையும் இங்கு குறிப்பிட்டுவிட்டு, மேலும் ஒரு சகோதரரைப்பற்றியும் சொல்லுகிறார். இவர் அப்பொல்லோவாக இருக்கலாமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அப்பொல்லோ அநேகக்காரியங்களில் ஜாக்கிரதை யுள்ளவராக இருந்திருக்கிறார். இதை பவுலும் அவருடைய உடன் ஊழியக் காரர்களும் பலமுறை கண்டறிந்திருக்கி றார்கள். அப்பொல்லோ கொரிந்தியர்மேல் மிகுந்த நம்பிக்கையுள்ளவராகவும், அதிக ஜாக்கிரதையுள்ளவராகவும் இருக்கிறார். அவரையும் இவர்களோடுகூட அனுப்புவதாக பவுல் சொல்லுகிறார்.

தர்மப்பணத்தை சேகரிக்க கொரிந்து சபைக்கு பவுல் மூன்று பேரை அனுப்புகிறார். அவர்களைப்பற்றிய நல்ல சுபாவங்களை பவுல் இங்கு எழுதுகிறார். தீத்து தனக்கு கூட்டாளியும், அவர்களுக்காக தன்னுடைய உடன்வேலை யாளுமாயிருக்கிறார். லூக்காவும், அப்பொல்லோவும் சபைகளுடைய ஸ்தானிபதிகளாகவும், கிறிஸ்துவுக்கு மகிமையுமாயிருக்கிறார்கள். கொரிந்தி யர்கள் இவர்களிடத்தில் தங்கள் அன்பை திருஷ்டாந்தப்படுத்தவேண்டும். தங்கள் அன்பை நிரூபிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியரைக்குறித்துப் புகழ்ச்சியான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். அந்தப் புகழ்ச்சியான வார்த்தைகளுக்கு தாங்கள் பாத்திரவான்கள் என்பதை கொரிந்தியர்கள் நிரூபிக்கவேண்டும். அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் மூலமாய் தர்மப்பணத்தைக் கொடுத்து அனுப்பவேண்டும்.

9 அதிகாரம்

பரிசுத்தவான்களுக்கு செய்ய வேண்டிய தர்மசகாயத்தைக்குறித்து பவுல் எழுதுகிறார் (2கொரி 9:1-5). எப்படி கொடுக்க வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (2கொரி 9:6-16).

தர்மசகாயம் 2கொரி 9 : 1-5

2கொரி 9:1. பரிசுத்தவான்களுக்குச் செய்ய வேண்டிய தர்மசகாயத்தைக் குறித்து, நான் அதிகமாக உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை.

2கொரி 9:2. உங்கள் மனவிருப்பத்தை அறிந்திருக்கிறேன்; அகாயாவிலுள்ளவர்கள் ஒருவருஷமாக ஆயத்தமாயிருக்கிறார்களென்று, நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழ்ந்தேனே; உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டது முண்டு.

2கொரி 9:3. அப்படியிருந்தும், உங்களைக் குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தக் காரியத்தில் வீணாய்ப்போகாமல், நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களா யிருப்பதற்கு, இந்தச் சகோதரரை அனுப்பினேன்.

2கொரி 9:4. மக்கெதோனியர் என்னுடனே கூட வந்து, உங்களை ஆயத்தப்படாதவர்களாகக் கண்டால், இவ்வளவு நிச்சயமாய் உங்களைப் புகழ்ந்ததற்காக, நீங்கள் வெட்கப்படு வீர்களென்று நாங்கள் சொல்லாமல், நாங்களே வெட்கப்பட வேண்டியதாயிருக்கும்.

2கொரி 9:5. ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தானதர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்துகிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது.

பரிசுத்தவான்களுக்கு தர்மசகாயம் பண்ணவேண்டும். இதைத் திரும்பத் திரும்ப சொல்லவேண்டியதில்லை என்று பவுல் தீர்மானம் செய்திருக்கிறார். பரிசுத்தவான்களுக்குச் செய்ய வேண்டிய தர்மசகாயத்தைக் குறித்து, தான் கொரிந்தியருக்கு அதிகமாக எழுத வேண்டியதில்லை என்று பவுல் குறிப்பிடுகிறார். ஏனெனில் பவுல் அவர்களுடைய மனவிருப்பத்தை அறிந்திருக்கிறார். கொரிந்தியர்கள் நற்கிரியைகளைச் செய்ய மனவிருப்பமா யிருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன்பு இந்த நற்கிரியையை அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள்.

கொரிந்தியர்கள் ஒரு வருஷமாக, பரிசுத்த வான்களுக்கு தர்மசகாயம் பண்ணுவதற்கு ஆயத்தமாக யிருக்கிறார்கள் என்று, பவுல் அவர்களைப் பற்றி மக்கெதோனியரிடம் புகழ்ச்சியாகச் சொல்லியிருக்கிறார். கொரிந்தியரைப் போல மக்கெதோனியரும் பரிசுத்த வான்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். கொரிந்தியர்கள் ஜாக்கிரதையாயிருப்பதை அறிந்து, அநேகர் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்களுடைய உற்சாகம் அநேகரை எழுப்பியிருக்கிறது. அவர்கள் ஆரம்பித்து வைத்திருக்கிற இந்த நல்ல ஊழியத்தை, சோர்ந்து போகாமல் தொடர்ந்து செய்யவேண்டும்.

பவுல் கொரிந்தியரிடத்திற்கு தீத்துவை அனுப்புகிறார். பரிசுத்த வான்களுக்கு உதவிசெய்ய அவர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். உதாரத்துவமாய்க் கொடுப்பதற்கு அவர்களுடைய உள்ளத்தில் ஏவவேண்டும். இதற்காகப் பவுல் தீத்துவையும், மேலும் இரண்டு சகோதரரையும் கொரிந்தியரிடத்திற்கு அனுப்புகிறார்.

நாம் ஒருவரிடத்தில் நற்காரியத்தைச் செய்யச் சொல்லும்போது, அதைச் செய்வதற்கு அவருக்கு காலஅவகாசம் கொடுக்க வேண்டும். நற்கிரியையைச் செய்ய அவரைத் தொடர்ந்து உற்சாகப்படுத்த வேண்டும். பவுல் கொரிந்தியரைக் குறித்து மக்கெதோனியரிடம் புகழ்ச்சியாய்ச் சொல்லியிருக்கிறார். அவர்கள் பரிசுத்த வான்களுக்கு உதவிசெய்ய ஒரு வருஷமாய் ஆயத்தமாயிருப்பதாக, பவுல் கொரிந்தியரைப் பற்றிச் சாட்சியாகச் சொல்லியிருக்கிறார். பவுல் சொன்ன பிரகாரம் கொரிந்தியர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். இல்லையென்றால் பவுலுக்கும் வெட்கமுண்டாகும். கொரிந்தியருக்கும் வெட்கமுண்டாகும்.

பவுல் கொரிந்து சபைக்குப் போகும்போது, மக்கெதோனியரில் சிலரும் அவரோடுகூட போகவிரும்புகிறார்கள். அவர்கள் வரும்போது, பரிசுத்த வான்களுக்கு தர்மசகாயம் செய்ய கொரிந்தியர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். அவர்களை ஆயத்தப் படாதவர்களாக மக்கெதோனியர்கள் கண்டால், பவுல் அவர்களைப்பற்றிச் சொன்ன புகழ்ச்சியான வார்த்தை பொய்யாய்ப் போகும். கொரிந்தியருக்கு வெட்கமுண்டாகும். அவர்கள் நிமித்தமாக பவுலுக்கும் வெட்கமுண்டாகும்.

எப்படி கொடுக்கவேண்டும்
2கொரி 9 : 6-15

2கொரி 9:6. பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.

2கொரி 9:7. அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2கொரி 9:8. மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயு மிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.

2கொரி 9:9. வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.

2கொரி 9:10. விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.

2கொரி 9:11. தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்.

2கொரி 9:12. இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்.

2கொரி 9:13. அவர்கள் இந்தத் தர்மசகாயத்தினாலாகிய நன்மையை அனுபவித்து, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கையிட்டிருக்கிறதினிமித்தமும், தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ் செய்கிறதினிமித்தமும், அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி;

2கொரி 9:14. உங்களுக்காக வேண்டுதல் செய்து, தேவன் உங்களுக்கு அளித்த மிகவும் விசேஷித்த கிருபையினிமித்தம் உங்கள்மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள்.

2கொரி 9:15. தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

தர்மசகாயத்தை எப்படி கொடுக்க வேண்டுமென்று பவுல் இங்கு ஆலோசனை சொல்லுகிறார். தானதர்மமானது உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட வேண்டும். இதை லோபத்தனமாய்க் கொடுக்கக் கூடாது. விவசாயம் செய்கிறவர்கள் நல்ல அறுவடையை எதிர்பார்க்கிறார்கள். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். நாம் தானதர்மம் கொடுக்கும் போது லோபத்தனமாய்க் கொடுத்தால் நமக்குப் பிரயோஜனமில்லை. உதாரத்துவமாய்க் கொடுக்க வேண்டும். விதைகளை அதிகமாக விதைக்கவேண்டும். விதை விதைக்கும் போது கஞ்சத்தனம் காண்பிக்கக்கூடாது.

தேவன் ஒவ்வொருவருடைய மனதிலும் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நியமிக்கிறார். தேவன் நியமித்த பிரகாரமாகவே நாம் கொடுக்க வேண்டும். நாம் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல. நம்முடைய மனதில் நாம் நியமித்தபடியே கொடுக்க வேண்டும். நம்முடைய மனதில் அதிகமாய் நியமிப்பதற்கு தேவன் நமக்கு உதவி செய்யுமாறு அவரிடத்தில் வேண்டிக் கொள்ள வேண்டும். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

தானதர்மம் பண்ணுவது மிகவும் முக்கியமான நற்கிரியை. மற்ற ஊழியங்களைச் சிந்தித்து திட்டமிடுவது போல, கொடுப்பதையும் சிந்தித்து, திட்டமிட்டு செயல்படுத்தவேண்டும். நம்முடைய மனதில் நியமித்தபடி கொடுக்க வேண்டும். நாம் கொடுக்க வேண்டுமென்று, யாரும் நம்மை கட்டாயப்படுத்தி, நாம் கொடுக்கக்கூடாது. நாம் விசனமாயும் கொடுக்கக்கூடாது. உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும்.

ஒரு சிலரிடத்தில் நாம் உதவி கேட்கும் போது, நம்மை திருப்தி செய்வதற்காக அவர்கள் எதையாவது கொடுப்பார்கள். கொடுப்பதிலும் அவர்களுக்கு உற்சாகம் இருக்காது. விசனமாய்க் கொடுப்பார்கள். நாம் கேட்டதினிமித்தமாக வேறு வழியில்லாமல் கொடுப்பார்கள். மனப்பூர்வமாய்க் கொடுக்க வில்லையென்றால், அவர்கள் கொடுத்தும் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகாது.

நாம் உற்சாகமாய்த் தானதர்மம் பண்ணும் போது நமக்கு ஒரு இழப்பும் உண்டாகாது. தரித்திரருக்குக் கொடுப்பதினால் நாம் தரித்திரராகி விடுவதில்லை. ஒரு நிலத்தில் நாம் ஒரு விதையை விதைக்கும் போது, விதைக்கப்பட்ட அந்த விதையை நாம் இழந்து விட்டோம் என்று நினைக்கக் கூடாது. விதைக்கப்பட்ட விதை முளைத்து பயிராகி கனிதரும். அந்த விதையை விதைக்கிறவர் நல்ல பலனைச் சந்தோஷமாய் அறுவடை செய்வார். விதைக்காவிட்டால் அறுவடையில்லை. நாமும் பிறருக்குக் கொடுக்கும்போது, தேவனுடைய சமுகத்தில் நம்முடைய தானதர்மத்தை விதைக்கிறோம். தேவனுடைய கிருபையினால் அதற்குரிய பலனை நாம் பெற்றுக்கொள்வோம்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். தேவனுக்குப் பிரியமான காரியத்தைச் செய்யும்போது நமக்கு ஒரு இழப்பும் உண்டாகாது. தேவன் நம்மை எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயிருக்கச் செய்வார். சகலவித நற்கிரியைகளிலும் நம்மைப் பெருகுகிறவர்களாகயிருக்கச் செய்வார். தேவன் நம்மிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.

நாம் கொடுக்கும்போது, தேவனை நம்பி உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுக்கப்போகிற நன்மைகளை சந்தேகப்படக் கூடாது. ஏனெனில் அவர் நம்மிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். அவருடைய வல்லமையைச் சந்தேகப்படக் கூடாது. தேவன் கொடுக்கிற சம்பூரணமான ஆசீர்வாதம் நமக்குள் நீடித்த காலமாய் நிலைத்து நிற்கும். அவர் கொடுக்கிற வெகுமதி நித்தியமானது. நாம் ஏழைகளுக்குக் கொடுக்கும் போது, நம்முடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களைத் தேவன் ஆசீர்வதிக்கவேண்டுமென்று பவுல் இங்கு விண்ணப்பம்பண்ணுகிறார். கொடுக்கிறவர்கள் குறைந்துபோகக்கூடாது என்றும், எல்லாவிதத்திலும் சம்பூரணமாக ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்றும் பவுல் ஜெபம் பண்ணுகிறார். தேவன் விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர். அவரே நமக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, நம்முடைய நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்கிறவர்.

நாம் விதைக்கும்போது தேவனுடைய கிருபையினால் அறுவடை செய்கிறோம். நமக்கு புசிக்கிறதற்கு ஆகாரம் கிடைக்கிறது. ஒரு வருஷம் முழுவதற்கும் தேவையான ஆகாரத்தை தேவன் நமக்குக் கொடுக்கிறார். இது மாத்திரமல்ல. அடுத்த வருஷமும் விதைப்பதற்கு, தேவன் நமக்கு விதையையும் கொடுக்கிறார். அடுத்த வருஷம் விதைத்தால்தான், அடுத்த வருஷத்திற்குப் புசிக்க ஆகாரம் உண்டாயிருக்கும்.

கொடுக்கிறவர்களுக்காக பவுல் ஜெபிக்கும் போது, தேவன் அவர்களுக்கு புசிக்கிறதற்கு ஆகாரத்தை அளிக்க வேண்டுமென்றும் ஜெபிக்கிறார். அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவாயிருக்கக் கூடாது என்றும், தேவன் அவர்களுடைய விளைச்சலை வர்த்திக்கப்பண்ண வேண்டும் என்றும் பவுல் ஜெபிக்கிறார்.

விதைக்கிறவர்களுக்கு விதையை அளித்து, தேவன் அதைப் பெருகப்பண்ண வேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். இதன் மூலமாக அவர்களால் இன்னும் அதிகமாய் விதைக்க முடியும். தானதர்மம் செய்கிறவர்களுக்கு தேவன் அதிக ஆசீர்வாதங்களைக் கொடுக்கவேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். இதனால் அவர்களால் இன்னும் அதிகமாய் தானதர்மம் கொடுக்க முடியும். தேவன் அவர்களுடைய நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார். அவர்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய உதாரகுணம் மிகுந்திருக்கும்.

தானதர்மம் கொடுப்பதினால் நாம் தரித்திரராகி விடுவதில்லை. தேவன் நம்முடைய நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார். நம்மை எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமடையச் செய்வார். சகலவித நற்கிரியைகளிலும் நம்மைப் பெருகச் செய்வார். தேவன் கொடுக்கிற ஆசீர்வாதமே மெய்யான ஆசீர்வாதம். இதுவே நித்திய ஆசீர்வாதம். நாம் உலகப் பொருளை விதைக்கிறோம். ஆவிக்குரிய நன்மைகளை அறுவடை செய்கிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகள் தர்மசகாயமாகிய பணிவிடையைச் செய்யும் போது, அது பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறது. ஆசீர் வதிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் தேவனை ஸ்தோத்திரிகிறார்கள். தேவனுக்கு துதியும் கனமும் உண்டாகிறது. அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினால், தர்மசகாயமாகிய பணிவிடையைச் செய்கிறவர்களுக்கு சம்பூரணமான பலன் உண்டாகும். அவர்கள் எதையும் இழந்து போகமாட்டார்கள். சம்பூரணமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கை செய்ய வேண்டும். பரிசுத்தவான்களுக்கு உதாரத்துவமாய்த் தர்மம் செய்யவேண்டும். இதன் மூலமாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். இந்த தர்மசகாயத்தினாலாகிய நன்மையை அனுபவிக்கிறவர்களெல்லோரும் தேவனை மகிமைப்படுத்துவார்கள். தேவனை ஸ்தோத்திரிப்பார்கள். இதனால் உண்டாகிற பலன் சம்பூரணமானதாகயிருக்கும்.

பரிசுத்தவான்களுக்கு தர்மசகாயம் செய்கிறது விசேஷித்த ஊழியம். தேவனுடைய விசேஷித்த கிருபைகளைப் பெற்றிருக்கிறவர்கள் மாத்திரமே இந்த விசேஷித்த நன்மையைச் செய்வார்கள். தர்மசகாயத்தினால் நன்மையை அனுபவிக்கிறவர்கள், தங்களுக்கு உதவி செய்கிறவர்களுக்காக வேண்டுதல் செய்வார்கள். உதவிசெய்கிறவர்கள்மீது வாஞ்சையாயிருப்பார்கள். தரித்திரரால் ஐசுவரியவான்களுக்கு வேறு பெரிய உதவிகள் எதையும் செய்யமுடியாது. உதவி பெற்றுக்கொண்ட பரிசுத்தவான்கள், தங்களுக்கு உதவி செய்தவர்களுக்காக ஜெபிப்பார்கள். இதுவே உதவி செய்கிறவர்களுக்கு கிடைக்கிற மிகப் பெரிய ஆசீர்வாதம். நம்முடைய ஐசுவரியத்தினால் இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை நம்மால் சம்பாதிக்க முடியாது. மற்ற பரிசுத்தவான்கள் நமக்காக ஜெபிக்கும்போது, தேவன் தம்முடைய கிருபையினால் இப்படிப்பட்ட மேன்மையான ஆசீர்வாதத்தை நமக்குத் தருகிறார்.

அப்போஸ்தலர் பவுல் இந்த அதிகாரத்தின் முடிவில், "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" என்று ஆசீர்வதித்து முடிக்கிறார். தேவன் அருளிய சொல்லிய முடியாத ஈவு என்னும் வாக்கியம் "இயேசு கிறிஸ்துவை" குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவே இந்த உலகத்திற்கு தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவாகயிருக்கிறார். அப்போஸ்தலர் பவுல் இயேசு கிறிஸ்துவுக்காக ஸ்தோத்திரம் செய்து இந்த அதிகாரத்தை நிறைவு செய்கிறார்.

10 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தன்னைப் பற்றி கொரிந்தியருக்கு எழுதுகிறார். கொரிந்தியருக்கு சமீபமாகயிருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்கும்போது அவர்கள்மேல் கண்டிப்பாயுமிருக்கிறார் (2கொரி 10:1-6). பவுல் தன்னுடைய வெளித் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (2கொரி 10:7-11). பவுல் அளவுக்கு மிஞ்சி மேன்மை பாராட்டவில்லை. தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல என்று அறிக்கை செய்கிறார் (2கொரி 10:12-18.

பவுலாகிய நான்
2கொரி 10 : 1-6

2கொரி 10:1. உங்களுக்கு முன்பாக இருக்கும் போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்கும் போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்.

2கொரி 10:2. எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக்குறித்து நான் கண்டிப்பாயிருக்க வேண்டுமென்று நினைத்திருக்கிற தைரியத்தோடே, உங்கள் முன்பாக இருக்கும்போது, நான் கண்டிபுள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

2கொரி 10:3. நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.

2கொரி 10:4. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

2கொரி 10:5. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

2கொரி 10:6. உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும் போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயுமிருக்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியரிடம் மிகவும் மென்மையாயும், மனத்தாழ்மையாயும் பேசுகிறார். பவுலுக்கு விரோதமாக கொரிந்து சபையில் சிலர் எழும்பியிருந்தாலும், பவுலின் வார்த்தைகள் மென்மையாகவே இருக்கிறது. தன்னைப் பற்றிச் சொல்லும்போது, தான் அவர்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயிருப்பதாகச் சொல்லுகிறார். மேலும் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு அவர்களுக்கு புத்திசொல்லுகிறார்.

பவுலின் சத்துருக்கள் பவுலுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். பவுல் மாம்சத்தின்படி நடக்கிறார் என்று அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். அவர்களைக்குறித்து பவுல் கண்டிப்பாயிருக்க வேண்டும். ஆனால் அவரோ தனக்கு விரோதமாய்ப் பேசுகிறவர்களோடு கண்டிப்புள்ளவராயிருக்கவில்லை. இதற்கு ஏற்ற பிரகாரம் கொரிந்தியர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று அவர்களை வேண்டிக்கொள்கிறார். பவுல் தன்னுடைய கண்டிப்பையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் அவர்களிடத்தில் செலுத்தாத படிக்கு, அவர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தனக்குப் பிரசங்கிக்கிற அதிகாரம் இருப்பதாகவும், கீழ்ப்படியாதவர்கள்மீது நீதியுள்ள தண்டனையைச் செலுத்துவதற்கு அதிகாரமிருப்பதாகவும் சொல்லுகிறார். சுவிசேஷ ஊழியம் யுத்தம்பண்ணுவதைப் போன்றது. இந்த யுத்தம் மாம்சத்திற்கேற்ற யுத்தமல்ல. இது ஆவிக்குரிய யுத்தம். சத்துருவும் மாம்சத்திற்குரியவனல்ல. இவன் ஆவிக்குரியவன். யுத்தம்பண்ணுகிற நோக்கமும் மாம்சத்திற்குரியதல்ல. இதுவும் ஆவிக்குரியது. கர்த்தருடைய பிள்ளைகள் மாம்சத்தில் நடக்கிறார்கள். ஆனாலும் மாம்சத்தின்படி போர்செய்யவில்லை. நம்முடைய போராயுதங்கள் மாம்சத்திற் கேற்றவைகளல்ல.

சுவிசேஷத்தின் உபதேசங்களே நம்முடைய போராயுதங்களாகயிருக்கிறது. இது உலகப்பிரகாரமான ஆயுதமல்ல. நாம் யாருக்கும் கட்டாயப்படுத்தி சுவிசேஷத்தைச் சொல்ல முடியாது. பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால், அவர்களுடைய இருதயங்களில் உணர்த்தும் விதமாக சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும். ஜனங்கள் தேவனைப்பற்றிய அறிவை அறியவேண்டும். பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டுமென்று தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். மாம்சத்திற்கேற்ற ஆயுதங்களினால் யாரையும் மனந்திரும்ப வைக்கமுடியாது.

சுவிசேஷத்திற்கு விரோதமாக பாவத்தின் வல்லமைகளும், சாத்தானுடைய வல்லமைகளும் மனுஷருடைய இருதயங்களில் கிரியை செய்கிறது. இவை சாத்தானுடைய அரண்களாகயிருக்கிறது. தேவனுடைய வல்லமையினாலும், தேவனுடைய கிருபையினாலும் சுவிசேஷமானது சாத்தானுடைய அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

கள்ளத்தீர்க்க தரிசிகள் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள். அவர்களிடத்தில் மேட்டிமையான எண்ணம் நிரம்பியிருக்கிறது. சுவிசேஷத்திற்கு விரோதமாக அவர்கள் தர்க்கம் பண்ணுகிறார்கள். பவுலும் அவருடைய உடன்ஊழியரும் அவர்களோடு ஆவியின்படி போர்செய்து, அவர்களையும் அவர்களுடைய மேட்டிமையான எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறார்கள். கீழ்ப்படியாதவர்கள்மீது, அவர்களுடைய கீழ்ப்படியாமைக்குத்தக்கதாக, நீதியுள்ள தண்டனையைச் செலுத்த அப்போஸ்தலருக்கு அதிகாரமுண்டு. இந்த அதிகாரத்தைச் செலுத்த தாங்கள் ஆயத்தமாகயிருப்பதாக பவுல் அறிவிக்கிறார்.

வெளித்தோற்றம்
2கொரி 10 : 7-11

2கொரி 10:7. வெளித்தோற்றத்தின்படி பார்க்கிறீர்களா? ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்குரியவனென்று நம்பினால், தான் கிறிஸ்துவுக்குரியவனாயிருக்கிறது போல நாங்களும் கிறிஸ்துவுக்குரியவர்களென்று அவன் தன்னிலேதானே சிந்திக்கக்கடவன்.

2கொரி 10:8. மேலும், உங்களை நிர்மூலமாக்குகிறதற்கல்ல, உங்களை ஊன்றக் கட்டுகிறதற்குக் கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தைக் குறித்து, நான் இன்னும் சற்றே அதிகமாய் மேன்மைபாராட்டினாலும் நான் வெட்கப்படுவதில்லை.

2கொரி 10:9. நான் நிருபங்களாலே உங்களைப் பயமுறுத்துகிறவனாய்த் தோன்றாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.

2கொரி 10:10. அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள்; சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே.

2கொரி 10:11. அப்படிச் சொல்லுகிறவன், நாங்கள் தூரத்திலிருக்கும்போது எழுதுகிற நிருபங்களால் வசனத்தில் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோமோ, அப்படிப்பட்டவர்களாகவே சமீபத்திலிருக்கும்போதும் கிரியையிலும் இருப்போம் என்று சிந்திக்கக் கடவன்.

அப்போஸ்தலர் பவுலுடைய சரீரத் தோற்றம் பலவீனமாயிருக்கிறது. அவருடைய வசனம் அற்பமாயிருப்பதாக அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். அவர்கள் வெளித்தோற்றத்தின்படி பார்க்கிறார்கள். தன்னுடைய சரீரத் தோற்றம் பலவீனமாகயிருந்தாலும், தானும் கிறிஸ்துவுக்குரியவர் என்று பவுல் தைரியமாய்ச் சொல்லுகிறார். வெளித் தோற்றம் மனுஷருடைய கண்களை வஞ்சித்துவிடும். பவுலை ஒரு சிலர் வெளித்தோற்றத்தின்படி பார்த்து, அவரை ஏளனமாய் நினைக்கிறார்கள்.

பவுலை ஏளனமாய் நினைக்கிறவர்கள், தங்களைத்தாங்களே உயர்வாய் நினைக்கிறார்கள். தாங்கள் கிறிஸ்துவுக்குரியவர்களென்றும், பவுலோ கிறிஸ்துவுக்குரியரல்ல என்றும் வெளித்தோற்றத்தின் படி தீர்ப்பு செய்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குரியவர்களாயிருப்பது போல, தானும் கிறிஸ்துவுக்குரியவராயிருப்பதாக பவுல் தன்னைப்பற்றிச் சொல்லுகிறார். பவுலும் அவருடைய உடன் ஊழியரும் கிறிஸ்துவுக்குரியவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் பவுலை கிறிஸ்துவுக்குரியவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஏராளமானோர் பிரவேசிக்கலாம். கிறிஸ்துவிடத்தில் எல்லோருக்கும் இடமுண்டு. விசுவாசிகளுக்குள் வித்தியாசமிருக்கலாம். ஊழியக்காரர்களுக்குள் வேற்றுமைகள் காணப்படலாம். இவையெல்லாவற்றிற்கு மத்தியிலும் நாமெல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகவே இருக்கிறோம். இசைவாகவே இணைக்கப்பட்டிருக்கிறோம்.

ஒவ்வொரு விசுவாசியும் தான் கிறிஸ்துவுக்குரியவர் என்பதை சிந்திக்க வேண்டும். தான் மாத்திரமல்ல, தன்னைப்போலவே மற்ற விசுவாசிகளும் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதையும் சிந்திக்கவேண்டும். இப்படிப்பட்ட சிந்தனை நம்மிடத்தில் வரும்போது நமக்கு இடையேயுள்ள வேறுபாடுகள் நம்மைவிட்டு நீங்கும். பிரிவினையின் சுபாவம் நம்மைவிட்டு அகலும். நமக்குள் ஒற்றுமையான ஐக்கியம் உண்டாகும்.

நாம் மாத்திரமே கிறிஸ்துவுக்குரியவர்கள் என்றும், மற்றவர்கள் யாரும் கிறிஸ்துவுக்குரியவர்களல்ல என்றும், நம்மைப் பற்றி பெருமையாகச் சிந்திக்கக் கூடாது. நம்மை யாராவது கிறிஸ்துவுக்குரியவர்களல்ல என்று சொன்னால், "நாமும் கிறிஸ்துவுக்குரியவர்கள் தான்" என்று நாம் அவர்களிடத்தில் தைரியமாய்ச் சொல்ல வேண்டும். நாம் எவ்வளவு பலவீனமாகயிருந்தாலும் நாமும் அவர்களைப் போல கிறிஸ்துவுக்குரியவர்கள்தான்.

கர்த்தர் ஊழியக்காரர்களுக்குத் தம்முடைய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அப்போஸ்தலருக்கு அப்போஸ்தல அதிகாரத்தைக் கொடுக்கிறவர். ஒரு சிலரிடத்தில் அப்போஸ்தல அதிகாரமில்லை. ஆனாலும் அவர்கள் தங்களிடத்தில் அப்போஸ்தல அதிகாரம் இருப்பதுபோல காண்பித்து, அதிகாரம் செலுத்துகிறார்கள்.

கர்த்தர் பவுலுக்குக் கொடுத்த அதிகாரத்தை அவர் கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், பரிசுத்தவான்களின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்த வாஞ்சையாயிருக்கிறார். விசுவாசிகளை நிர்மூலமாக்குகிறதற்கல்ல, அவர்களை ஊன்றக்கட்டுகிறதற்கே, கர்த்தர் தனக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பவுல் பயன்படுத்துகிறார்.

தன்னுடைய நிருபங்களினாலே பவுல் யாரையும் பயப்படுத்த விரும்பவில்லை. தன்னுடைய நிருபத்தில் கோபமான வார்த்தைகளை நிரப்பி பவுல் யாரையும் பயப்படுத்தவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களைப் பயமுறுத்தவேண்டுமென்பது பவுலின் நோக்கமல்ல.

பவுலின் நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள் என்று அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். அவருடைய சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறது என்று சொல்லி அவரைத் தூஷிக்கிறார்கள். ஆனால் பவுலோ தான் நிருபங்களால் எழுதுகிற வசனத்தில் தன்னை எப்படி வெளிப்படுத்துகிறாரோ, அப்படியே மாறாமலிருக்கிறார். தூரத்திலிருக்கும் போது எப்படியிருக்கிறாரோ அப்படியே சமீபத்திலிருக்கும் போதும் இருக்கிறார். பவுலின் வார்த்தை எப்படியிருக்கிறதோ அப்படியே அவருடைய கிரியையும் இருக்கிறது. பவுலிடத்தில் சொல் ஒன்றும் செயல் வேறொன்றுமாக முரண்பாடு காணப்படவில்லை. அவர் சொல்லுவதைச் செய்கிறார். செய்கிறதைச் சொல்லுகிறார்.

தன்னைத்தான் புகழுகிறவன் 2கொரி 10 : 12-18

2கொரி 10:12. ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணிய மாட்டோம்; தங்களைக் கொண்டு தங்களை அளந்து கொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.

2கொரி 10:13. நாங்கள் அளவுக்கு மிஞ்சி மேன்மை பாராட்டாமல், உங்களிடம் வரைக்கும் வந்தெட்டத் தக்கதாக, தேவன் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவுப்பிரமாணத்தின்படியே மேன்மைபாராட்டுகிறோம்.

2கொரி 10:14. உங்களிடத்தில் வந்தெட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப்போகிறதில்லை; நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உங்களிடம்வரைக்கும் வந்தோமே.

2கொரி 10:15. எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட் பட்டு மேன்மை பாராட்டமாட்டோம்.

2கொரி 10:16. ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும் போது, மற்றவர்களுடைய எல்லைகளுக்குள்ளே செய்யப்பட்டவைகளை நாங்கள் செய்ததாக மேன்மைபாராட்டாமல், உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தக்கதாக, எங்கள் அளவின்படி உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

2கொரி 10:17. மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்.

2கொரி 10:18. தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.

கள்ள அப்போஸ்தலர்கள் தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்கிறார்கள். தங்களைக் கொண்டு தங்களை அளந்து கொள்கிறார்கள். தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் தன்னைத்தானே மெச்சிக்கொள்ள வில்லை. தன்னைக்கொண்டு தன்னை அளக்கவில்லை. தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்கிறவர்கள் புத்தி மான்களல்ல என்று பவுல் சொல்லுகிறார். இவர்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்கள். தங்களுடைய கிரியைகளில் மேன்மை பாராட்டுகிறவர்கள்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு வரங்களையும் கிருபைகளையும் கொடுக்கிறார். இவற்றிற்காக நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் பண்ண வேண்டும். நம்முடைய வரங்களில் நாம் சந்தோஷப்படலாம். ஆனால் நம்முடைய வரங்களைக் குறித்து நாம் பெருமைப்படக்கூடாது. நமக்கு நம்மையே ஒப்பிட்டுக்கொள்ளக்கூடாது. நமக்கு நாமே அளந்துகொள்ளக்கூடாது. நம்மை நாமே மெச்சிக்கொள்ளக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் எந்த அளவுக்கு தன்னை மேன்மை பாராட்டுகிறார் என்பதை இங்கு குறிப்பிடுகிறார். தேவன் தனக்கு அளந்து பகிர்ந்த அளவு பிரமாணத்தின் படியே மேன்மை பாராட்டுகிறார். இந்த அளவுக்கு மிஞ்சி அவர் மேன்மை பாராட்டுவதில்லை. கள்ள அப்போஸ்தலர்கள் மற்றவர்களுடைய வேலைகளை, தங்களுடைய வேலைகள் என்று சொல்லி, மேன்மை பாராட்டுகிறார்கள். மற்றவர்களுடைய பிரயாசங்களில் அவர்கள் பெருமைப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அளவுக்கு மிஞ்சிப் போகவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையாய்ப் பிரசங்கித்து கொரிந்தியரிடத்தில் வந்திருக்கிறார். தன்னுடைய சுயவிருப்பத்தின் பிரகாரமோ அல்லது சுயதிட்டத்தின் பிரகாரமோ பவுல் கொரிந்தியரிடத்தில் வரவில்லை. தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலினாலேயே, பவுல் கொரிந்தியர் மத்தியில் வந்திருக்கிறார். பவுல் ஒருபோதும் தன்னுடைய அளவை கடந்து செல்லமாட்டார். மற்றவர்களுடைய வேலைகளில் பவுல் பெருமைப்படமாட்டார்.

பவுல் தன்னுடைய அளவுக்குட்பட்டு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் போது, கொரிந்தியருடைய விசுவாசம் விருத்தியடைந்திருக்கிறது. மற்ற இடங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு வாய்ப்புண்டாயிற்று. மற்றவர்களுடைய எல்லைகளில் செய்யப்பட்ட ஊழியங்களை தான் செய்ததாக பவுல் மேன்மை பாராட்டவில்லை. அதற்குப் பதிலாக, பவுல் மற்றவர்களுடைய எல்லைகளைவிட்டு, அப்புறமான இடங்களுக்குச் சென்று, சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார். அங்கே அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய ஊழியத்தையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் இங்குத் தெளிவாய்ச் சொன்னாலும், அவர் தன்னைக்குறித்து மேன்மை பாராட்டவில்லை. பவுல் அளவுக்கு மிஞ்சியும் மேன்மை பாராட்டமாட்டார். அளவுக்குட்பட்டும் மேன்மை பாராட்டமாட்டார். பவுலிடத்தில் மேன்மை பாராட்டுதல் ஒருபோதும் காணப்படவில்லை.

பவுல் தன்னைக்குறித்து மேன்மை பாராட்ட பயப்படுகிறவர். மற்றவர்கள் தன்னைக் குறித்து மேன்மை பாராட்டினாலும் அதை அங்கீகரிக்க மாட்டார். மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று பவுல் எழுதுகிறார். கர்த்தருடைய ஊழியக் காரர்கள் தங்களை மேன்மை பாராட்டுகிற விஷயத்தில் மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும் இருக்க வேண்டும். தங்களுடைய ஊழியத்தில் எவ்வளவு அற்புதங்களும், அடையாளங்களும் நடந்தாலும், ஊழியக்காரர்கள் தங்களை மேன்மைப்படுத்தாமல், கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும்.

2 கொரிந்தியர் - விரிவுரை

II CORINTHIANS - COMMENTARY

ஊழியம் எவ்வளவு பெருகி வளர்ந்தாலும் ஊழியக்காரர்கள் தங்களைக் குறித்து மேன்மை பாராட்டக்கூடாது. கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டவேண்டும்.

ஒரு சிலர் தங்களை உத்தமராகக் காண்பிப்பதற்கு, தங்களைத் தாங்களே புகழுவார்கள். புகழ்ச்சி நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பகையாகயிருக்கிறது. தற்புகழ்ச்சி நமக்குச் சத்துருவாகயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் யாரும் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளக் கூடாது. தன்னைத்தானே புகழுகிறவன் உத்தமனல்ல என்று பவுல் தெளிவாகச் சொல்லுகிறார். நமக்கு வருகிற புகழ்ச்சி கர்த்தரால் உண்டாயிருக்க வேண்டும். கர்த்தரே நம்மைப் புகழவேண்டும். கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன். கர்த்தருடைய சமுகத்தில் நம்முடைய ஜீவியமும், ஊழியமும் அங்கீகரிக்கப்படவேண்டும். நம்முடைய புகழ்ச்சியைவிட, கர்த்தர் நம்மை அங்கீகரிக்கவேண்டும் என்பதே நமக்கு முக்கியம்.

11 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் கள்ள அப்போஸ்தலருக்கு விரோதமாகத் தொடர்ந்து எச்சரித்து எழுதுகிறார். மேன்மை பாராட்டுகிறது தனக்கு தகுதியல்ல என்று சொல்லிவிட்டு, கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்துதல்களையும் அவர்களுக்கு அறிவிக்கிறார் (2கொரி 11:1-4). மற்ற அப்போஸ்தலர்களைவிட தான் ஒன்றிலும் குறைவுள்ளவரல்ல என்று பவுல் சொல்லுகிறார். கொரிந்தியர் மத்தியிலே கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பவுல் இலவசமாகப் பிரசங்கம்பண்ணுகிறார் (2கொரி 11:5-15). அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை கொரிந்தியர் மத்தியில் உறுதிபண்ணுகிறார் (2கொரி 11:16-21). கிறிஸ்துவுக்காக பவுல் அதிகப்பிரயாசப்பட்டு ஊழியம் செய்திருக்கிறார். பல பாடுகளையும் வேதனைகளையும் சகித்திருக்கிறார் (2கொரி 11:22-33).

வைராக்கியங்கொண்டிருக்கிறார் 2கொரி 11 : 1-4

2கொரி 11:1. என் புத்தியீனத்தை நீங்கள் சற்றே சகித்தால் நலமாயிருக்கும்; என்னைச் சகித்துமிருக்கிறீர்களே.

2கொரி 11:2. நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.

2கொரி 11:3. ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி, கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.

2கொரி 11:4. எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்களே.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்காக தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறார். தன்னுடைய புத்தியீனத்தை அவர்கள் சற்றே சகித்தால் நலமாயிருக்கும் என்று சொல்லுகிறார். அப்போஸ்தலர் பவுல் தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதற்குப் பதிலாக, தன்னை மிகவும் தாழ்த்துகிறார். தன்னுடைய பேச்சு புத்தியீனமானது என்றும், அதை கொரிந்தியர்கள் சகித்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர்களுக்கு மனத்தாழ்மையோடு எழுதுகிறார்.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியிலே கள்ள அப்போஸ்தலர்கள் ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் சபையை சீரழித்துப்போட்டார்கள். கொரிந்து சபையாரைக் கள்ள அப்போஸ்தலரிடத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். அதற்காக பவுல் தன்னைப் புத்தியீனன் என்று சொல்லி, தன்னையே தாழ்த்துகிறார்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்து சபையாரை கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்திருக்கிறார். ஆகையினால் பவுல் அவர்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறார். கொரிந்து சபையார் சுத்தமுள்ளவர்களாகவும், மாசற்றவர் களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்களுடைய மனது கள்ள அப்போஸ்தலரால் கெடுக்கப்பட்டிருக்கக்கூடாது.

சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது. அதுபோல கள்ள அப்போஸ்தலர்கள் கொரிந்தியருடைய மனதை வஞ்சிக்கிறார்கள். கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று அவர்கள் மனது விலகும்படி கெடுக்க முயற்சி பண்ணுகிறார்கள். கொரிந்தியர்கள் கெட்டுப்போய்விடுவார்களோ என்று பவுல் பயப்படுகிறார்.

பவுல் பிரசங்கியாத வேறொரு இயேசுவைக் கள்ள அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கிறார்கள். வேறொரு சுவிசேஷத்தை அவர்களுக்குச் சொல்லுகிறார்கள். அவர்கள் வேறொரு ஆவியைப்பற்றிப் பேசுகிறார்கள். இயேசு ஒருவரே. அவருடைய சுவிசேஷமும் ஒன்றே. ஆவியானவரும் ஒருவரே. கொரிந்தியர்களுக்கு பவுல் சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணியிருக்கிறார். அவர்கள் பவுல் மூலமாக இயேசுவையும், சுவிசேஷத்தையும், ஆவியானவரையும் பெற்றிருக்கிறார்கள்.

நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்ல
2கொரி 11 : 5-15

2கொரி 11:5. மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்.

2கொரி 11:6. நான் பேச்சிலே கல்லாதவனாயிருந்தாலும், அறிவிலே கல்லாதவனல்ல; எந்த விஷயத்திலும் எல்லாருக்கு முன்பாகவும் உங்களுக்குள்ளே நாங்கள் வெளிப்பட்டிருக்கிறோமே.

2கொரி 11:7. நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத் தானே தாழ்த்தி, தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ்செய்தேனோ?

2கொரி 11:8. உங்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, மற்றச் சபைகளிடத்தில் சம்பளத்தைப் பெற்று, அவர்களைக் கொள்ளையிட்டேன்.

2கொரி 11:9. நான் உங்களோடிருந்து குறைவுபட்டபோதும், ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள்; எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாயிராதபடிக்கு ஜாக்கிரதையாயிருந்தேன், இனிமேலும் ஜாக்கிரதையாயிருப்பேன்.

2கொரி 11:10. அகாயாநாட்டின் திசைகளிலே இந்தப் புகழ்ச்சி என்னைவிட்டு நீங்குவதில்லையென்று என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தைக் கொண்டு சொல்லுகிறேன்.

2கொரி 11:11. இப்படிச் சொல்ல வேண்டியதென்ன? நான் உங்களைச் சிநேகியாதபடியினாலேயோ? தேவன் அறிவார்.

2கொரி 11:12. மேலும், எங்களை விரோதிக்கச் சமயந்தேடுகிறவர்களுக்குச் சமயம் கிடையாதபடிக்கு, தங்களைக்குறித்து மேன்மை பாராட்டுகிற காரியத்தில் அவர்கள் எங்களைப்போலக் காணப்படும்படி, நான் செய்வதையே இன்னும் செய்வேன்.

2கொரி 11:13. அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்.

2கொரி 11:14. அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.

2கொரி 11:15. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக் காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்.

மற்ற அப்போஸ்தலரை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அப்போஸ்தலர் பவுல் அவர் ஒன்றிலும் குறைவுள்ளவரல்ல. பவுல் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, மிகவும் கண்ணியமாகவும், மனத்தாழ்மையாகவும் பேசுகிறார். “எண்ணுகிறேன்” என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். தன்னுடைய வார்த்தைகளை பவுல் தைரியமாகச் சொல்லலாம். முழுநிச்சயத்தோடு சொல்லலாம். ஆனால் பவுலிடத்தில் சுயபெருமை எதுவுமில்லை. ஆகையினால் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, மிகுந்த மனத்தாழ்மையோடு, “மகா பிரதான அப்போஸ்தலரிலும் நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்ல என்று எண்ணுகிறேன்” என்று சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் தன்னிடத்திலுள்ள குறையை சொல்லுகிறார். பேச்சிலே அவர் கல்லாதவர் என்பதை அங்கீகரிக்கிறார். ஆனாலும் அவர் அறிவிலே கல்லாதவரல்ல. தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அவர் அறிந்திருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு கிறிஸ்துவின் ஊழியக்காரராயும், சிநேகிதராயும் இருக்கிறார். அவர்களுக்கு இலவசமாகவே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். மற்ற சபைகளிடத்திலிருந்து சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய சுவிசேஷத்தை கொரிந்தியருக்கு இலவசமாகப் பிரசங்கம்பண்ணினார். இதனால் கொரிந்தியரிடம் ஒரு சில சலுகைகளைக் கேட்கவும், அவர்களிடமிருந்து சில சலுகைகளைப் பெற்றுக்கொள்ளவும் பவுலுக்கு உரிமை உண்டு. ஆனாலும் பவுல் தன்னை உயர்த்தாதபடி தன்னைத் தாழ்த்துகிறார். அவர்களிடத்தில் தனக்குள்ள உரிமையை பவுல் கட்டாயம்பண்ணவில்லை.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாக பிரசங்கம் செய்கிறார். மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் பவுலின் குறைவை நிறைவாக்குகிறார்கள். பவுல் யாருக்கு ஊழியம் செய்தாரோ அவர்கள்தான் பவுலுக்கு உதவிசெய்யவேண்டும். ஆனால் இங்கோ பவுல் கொரிந்தியருக்கு ஊழியம் செய்கிறார். மக்கெதோனியாவிலுள்ள சகோதரர் அவருக்கு உதவிசெய்கிறார்கள்.

கொரிந்தியரிடமிருந்து பவுல் உதவி பெற்றுக்கொள்ளாமலிருப்பதினால், அவர் அவர்களை சிநேகிக்கவில்லையென்று சொல்லமுடியாது. ஏனெனில் அவர்கள்மீது தனக்குள்ள சிநேகத்தை உறுதிபண்ணும் விதமாக, “இப்படி சொல்ல வேண்டியதென்ன, நான் உங்களை சிநேகியாதபடியினாலேயோ? தேவன் அறிவார்” என்று எழுதுகிறார். பவுல் கொரிந்தியர்மீது மெய்யான சிநேகம் வைத்திருக்கிறார்.

பவுல் கொரிந்தியருக்கு தேவனுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார். தன்னுடைய ஊழியத்தை யாரும் எந்தவிதத்திலும் குற்றம் சொல்லாத படிக்கு மிகுந்த எச்சரிப்போடிருக்கிறார். உலகப்பிரகாரமான ஆதாயத்திற்காக பவுல் ஊழியம் செய்கிறாரென்று அவர்மீது யாரும் குற்றம் சொல்லக்கூடாது. ஒரு சிலர் பவுலை விரோதிக்க சமயம் தேடுகிறார்கள். அவர்கள் தங்களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பவுல்மீது குறை சொல்லக்கூடாது. இதனால் ஒவ்வொரு விஷயத்திலும் பவுல் மிகுந்த கவனத்தோடிருந்து, கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றுகிறார்.

கள்ள அப்போஸ்தலர்கள் கபடமுள்ள வேலையாட்களாகயிருக்கிறார்கள். அவர்கள் சாத்தானுக்கு ஊழியம் செய்கிறார்கள். ஆனால் தங்களை நீதியின் ஊழியக்காரர்களாகக் காண்பித்துக்கொள்கிறார்கள். அவர்கள் சாத்தானுடைய ஊழியக்காரராயிருந்தாலும், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். இந்த உலகத்தில் மாய்மாலத்திற்குப் பஞ்சமில்லை. உலகப்பிரகாரமான ஜனங்கள் உண்மையாய் ஜீவிக்காமல் மாய்மாலமாய் ஜீவிக்கிறார்கள். உலகத்தாரிடம் சாத்தானின் சுபாவம் நிறைந்திருக்கிறது.

சாத்தான் சூழ்நிலைக்குத் தகுந்தபடி வேஷம் தரிக்கிறவன். சாத்தான் தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக ஒளியின் தூதனுடைய வேஷத்தையும் தரித்துக்கொள்கிறான். தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கும் இந்த துர்உபதேசத்தைச் சொல்லுகிறான். கள்ள அப்போஸ்தலர்கள் கபடமுள்ள வேலையாட்களாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலருடைய வேஷத்தைத் தரித்துக் கொள்கிறார்கள். கள்ள அப்போஸ்தலர்கள் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொள்கிறார்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சாத்தான் எப்படியிருக்கிறானோ, அப்படியே அவனுடைய கள்ள அப்போஸ்தலர்களும் இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் முடிவு மகிமை நிறைந்ததாகயிருக்கும். நீதியின் ஊழியக்காரர்கள் முடிவில் நீதியாய் மகிமையடைவார்கள். கள்ள அப்போஸ்தலர்களுக்கு பயங்கரமான முடிவு உண்டாகும். இந்த உலகத்தில் கள்ள அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டாலும், நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டாலும், அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாகயிருக்கும். அவர்களுக்கு நித்திய அழிவு உண்டாகும்.

நானும் மேன்மை பாராட்டுவேன் 2கொரி 11 : 16-21

2கொரி 11:16. பின்னும் நான் சொல்லுகிறேன்; ஒருவனும் என்னைப் புத்தியீனனென்று எண்ணவேண்டாம்; அப்படி எண்ணினால், நானும் சற்றே மேன்மைபாராட்டும்படி, என்னைப் புத்தியீனனைப் போலாகிலும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

2கொரி 11:17. இப்படி நான் சொல்லுகிறது கர்த்தருக்கேற்றபடி சொல்லாமல், மேன்மை பாராட்டும் தைரியத்தினாலே புத்தியீனனைப் போலச் சொல்லுகிறேன்.

2கொரி 11:18. அநேகர் மாம்சத்திற்கேற்றபடி மேன்மை பாராட்டிக்கொள்ளுகையில், நானும் மேன்மைபாராட்டுவேன்.

2கொரி 11:19. நீங்கள் புத்தியுள்ளவர்களாயிருந்து புத்தி யில்லாதவர்களைச் சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்களே.

2கொரி 11:20. ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும், ஒருவன் உங்களைப் பட்சித்தாலும், ஒருவன் உங்களைக் கைவசப்படுத்தினாலும், ஒருவன் தன்னை உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தில் அறைந்தாலும் சகித்திருக்கிறீர்களே.

2கொரி 11:21. நாங்கள் பலவீனரானதுபோல, எங்களுக்கு வந்த கனவீனத்தைக்குறித்துப் பேசுகிறேன்; ஒருவன் எதிலே துணிவுள்ளவனா யிருக்கிறானோ அதிலே நானும் துணிவுள்ளவனாயிருக்கிறேன்; இப்படிப் புத்தியீனமாய்ப் பேசுகிறேன்.

பவுல் புத்தியீனரல்ல. அவர் புத்தியுள்ளவர். ஆகையினால் ஒருவனும் தன்னை புத்தியீனன் என்று எண்ணவேண்டாம் என்று எழுதுகிறார். மேன்மை பாராட்டுவது பெருமையான இருதயத்திற்கு அடையாளம். ஆனால் பவுலோ இங்கு தன்னை சற்று மேன்மை பாராட்டிப் பேசுகிறார். பவுலிடத்தில் பெருமையின் ஆவியில்லை. ஆனாலும் தான் சொல்லுகிறதை கர்த்தருக்கேற்றபடி சொல்லாமல், மேன்மை பாராட்டும் தைரியத்தினாலே சொல்லுவதாக எழுதுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மனத்தாழ்மையோடிருக்கவேண்டும். அதே வேளையில் தங்களுடைய ஊழியத்திற்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்களைத் தைரியமாய் மேற்கொள்ளவேண்டும். தைரியமாய் மேற்கொள்வது பெருமையின் இருதயமல்ல. இதுவும் அவர்களுடைய ஊழியத்தின் ஒரு பகுதி.

கர்த்தருடைய பிள்ளைகள் தங்களைத் தாழ்த்தவேண்டும். சாந்தகுணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனாலும் சில வேளைகளில் தேவன் நம்மூலமாகச் செய்கிற காரியங்களைத் தைரியமாகச் சொல்லவேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது. உலகப்பிரகாரமான ஜனங்கள் மாம்சத்திற்கேற்றபடி மேன்மை பாராட்டுகிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, அவருடைய நாமமகிமைக்காக, அவருடைய பிள்ளைகளின் பிரயோஜனத்திற்காக, உள்ளதை உள்ளதென்று சொல்லவேண்டும். தேவன் நம்மூலமாய்ச் செய்கிற உன்னதான காரியங்களைத் தைரியமாய்ச் சொல்லவேண்டும்.

தேவன் நமக்காகப் பெரிய காரியங்களைச் செய்கிறார். நம்மில் பெரிய காரியங்களைச் செய்கிறார். நம்மூலமாக பெரிய காரியங்களைச் செய்கிறார். உலகத்தார் மாம்சத்திற்கேற்றபடி மேன்மை பாராட்டும்போது, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ ஆவிக்கேற்றபடி மேன்மை பாராட்டி, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய குறைவிலும் மேன்மை பாராட்டுகிறார். கொரிந்தியர்கள் புத்தியுள்ளவர்களா யிருந்து, புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாய் சகித்துகொள்கிறார்கள் என்று பவுல் இங்கு எழுதுகிறார். இது எதிர்மறையான வாக்கியம். கொரிந்தியர்கள் புத்தியுள்ளவர்கள். கள்ள அப்போஸ்தலர்களோ புத்தியில்லாதவர்கள். கொரிந்தியர்கள் புத்தியுள்ளவர்களா யிருந்தாலும், புத்தியில்லாத கள்ள அப்போஸ்தலர்களைத் தங்களிடமாகச் சேர்த்துக்கொண்டு, அவர்களுடைய கள்ளஉபதேசங்களை சந்தோஷமாய்க் கேட்கிறார்கள்.

கொரிந்தியர்கள் மிகுந்த மனத் தாழ்மையுள்ளவர்களாகயிருப்பதாக பவுல் இங்கு எழுதுகிறார். இதுவும் எதிர்மறையான வாக்கியம். கள்ள அப்போஸ்தலர்கள் கொரிந்தியரைச் சிறையாக்குகிறார்கள். அவர்களைப் பட்சிக்கிறார்கள். அவர்களைக் கைவசப்படுத்துகிறார்கள். தங்களை உயர்த்துகிறார்கள். அவர்களுடைய முகத்தில் அறைகிறார்கள். கள்ள அப்போஸ்தலர்கள் கொரிந்தியருக்கு விரோதமாக இத்தனை அநியாயத்தைச் செய்தாலும், அவையெல்லாவற்றையும் அவர்கள் சகித்துக்கொள்கிறார்கள். கொரிந்தியர்கள் கள்ள அப்போஸ்தலர்களைச் சகித்துக் கொள்ளும்போது, தன்னையும் ஏன் சகித்துக்கொள்ளக்கூடாது என்று பவுல் அவர்களிடத்தில் கேட்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். சூழ்நிலைகளை அறிந்துகொள்ளவேண்டும். ஜனங்களை அறிந்துகொள்ளவேண்டும். ஒருவன் எதிலே துணிவுள்ளவனாயிருக்கிறானோ, அதிலே தானும் துணிவுள்ளவனாயிருப்பதாக பவுல் இங்கே எழுதுகிறார். மற்ற அப்போஸ்தரில் தான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்ல என்று பவுல் எண்ணுகிறார்.

பவுல் கொரிந்தியருக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. அவர்களுக்கு பொருளாதார கஷ்டத்தைக் கொடுக்கவில்லை. ஆனாலும் கொரிந்தியர் மத்தியில் சில கள்ள அப்போஸ்தலர் எழும்பி, பவுலுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் மிகுந்த மனத்தாழ்மையோடு, கொரிந்தியரைவிட்டு விலகிப்போய் விடவில்லை. தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை அவர்கள் மத்தியில் உறுதிபண்ணுகிறார். தான் அவர்கள்மீது சிநேகத்தோடிருப்பதை தெளிவுபடுத்துகிறார்.

கள்ள அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரைப்போல வேஷம் தரித்து, கபடமுள்ள வேலையாட்களாக சாத்தானுக்கு ஊழியம் செய்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். கொரிந்தியர்கள் கள்ள அப்போஸ்தலர்களை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பவுலோ மெய்யாகவே கிறிஸ்துவினுடைய அப்போஸ்தரலாக யிருக்கிறார். தன்னிடத்தில் ஒரு குறையுமில்லை என்றும், தன்னையும் அப்போஸ்தலராக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் பவுல் அவர்களுக்கு எழுதுகிறார். இந்தச் சூழ்நிலையில் பவுல் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, அவர் தன்னை மேன்மை பாராட்டி பேசுகிறார்.

நானும் எபிரெயன்
2கொரி 11 : 22-33

2கொரி 11:22. அவர்கள் எபிரெயரா? நானும் எபிரெயன்; அவர்கள் இஸ்ரவேலரா? நானும் இஸ்ரவேலன்; அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரா? நானும் ஆபிரகாமின் சந்ததியான்.

2கொரி 11:23. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.

2கொரி 11:24. யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்;

2கொரி 11:25. மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.

2கொரி 11:26. அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்;

2கொரி 11:27. பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்.

2கொரி 11:28. இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.

2கொரி 11:29. ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?

2கொரி 11:30. நான் மேன்மைபாராட்டவேண்டுமானால், என் பலவீனத்திற்கடுத்தவைகளைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்.

2கொரி 11:31. என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய் சொல்லுகிறதில்லையென்று அறிவார்.

2கொரி 11:32. தமஸ்குபட்டணத்து அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் என்னைப்பிடிக்க வேண்டுமென்று தமஸ்கருடைய பட்டணத்தைக் காவல்வைத்துக் காத்தான்;

2கொரி 11:33. அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைக்குத் தப்பினேன்.

அப்போஸ்தலர் பவுல் தன்னையும், கொரிந்தியர் மத்தியில் துர்உபதேசம் செய்கிற கள்ளஅப்போஸ்தலரையும் இங்கு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். தான் ஒன்றிலும் அவர்களைவிட குறைவுள்ளவனல்ல என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறார். பவுலும் அவர்களைப்போல எபிரெயராகயிருக்கிறார். ஆனால் அவர்கள் கிறிஸ்துவுக்காக எந்தப் பாடுகளையும் அனுபவிக்கவில்லை. பவுலோ கிறிஸ்துவுக்காக அநேக பாடுகளை அனுபவித்து, அவர்களைவிட மேன்மையுள்ளவராகயிருக்கிறார்.

பவுல் பிறப்பினால் ஒரு எபிரெயர். அவர் தன்னை எபிரெயருக்கெல்லாம் எபிரெயர் என்று குறிப்பிடுகிறார். பவுலின் குடும்பத்தார் யூதமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். புறஜாதியாரோடு கலியாண சம்பந்தம் பண்ணாதவர்கள். பவுலும் ஒரு இஸ்ரவேலர். ஆபிரகாமின் சந்ததியில் வந்தவர். கள்ளஅப்போஸ்தலர்கள் தங்களை எபிரெயர் என்றும், இஸ்ரவேலர் என்றும், ஆபிரகாமின் சந்ததியார் என்றும் சொல்லுகிறார்கள். பவுல் இந்த விஷயத்தில் அவர்களைவிட எவ்விதத்திலும் குறைவுள்ளவரல்ல.

கள்ளஅப்போஸ்தலர்கள் சாத்தானுடைய வேலையாட்களாகயிருந்தாலும், அவர்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொள்கிறார்கள். நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் தன் ஊழியத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் அதிகம்" என்று சொல்லுகிறார். அவர்களைவிட பவுல் கிறிஸ்துவுக்கு அதிகமாய் ஊழியம் செய்கிறவர்.

கள்ளஅப்போஸ்தலருடைய குணாதிசயங்களை பவுல் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். தன்னை அவர்களோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். அதன் பின்பு தான் கிறிஸ்துவுக்காக அடைந்த பாடுகளை பவுல் ஒவ்வொன்றாகக் குறிப்பிடுகிறார். கள்ளஅப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்காக ஒரு பாடும் அனுபவிக்கவில்லை. தான் கிறிஸ்துவுக்காக அதிகமாய் ஊழியம் செய்வதோடு, அவருக்காக அதிகமாய் பாடுகளை அனுபவித்ததையும் இங்கு குறிப்பிடுகிறார்.

கட்டுக்களும் காவல்களும் பவுலுக்கும் புதுமையல்ல. அதிகமாய் காவல்களில் வைக்கப்பட்டிருக்கிறார். அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டிருக்கிறார். யூதர்களால் ஒன்று குறைய நாற்பது அடியாக, அதாவது முப்பத்தொன்பது அடியாக, ஐந்து தரம் அடிபட்டிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டார். ஒரு தரம் கல்லெறியுண்டார். மூன்றுதரம் கப்பற்சேதத்திலிருந்தார். கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் இருந்தார். பவுல் எங்கெல்லாம் பிரயாணம் பண்ணினாரோ அங்கெல்லாம் அவருக்கு பாடுகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. தரை வழியாகப் பிரயாணம் பண்ணியபோது, அவருக்கு கள்ளரால் மோசங்கள் வந்தது. கப்பல் பிரயாணம் செய்தபோது, அவருக்கு ஆறுகளால் மோசங்கள் வந்தது.

பவுலின் சுயஜனங்களே அவரைக் கொல்லுவதற்கு சதிஆலோசனை பண்ணினார்கள். புறஜாதி ஜனங்களும் அவர்மீது அன்பாகயில்லை. அவர் எப்போதும் துன்பத்தையும் மோசத்தையும் சகித்துக்கொண்டார். அவர் பட்டணத்தி லிருந்தாலும், வனாந்தரத்திலிருந்தாலும், சமுத்திரத்திலிருந்தாலும் அவருக்கு மோசங்கள் உண்டாயிற்று. கள்ளசகோதரர் மூலமாகவும் அவருக்கு மோசங்கள் உண்டாயிற்று. கள்ளசகோதரர்கள் தங்களை சத்துருக்கள் என்று வெளிப்படுத்திக் காண்பிக்காமல், பவுலுக்கு சகோதரர்கள் என்று காண்பித்தார்கள். ஆனால் அவர்களோ கள்ளசகோதரர்களாகயிருந்து பவுலுக்கு மோசம் செய்தார்கள்.

பவுலுக்கு அநேகப் பிரயாசங்களும், அநேக வருத்தங்களும் உண்டாயிற்று. அநேகம் முறை கண்விழித்திருக்கிறார். பசியிலும் தாகத்திலும் இருந்தார். அநேகம்முறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தார். பவுல் இந்த உலகத்திற்கு பாரமானவர் என்றும், ஜனங்கள் மத்தியில் அவர் கொள்ளை நோயாகயிருக்கிறாரென்றும் அவர்மீது குற்றம் சுமத்தினார்கள்.

பவுலுடைய சரீரத்தில் அநேக வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. இவையெல்லா வற்றையும்விட, எல்லா சபைகளையும் குறித்து அவருக்கு உண்டாயிருக்கிற கவலை அவரை நாள்தோறும் நெருக்கிற்று. சபையைக்குறித்த கவலையை எல்லாவற்றிற்கும் கடைசியில் சொல்லுகிறார். மற்ற கவலைகளைவிட பவுலுக்கு சபைகளைக் குறித்து உண்டாயிருக்கிற கவலையே மிகப்பெரிய கவலையாகயிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் ஒருவன் பலவீனமாகயிருக்கும்போது, பவுல் தன்னையும் பலவீனனாக எண்ணுகிறார். "ஒருவன் இடறினால் தன்னுடைய மனம் எரியாதிருக்குமோ" என்று சொல்லி, அவன்மீது தனக்குள்ள அக்கறையைச் சொல்லுகிறார். பவுலுக்கு மேன்மை பாராட்ட ஒன்றுமில்லை. ஆனாலும் தன்னுடைய பலவீனத்திற்கு அடுத்தவைகளைக்குறித்தே பவுல் மேன்மை பாராட்டுகிறார். பவுலுக்கு இந்த பலவீனம் சபைகளைக் குறித்து உண்டாயிருக்கிற கவலைகளினால் உண்டாயிற்று. ஆத்துமபாரத்தினாலும், ஊழியவாஞ்சையினாலும் பவுலுக்கு இந்த கவலை உண்டாயிற்று.

அப்போஸ்தலர் பவுல் தான் அனுபவித்த அநேக பாடுகளைப்பற்றி இதுவரையிலும் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். அவற்றில் ஒன்றை இதற்கு முன்பு சொல்ல மறந்துவிட்டார். அதை இப்போது இங்கு நினைவுபடுத்திச் சொல்லுகிறார். பவுல் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட சிறிது காலத்தில் தமஸ்கு பட்டணத்திலிருந்தார். அப்போது அந்தப் பட்டணத்து ராஜாவாகிய அரேத்தா என்பவனுடைய சேனைத்தலைவன் பவுலைப் பிடித்துக் கொலைசெய்ய வேண்டுமென்று தீர்மானமாயிருந்தான். அதற்காக தமஸ்குருடைய பட்டணத்தை காவல் வைத்து காத்தான். அப்போது பவுலை கூடையில் வைத்து, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கி விட்டார்கள். பவுல் சேனைத்தலைவனுடைய கைக்குத் தப்பினார்.

பவுல் தன்னைப்பற்றிச் சொல்லுகிற ஒவ்வொரு காரியத்தையும் உண்மையாய்ச் சொல்லுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவானவரை பவுல் தனக்குச் சாட்சியாக நியமிக்கிறார். தான் பொய்சொல்லுகிறதில்லையென்று அவர் அறிந்திருப்பதாகச் சொல்லுகிறார். பவுல் கிறிஸ்துவுக்காகவே ஊழியம் செய்கிறார். கிறிஸ்துவுக்காகவே பாடுகளை அனுபவிக்கிறார். கிறிஸ்துவுக்காகவே ஜீவிக்கிறார். கிறிஸ்துவுக்காகவே மரிக்க ஆயத்தமாகயிருக்கிறார்.

12 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தின் மேன்மையை உறுதிபண்ணுகிறார். தேவன் தனக்குத் தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் அருளியிருப்பதாக எழுதுகிறார் (2கொரி 12:1-10). அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியர்மீது அன்பாகயிருப்பதை மறுபடியுமாக உறுதிபண்ணுகிறார். பவுலும் அவருடைய உடன்ஊழியரும் சகலத்தையும் அவர்களுடைய பக்திவிருத்திக்கேதுவாக செய்கிறார்கள் (2கொரி 12:11-21).

கர்த்தர் அருளிய தரிசனங்களும் வெளிப்படுத்தல்கள் 2கொரி 12 : 1-10

2கொரி 12:1. மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே; ஆகிலும், கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன்.

2கொரி 12:2. கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.

2கொரி 12:3. அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக் கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.

2கொரி 12:4. அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.

2கொரி 12:5. இப்படிப்பட்டவனைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்; ஆனாலும் என்னைக்குறித்து என் பலவீனங்களிலேயன்றி, வேறொன்றிலும் மேன்மைபாராட்டமாட்டேன்.

2கொரி 12:6. சத்தியமானதை நான் பேசுகிறேன்; நான் மேன்மைபாராட்ட மனதாயிருந்தாலும், நான் புத்தியீனனல்ல, ஆனாலும் ஒருவனும் என்னிடத்தில் காண்கிறதற்கும், என்னாலே கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணாதபடிக்கு அப்படிச் செய்யாதிருப்பேன்.

2கொரி 12:7. அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.

2கொரி 12:8. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்.

2கொரி 12:9. அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

2கொரி 12:10. அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.

தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற சிலாக்கியங்களை பவுல் இங்கு எடுத்துச் சொல்லுகிறார். கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷன் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டான் என்று பவுல் சொல்லுகிறார். அந்த மனுஷன் பவுல் தான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்தச் சம்பவம் எப்பொழுது நடந்தது என்று உறுதியாகத் தெரியவில்லை. ஆனாலும் இது எப்படி நடந்தது என்பதை பவுல் இங்கு விவரிக்கிறார்.

மூன்றாம் வானம் என்பது பரதீசைக்குக் குறிக்கிற வார்த்தை. பவுல் பரதீசில் எதைத் தரிசித்தார் என்பது தெரியவில்லை. அவர் அங்கு மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டார். ஒருவேளை இந்த வார்த்தைகள் மனுஷர் சொல்லக்கூடாத வார்த்தைகளாக யிருக்கலாம். மனுஷர் பேசுவதற்கு தடைபண்ணப்பட்ட வார்த்தைகளாக யிருக்கலாம். அப்போஸ்தலர் பவுல் இந்தச் சம்பவத்தை மிகுந்த மனத்தாழ்மையோடு சொல்லுகிறார். மேன்மை பாராட்டுகிறது தனக்கு தகுதியல்ல என்று சொல்லிவிட்டு, ஆகிலும் கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுவதாக எழுதுகிறார்.

இந்தச் சம்பவம் பதினாலு வருஷத்திற்கு முன்னே நடைபெற்றது. இதுவரையிலும் பவுல் இந்தச் சம்பவத்தைப்பற்றி எங்கும் எதுவும் சொல்லவில்லை. பவுல் தன்னைக்குறித்து மேன்மை பாராட்டுகிறவரல்ல. ஆகையினால் கர்த்தர் பவுலுக்கு வெளிப்படுத்திய இந்த தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும், கடந்த பதினாலு வருஷங்களாக, யாருக்கும் சொல்லவில்லை. தனக்குப் பெருமை உண்டாக இந்தத் தரிசனத்தைப்பற்றி அவர் மேன்மை பாராட்டவில்லை.

பவுல் சத்தியமானதைப் பேசுகிறார். மேன்மை பாராட்டுமளவுக்கு தான் புத்தியீனனல்ல என்று தன்னைப்பற்றிச் சொல்லுகிறார். மற்றவர்கள் தன்னிடத்தில் எதைக் காண்கிறார்களோ அதன் பிரகாரம் தன்னைப்பற்றி எண்ணினால் போதுமானது என்று மனத்தாழ்மையோடிருக்கிறார். அதுபோலவே பவுல் மூலமாக மற்றவர்கள் எதைக்கேட்கிறார்களோ, அதன் பிரகாரம் அவரைப்பற்றி எண்ணினால் போதுமானது.

அப்போஸ்தலர் பவுல் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறார். அவருடைய ஊழியம் கனிதருகிறது. ஊழியத்தில் வளர்ச்சி உண்டாயிற்று. கர்த்தர் அவருக்குத் தரிசனங்களைக் கொடுக்கிறார். அநேக கிருபைகளைக் கொடுக்கிறார். இவ்வளவு பெருமைகளுக்கு மத்தியிலும் பவுலின் இருதயத்தில் தாழ்மையின் ஆவி இருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒருபோதும் பெருமைப்படக்கூடாது. கர்த்தருடைய சமுகத்தில் நாம் தாழ்மையோடு காணப்படவேண்டும். தாழ்மையுள்ளவர்களை கர்த்தர் உயர்த்துவார்.

பவுல் தன்னை ஒருபோதும் அளவுக்கு மிஞ்சி உயர்த்தவில்லை. கர்த்தருடைய பிள்ளைகள் தங்களைப்பற்றிய சாட்சிகளைச் சொல்லும்போது, தங்களை உயர்வாய்ப் பேசக்கூடாது. தங்களுடைய அனுபவங்களை பிறரிடத்தில் பகிர்ந்துகொள்ளும்போது, கர்த்தரையே உயர்த்தவேண்டும். நம்மையோ தாழ்த்தவேண்டும். கர்த்தர் நம்மை உயர்த்தும்போது, நாம் பெருமைப்படாமல் இருப்பதற்கு, அவர் சில காரியங்களைச் செய்து, நம்மைத் தாழ்த்துகிறார். நம்முடைய இருதயத்தில் பெருமை உண்டாகும் வேளைகளிலெல்லாம், கர்த்தர் நம்மை தாழ்த்திய சம்பவங்களை நினைவுகூரவேண்டும்.

அப்போஸ்தலர் பவுலுக்கு கர்த்தர் தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் அருளியிருக்கிறார். இது அவருக்கு ஒரு மேன்மையான அனுபவம். இதனிமித்தம் அவர் தன்னை உயர்த்தாதபடிக்கு, கர்த்தர் அவருடைய மாம்சத்திலே ஒரு முள்ளைக் கொடுத்திருக்கிறார். பவுல் தன்னை உயர்த்தாதபடிக்கு, அந்த முள், அவரைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. இந்த முள் என்ன என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை. பவுலின் சரீரத்தில் தாங்க முடியாத வேதனையோ அல்லது வியாதியோ இருந்திருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த வேதனையை அல்லது வியாதியை பவுல் முள் என்று குறிப்பிடுகிறார்.

பவுல் தன் சரீரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற முள்ளைப்பற்றிச் சொல்லும்போது, அவர் மிகுந்த வேதனையோடு இதை எழுதியிருக்க வேண்டும். இது அவரை அதிகமாக வருத்தியிருக்கவேண்டும். வேதனைப்படச் செய்திருக்கவேண்டும். நம்முடைய சரீரங்களில் இதுபோன்ற முட்கள் காணப்படும்போது, இயேசுகிறிஸ்துவின் சிரசின்மீது சூட்டப்பட்ட முட்கிரீடத்தை நினைவுகூரவேண்டும். அவர் நமக்காக தம்முடைய சிரசில் முள்முடியை ஏற்றுக்கொண்டார். அதன் வேதனையை நமக்காகச் சகித்துக்கொண்டார்.

தேவன் நம்மைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவே நம்முடைய சரீரத்தில் முட்களை அனுமதிக்கிறார். நம்முடைய சரீரத்தில் அநேக முட்கள் இருக்கலாம். இவற்றின் மூலமாய் உண்டாகும் வேதனையும் அதிகமாயிருக்கலாம். நம்மை உயர்த்தாதபடிக்கு இந்த வேதனை நம்மைத் தாழ்த்துகிறது. நம்முடைய பரிசுத்தத்திற்காக தேவன் இதை அனுமதித்திருக்கிறார் என்று விசுவாசித்து, நம்முடைய ஜீவியத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

தன்னுடைய மாம்சத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற முள்ளை யார் கொடுத்தது என்று பவுல் ஒன்றும் சொல்லவில்லை. தன்னை உயர்த்தாதபடிக்கு அந்த முள் தன்னுடைய மாம்சத்தில் கொடுக்கப்பட்டிருப்பதாகவே சொல்லுகிறார். இது தன்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாகயிருப்பதாகவும் சொல்லுகிறார். பவுல் தன்னை அளவுக்கு மீறி உயர்த்தக்கூடாது. அப்படி உயர்த்தும்போதெல்லாம் அவருடைய சரீரத்திலுள்ள முள் அவரைக் குட்டும்.

தேவன் நம்மை நேசிக்கிறார். ஆகையினால் நம்மிடத்திலிருந்து பெருமையை அகற்றிப்போடுகிறார். அளவுக்கு மிஞ்சி நம்மை நாமே மேன்மை பாராட்டாதவாறு நம்மைக் காத்துக்கொள்கிறார். சுயபெருமையிலிருந்து நம்மை விலக்குகிறார். பவுலின் சரீரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற முள் சாத்தானுடைய தூதனாகயிருக்கிறது. ஆகையினால் இது நல்ல எண்ணத்தோடு கொடுக்கப்பட்டிருக்காது. இந்த முள்ளின் நோக்கமும் நல்ல நோக்கமாகயிராது. சாத்தான் இதை என்ன நோக்கத்தோடு பவுலுக்குக் கொடுத்தானோ தெரியவில்லை. ஆனால் இந்த முள்ளினால் பவுலுக்கு வேதனையும் பாடுகளும் உண்டாயிற்று. கர்த்தரோ சாத்தானுடைய சதித்திட்டத்தை முறியடித்து, பவுலின் சரீரத்திலுள்ள முள்ளை, அவருடைய நன்மைக்கேதுவாக மாற்றுகிறார்.

தன் சரீரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற முள் தன்னைவிட்டு நீங்கும்படிக்கு பவுல் கர்த்தரிடத்தில் மூன்றுதரம் வேண்டிக் கொண்டார். கருத்தாய் ஜெபம்பண்ணினார். தன் சரீர வேதனை நீங்கவேண்டுமென்று கர்த்தரிடத்தில் ஜெபித்தார். முதலாவது ஜெபித்தபோது கர்த்தர் பவுலுக்கு பதில் கொடுக்கவில்லை. இரண்டாம்முறை ஜெபித்தபோதும் கர்த்தர் பவுலுக்கு பதில் கொடுக்கவில்லை. இதனால் பவுல் சோர்ந்துவிடவில்லை. மூன்றாம் முறையும் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும். நம்முடைய ஜெபத்திற்கு உடனே பதில் கிடைக்காவிட்டால், சோர்ந்துபோய், ஜெபம்பண்ணுவதை நிறுத்திவிடக்கூடாது. கர்த்தரிடத்திலிருந்து பதில் கிடைக்கும் வரையிலும் ஊக்கத்தோடு ஜெபம்பண்ணவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் ஊக்கத்தோடு ஜெபிக்கவேண்டும் என்பதை கற்றுக்கொடுப்பதற்காக, சில சமயங்களில் நமக்கு சரீர வேதனைகள், பாடுகள், பிரச்சனைகள், கஷ்டங்கள், துன்பங்கள் வருகிறது. இந்தப் பாடுகளின் மூலமாக நாம் ஜெபம்பண்ணக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெபம்பண்ணுவதை விட்டுவிட்டு, வேதனைகளினால் புலம்பக்கூடாது.

பவுல் மூன்றாம் முறை ஜெபித்தபோது, கர்த்தர் அவருக்குப் பதில் கொடுத்தார். "என் கிருபை உனக்குப் போதும்" என்று சொன்னார். கர்த்தர் அவருடைய ஜெபத்திற்குப் பதில் கொடுத்தார். ஆனால் அவர் கேட்ட பிரகாரம் கொடுக்கவில்லை. நம்முடைய தேவன் ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறவர். அவர் நம்முடைய விருப்பத்தின் பிரகாரம் பதில் கொடுக்கமாட்டார். தம்முடைய விருப்பத்தின் பிரகாரம்தான் பதில் கொடுப்பார். கர்த்தருடைய சித்தமே நிறைவேறும்.

கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கும்போது, சில வேளைகளில் தம்முடைய கோபத்தை நமக்கு வெளிப்படுத்துவார். சில வேளைகளில் தம்முடைய அன்பை மறைப்பார். இவையெல்லாம் நம்முடைய சரீரத்தில் கொடுக்கப்படுகிற முட்களைப்போலவே இருக்கும். வேதனை உண்டாகும். இந்த வேதனைக்கு மத்தியிலும், கர்த்தர் நம்மிடம், "என் கிருபை உனக்குப் போதும்" என்று ஆறுதலாகச் சொல்லுகிறார். நமக்குத் தேவை கர்த்தருடைய கிருபைதான். அது நமக்குப் போதுமானது. நம்முடைய சரீரத்தில் முள் நீங்கினாலும், நீங்காவிட்டாலும், கர்த்தருடைய கிருபை நம்மைவிட்டு நீங்காமலிருக்கவேண்டும்.

தேவன் நமக்கு கிருபையைக் கொடுக்கும்போது, தம்முடைய நன்மையை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய கிருபை நம்மைப் பலப்படுத்துவதற்கும், ஆறுதல் படுத்துவதற்கும் போதுமானதாகயிருக்கிறது. தேவனுடைய கிருபை நமக்குள் நற்கிரியை செய்கிறது. தேவகிருபையினால் நாம் அவரிடத்திலிருந்து இரக்கம் பெறுகிறோம். நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறோம். தேவன் தம்முடைய கிருபையினால் நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறார்.

தேவன் பவுலிடத்தில், "என் கிருபை உனக்குப் போதும்" என்று சொல்லிவிட்டு, "பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றும் சொல்லுகிறார். பவுலிடத்தில் பலவீனம் காணப்படுகிறது. ஆனாலும் இந்தப் பலவீனத்தில் கர்த்தருடைய பலம் பூரணமாய் விளங்குகிறது. ஆகையினால் தன்னுடைய பலவீனங்களைக் குறித்து பவுல் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுகிறார். தான் பலவீனமாயிருக்கும்போதே தான் பலமுள்ளவனாயிருப்பதாகச் சொல்லுகிறார். கிறிஸ்துவினிமித்தம் தனக்குண்டாயிருக்கிற எல்லா பலவீனங்களையும் பவுல் தாங்கிக் கொள்கிறார். தன்னுடைய பலவீனத்தில் சந்தோஷப்படுகிறார்.

பவுலுக்கு பலவீனங்களும், நிந்தைகளும், நெருக்கங்களும், துன்பங்களும், இடுக்கண்களும் உண்டாயிற்று. இவையெல்லாவற்றிலும் கிறிஸ்துவின் கிருபை அவருக்குப் போதுமானதாகயிருக்கிறது. இந்தப் பலவீனங்கள் எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் பலம் பூரணமாய் விளங்குகிறது. ஆகையினால் தன்னுடைய பலவீனங்களைக்குறித்து பவுல் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுகிறார். இந்தப் பலவீனங்களில் அவர் அதிகமாய்ப் பிரியப்படுகிறார்.

நாம் பலவீனமாகயிருக்கும்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையில் பலமுள்ளவர்களாக யிருக்கிறோம். ஆகையினால் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரைத் துதிக்கவேண்டும். அவருடைய கிருபை போதுமென்று சொல்லவேண்டும்.

சகலத்தையும் பக்திவிருத்திகாக செய்கிறோம்
2கொரி 12 : 11-21

2கொரி 12:11. மேன்மைபாராட்டி, புத்தியீனனாயினேன்; நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள்; நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்படவேண்டியதாயிருந்ததே.

2கொரி 12:12. அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே.

2கொரி 12:13. எதிலே மற்றச் சபைகளுக்குக் குறைவாயிருந்தீர்கள்? நான் உங்களை வருத்தப் படுத்தாதிருந்ததே உங்களுக்குக் குறைவு; இந்த அநியாயத்தை எனக்கு மன்னியுங்கள்.

2கொரி 12:14. இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை; நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்; பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும்.

2கொரி 12:15. ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன்.

2கொரி 12:16. அப்படியாகட்டும், நான் உங்களுக்குப் பாரமாயிருக்கவில்லை; ஆனாலும், உபாயமுள்ளவனாயிருந்து, தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம்.

2கொரி 12:17. நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர்களில் எவன்மூலமாயாவது உங்களிடத்தில் பொழிவைத் தேடினதுண்டா?

2கொரி 12:18. தீத்து உங்களிடத்தில் வரும்படி நான் அவனைக் கேட்டுக்கொண்டு, அவனுடனேகூட ஒரு சகோதரனை அனுப்பினேன்; தீத்து உங்களிடத்தில் ஏதாவது பொழிவைத் தேடினானா? நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவா?

2கொரி 12:19. நாங்கள் யோக்கியர்களென்று விளங்கும்படி உங்களிடத்தில் பேசுகிறோமென்று எண்ணுகிறீர்களோ? தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம். பிரியமானவர்களே, சகலத்தையும் உங்கள் பக்திவிருத்திக்காகச் செய்கிறோம்.

2கொரி 12:20. ஆகிலும் நான் வந்து, உங்களை என்மனதின் படியிருக்கிறவர்களாகக் காணாமலும், நானும் உங்கள் மனதின் படியிருக்கிறவனாகக் காணப்படாமலுமிருப்பேனோவென்றும்; விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல், கோட்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள் ஆகிய இவைகள் உங்களுக்குள்ளே உண்டாயிருக்குமோவென்றும்;

2கொரி 12:21. மறுபடியும் நான் வருகிறபோது, என் தேவன் உங்களிடத்தில் என்னைத் தாழ்த்தும்படிக்கு முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக்கிறதைக் குறித்து, நான் துக்கப்படவேண்டியதாயிருக்குமோவென்றும் பயந்திருக்கிறேன்.

கொரிந்து சபையில் ஒரு சிலர் பவுலுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் விசுவாசிகள் பவுலுக்கு சாதகமாகப் பேசவேண்டும். அவரை வருத்தப்படுத்துகிறவர்களுக்கு விரோதமாக, பவுலைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டும். ஆனால் அவர்கள் பவுலைக் குறித்து மேன்மை பாராட்டவில்லை. ஆகையினால் பவுல் தன்னைக்குறித்து மேன்மை பாராட்ட வேண்டியதாயிற்று. தான் மேன்மை பாராட்டி புத்தியீனனாகயிருந்தாக எழுதுகிறார்.

கொரிந்து சபையார் பவுலைக்குறித்து அநேக மேன்மையான காரியங்களைப் பேசி மேன்மை பாராட்டலாம். மகா பிரதான அப்போஸ்தலரில் அவர் எவ்வளவும் குறைந்தவரல்ல. ஆனாலும் கொரிந்தியர்கள் பவுலைக்குறித்து ஒரு வார்த்தையும் மேன்மை பாராட்டவில்லை. கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக யாராவது தூஷண வார்த்தைகளைப் பேசினால், அந்த வார்த்தைகள் பொய்யானதாக இருக்குமானால், நாம் ஊழியக்காரருக்கு ஆதரவாகப் பேசமுன்வரவேண்டும். அவர்களுக்கு விரோதமாகப் பேசப்பட்ட தூஷண வார்த்தைகளுக்கு நாம் துணிவாய்ப் பதில் சொல்லவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மிகுந்த மனத்தாழ்மையோடிருக்கவேண்டும். மற்றவர்கள் தங்களை எவ்வளவு அதிகமாக மேன்மை பாராட்டினாலும், நாம் நம்மை அதிகமாய்த் தாழ்த்தவேண்டும். அப்போஸ்தலர் பவுல் பிரதான அப்போஸ்தலரைப்போல இருக்கிறார். எந்த விஷயத்திலும் அவர்களுக்கு குறைந்தவரல்ல. ஆனாலும் அவர் தன்னை "ஒன்றுமில்லை" என்று சொல்லி தாழ்த்துகிறார். கொரிந்தியர்கள் அவரை மெச்சிக்கொள்ளவேண்டும். ஆனால் பவுலோ தன்னை ஒன்றுமில்லாதவரென்று சொல்லி தாழ்த்துகிறார்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியர்மீது மிகுந்த அன்போடிருக்கிறார். அவர்களை எந்த விதத்திலும் வருத்தப்படுத்தவில்லை. பவுல் அவர்களுக்கு ஒருபோதும் பாரமாகயிருந்ததில்லை. பவுல் அவர்களை மாத்திரமே தேடுகிறார். அவர்களுடையதை அவர் தேடவில்லை. அவர்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே பவுலின் விருப்பம். அவர்களிடத்தில் வந்து, அவர்களுடைய பணத்தைப் பெற்றுக்கொண்டு, அவர்களை வருத்தப்படுத்த வேண்டுமென்பது பவுலின் நோக்கமல்ல. இதற்காக அவர்களை வருத்தப்படுத்தாதிருக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நல்ல மேய்ப்பராகயிருக்கிறார். நல்ல மேய்ப்பர் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனையும் கொடுக்கிறவர். பவுல் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஊழியம் செய்கிறார். அவர்களுடைய ஆத்துமாக்களுக்காக பவுல் செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவும் விரும்புகிறார். அவர்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காக, பவுல் தன்னைப் பூரணமாய் ஒப்புக்கொடுக்கிறார். ஒரு மெழுகுவர்த்தி, தன்னையே உருக்கிக்கொண்டு, வெளிச்சம் தருவதுபோல, பவுல் தன்னை செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவும் ஒப்புக்கொடுக்கிறார்.

பவுல் கொரிந்தியரை வருத்தப்படுத்தவில்லை. அவர்களுக்குப் பாரமாயிருக்கவில்லை. அவர்களிடத்தில் பொழிவைத் தேடவில்லை. அவர்கள்மீது அதிகமாய் அன்புகூருகிறார். அன்பில் குறைவைக்கவில்லை. கொரிந்தியர்கள் பவுல்மீது குறைவாய் அன்புகூர்ந்தார்கள். ஆனால் பவுலோ அவர்கள்மீது அதிகமாய் அன்புகூருகிறார்.

பவுல் அவர்களுக்குப் பாரமாயில்லாததுபோலவே, அவருடைய உடன்ஊழியரும் அவர்களுக்கு பாரமாயில்லை. பவுல் அவர்களிடத்திற்கு தன்னுடைய உடன்ஊழியரை அனுப்பினார். அவர்களில் யாரும் கொரிந்தியரிடத்தில் பொழிவைத் தேடவில்லை. பவுலும், அவருடைய உடன்ஊழியரும் சகலத்தையும் கொரிந்தியருடைய பக்திவிருத்திக்காகவே செய்கிறார்கள். தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவுக்குள் பேசுகிறார்கள். தங்களை யோக்கியர்கள் என்று விளங்கப்பண்ணுகிறார்கள்.

பவுல் கொரிந்தியர்மீது அன்பாகயிருந்தாலும், தேவைப்படும்போது அவர்களைக் கடிந்துகொள்ளவும் தவறவில்லை. தன்னுடைய ஊழிய கடமையை பவுல் விட்டுக்கொடுக்கவில்லை. விசுவாசிகள் பாவம் செய்யும்போது, பவுல் உண்மையான மனதுடன் அவர்களைக் கடிந்துகொள்கிறார். பவுலுக்கு கொரிந்தியர்மீது அன்பு இருக்கிறது. ஆனாலும் அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படவேண்டும் என்னும் வாஞ்சையும் இருக்கிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தேவைப்படும்போது, விசுவாசிகளுக்கு கடினமான வார்த்தைகளைச் சொல்லி புத்திசொல்லவேண்டும். அவர்களை தனிமையிலோ, அல்லது தேவைப்படும்போது பொதுஇடங்களிலோ கடிந்துகொள்ளலாம். பாவம் செய்தவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட பின்பு, மறுபடியும் அந்தப் பாவத்தைச் செய்யக்கூடாது. மறுபடியும் பாவம் செய்யும்போது அவர்களுடைய மனந்திரும்புதல் உண்மையுள்ளதாயிராது.

கொரிந்தியர் மத்தியில் விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல், கோட்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள் ஆகியவை உண்டாயிருக்கக்கூடாது. இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக அவர்கள் அசுத்தத்தையும் வேசித்தனத்தையும், காமவிகாரத்தையும் செய்தார்கள். இவற்றைவிட்டு மனந்திரும்பிய பின்பு, மறுபடியும் அவற்றைச் செய்யக்கூடாது. கொரிந்தியர்கள் இந்தப் பாவங்களிலிருந்து மனந்திரும்பவில்லையென்றால், பவுலின் இருதயம் அவர்களுக்காகத் துக்கப்படும். நாம் தேவனை நேசிக்கும்போது, தேவனுடைய பிள்ளைகளையும் நேசிக்கவேண்டும். அவர்கள் மனந்திரும்பாமலிருக்கும்போது, நாம் அவர்களுக்காகத் துக்கப்படவேண்டும்.

13 அதிகாரம்

பாவம் செய்தவர்களுக்கு விரோதமாக பவுலின் வார்த்தைகள் (2கொரி 13:1-6). கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகளுக்காகப் பவுல் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார் (2கொரி 13:7-10). நிருபத்தின் முடிவுரை (2கொரி 13:11-14).

பாவம் செய்தவர்களுக்கு முன்னறிவித்து எழுதுகிறேன் 2கொரி 13 : 1-6

2கொரி 13:1. இந்த மூன்றாந்தரம் நான் உங்களிடததிற்கு வருகிறேன்; சகல காரியங்களும் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்.

2கொரி 13:2. நான் இரண்டாந்தரம் உங்களிடத்திலிருந்த போது சொன்னதுபோல், இப்பொழுது தூரமாயிருந்தும் உங்களிடத்திலிருக்கிறவனாக, நான் மறுபடியும் வந்தால் தப்பவிடமாட்டேனென்று முன்பு பாவஞ்செய்தவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் முன்னறிவித்து எழுதுகிறேன்.

2கொரி 13:3. கிறிஸ்து எனக்குள்ளே பேசுகிறாரென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே; அவர் உங்களிடமாய்ப் பலவீனரல்ல, உங்களிடத்தில் வல்லவராயிருக்கிறார்.

2கொரி 13:4. ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்.

2கொரி 13:5. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்.

2கொரி 13:6. நாங்களோ பரீட்சைக்கு நில்லாதவர்களல்லவென்பதை அறிவீர்களென்று நம்புகிறேன்.

அப்போஸ்தலர் பவுல் மூன்றாந்தரம் கொரிந்தியரிடத்திற்கு வரப்போவதாக எழுதுகிறார். அவர் வரும்போது, பாவம் செய்தவர்களாக கண்டவர்களை கடினமாகத் தண்டிப்பார். தண்டிப்பதில் பவுல் அவசரம் காண்பிக்கவில்லை. கடின வார்த்தைகளை அவர் உடனடியாகவும் பயன்படுத்தவில்லை. கண்டிப்பதில் நிதானம் காண்பிக்கிறார். பவுல் அவர்களுக்கு இரண்டுமுறை ஆலோசனை சொல்லியிருக்கிறார். "இரண்டாந்தரம் உங்களிடத்திலிருந்தபோது சொன்னது" என்னும் வாக்கியம் அவருடைய முதலாவது, இரண்டாவது நிருபங்களைக் குறிக்கிறது.

இரண்டாவது நிருபத்தில் பவுல் அவர்களுக்கு புத்திமதி சொல்லுகிறார். அவர்களிடத்திலிருந்து தூரமாகயிருந்தாலும், அவர்களிடத்தில் இருக்கிறவரைப்போல தன்னைக் காண்பிக்கிறார். சரீரத்தில் அவர் கொரிந்தியரை விட்டு தூரமாயிருந்தாலும், ஆவியிலே அவர்களுக்கு அருகாமையிலிருக்கிறார். தான் மறுபடியும் அவர்களிடத்தில் வரும்போது, பாவம் செய்தவர்களை தப்பவிடமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லுகிறார்.

பாவம் செய்தவர்கள் மனந்திரும்பவேண்டும். தங்கள் பாவத்தைவிட்டு விலகி ஜீவிக்கவேண்டும். மறுபடியும் பாவம் செய்யக்கூடாது. தொடர்ந்து பாவத்தில் ஜீவிக்கிறவர்களை பவுல் தப்பவிடமாட்டார். தேவன் பாவிகள்மீது கிருபையாக இரங்குகிறார். ஆனாலும் அவர் அவர்களோடு எப்போதும் பொறுமையாகயிருப்பதில்லை. பாவிகள் மனந்திரும்பவேண்டுமென்று ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தேவன் பொறுமையோடு காத்திருக்கிறார். அதற்குள் அவர்கள் மனந்திரும்பவேண்டும். இல்லையென்றால் தேவனுடைய கோபம் அவர்கள்மீது வரும். அவர்கள் அதற்குமேல், கர்த்தரிடத்திலிருந்து கிருபையையும் இரக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது. அதன்பின்பு, கர்த்தரிடத்திலிருந்து அவர்களுக்கு தண்டனைதான் வரும்.

கொரிந்தியர் மத்தியில் கள்ள அப்போஸ்தலர்கள் துர்உபதேசம் பண்ணுகிறார்கள். கிறிஸ்து பவுலுக்குள்ளே பேசவில்லையென்று அவருக்கு விரோதமாகச் சொல்லுகிறார்கள். கிறிஸ்து பவுலுக்குள்ளே பேசுகிறார் என்பதற்கு அத்தாட்சி தேடுகிறார்கள். கிறிஸ்து கொரிந்தியரிடத்தில் பலவீனரல்ல. அவர் வல்லவராயிருக்கிறார். கிறிஸ்து பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்.

அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவுக்குள் பலவீனராயிருக்கிறார்கள். ஆனாலும் தேவனுடைய வல்லமையினால், அவர்கள் கிறிஸ்துவுடனேகூட பிழைத்திருக்கிறார்கள். தேவனுடைய வல்லமையை அவர்கள் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள். உலகத்தாருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, தேவனுடைய கிருபையை வெளிப்படுத்துகிறார்கள்.

கொரிந்தியர்கள் கிறிஸ்துவில் வைத்திருக்கிற விசுவாசத்தை, அவர்களே சோதித்தறியவேண்டும். அவர்கள் தங்களைத் தாங்களே பரீட்சித்துப் பார்க்கவேண்டும். கிறிஸ்து தங்களுக்குள் இருக்கிறாரா என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். பரீட்சைக்கு நிலைத்து நிற்கவேண்டும். கொரிந்தியர்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால், கிறிஸ்து தங்களுக்குள் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளமாட்டார்கள்.

கிறிஸ்து கொரிந்தியருக்குள் இருந்தால், கிறிஸ்து பவுலுக்குள் பேசுகிறார் என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள். கிறிஸ்து பவுலுக்குள் பேசுகிறார் என்பதற்கு இதுவே அத்தாட்சியாகயிருக்கும். அப்போஸ்தலர்கள் பரீட்சைக்கு நிற்கிறவர்கள். கிறிஸ்து தங்களுக்குள் இருக்கிறாரென்பதை பரீட்சித்துப் பார்த்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களைப்போல கொரிந்தியரும் தங்களைத் தாங்களே பரீட்சித்துப் பார்க்கவேண்டும்.

அவர்களைப்போலவே நாமும் நம்மைச் சோதித்துப் பார்க்கவேண்டும். கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கிற விசுவாசம் உறுதியாகயிருக்கிறதா என்பதை நாம் சோதித்தறியவேண்டும். நமக்குள் விசுவாசம் இல்லையென்றால் நாம் பரீட்சைக்கு நிற்கமாட்டோம்.

விண்ணப்பம்பண்ணுகிறேன்
2கொரி 13 : 7-10

2கொரி 13:7. மேலும் நீங்கள் ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கும்படியாக, தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறேன். நாங்கள் பரீட்சைக்கு நின்றவர்களென்று காணப்படும் பொருட்டல்ல, நாங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்கள்போலிருந்தாலும், நீங்கள் நலமானதைச் செய்யும் பொருட்டே விண்ணப்பம்பண்ணுகிறேன்.

2கொரி 13:8. சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ்செய்யக் கூடாமல், சத்தியத்திற்கு அநுகூலமாகவே செய்யக்கூடும்.

2கொரி 13:9. நாங்கள் பலவீனரும் நீங்கள் பலமுள்ளவர்களாயிருக்கையில், சந்தோஷப்படுகிறோம்; நீங்கள் நற்சீர் பொருந்தும்படிக்கும் விண்ணப்பம்பண்ணுகிறோம்.

2கொரி 13:10. ஆனதால் இடித்துப்போடவல்ல, ஊன்றக் கட்டவே கர்த்தர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி, நான் உங்களிடத்தில் வந்திருக்கும்போது, கண்டிதம்பண்ணாதபடிக்கும், நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்காக தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு அநேக பொல்லாங்குகள் வரலாம். தேவன் நம்மை எல்லா பொல்லாங்குகளுக்கும் விலக்கி பாதுகாக்கவேண்டுமென்று நாம் ஜெபிக்கவேண்டும். இதைவிட முக்கியமாக, நாம் பொல்லாங்கு செய்யக்கூடாது என்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும். நாம் பொல்லாங்கு செய்கிறவர்களாகக் காணப்படக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்காக விண்ணப்பம் பண்ணுகிறார். அவர்கள் ஒரு பொல்லாங்கும் செய்யதிருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நலமானதைச் செய்யவேண்டும். நற்சாட்சி பெற்றிருக்கவேண்டும். பொல்லாங்கு செய்யக்கூடாது. பவுல் கொரிந்தியரிடத்திற்கு மறுபடியும் வரும்போது அவர்களிடத்தில் ஒரு பொல்லாங்கும் காணப்படக்கூடாது. அவர்கள் நலமானதைச் செய்யவேண்டும். அப்போதுதான் பவுலுக்கு அவர்கள்மீது கோபம் வராது.

அப்போஸ்தலர்கள் கொரிந்தியரை தண்டிக்கவேண்டுமென்று நினைக்க மாட்டார்கள். கடினவார்த்தைகளைப் பயன்படுத்தமாட்டார்கள். நலமானதைச் செய்கிறவர்களை யாரும் கண்டிக்கமாட்டார்கள். பாராட்டுவார்கள். பவுல் கொரிந்தியரிடத்தில் வரும்போது, அவர்கள் பொல்லாங்கு செய்யாமல், நலமானதைச் செய்யவேண்டுமென்று, கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

அப்போஸ்தலருக்கு பல பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று. இவையெல்லாவற்றையும் அவர்கள் சந்தோஷமாய்ச் சகித்துக்கொள்கிறார்கள். கொரிந்தியர்கள் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு பாடுகளோ வேதனைகளோ இல்லை. இதற்காக அப்போஸ்தலர்கள் சந்தோஷப்படுகிறார்கள். கொரிந்தியர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிபூரணமடைய வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் நற்சீர் பொருந்தும்படிக்கு விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

கொரிந்தியர்கள் பாவத்தைவிட்டு விலகியிருந்தால் மாத்திரம் போதாது. அவர்கள் நலமானதையும் செய்யவேண்டும். அவர்கள் தேவனுடைய கிருபையில் வளர்ச்சி பெறவேண்டும். தேவனிடத்தில் நற்சீர் பொருந்தவேண்டும். அப்போஸ்தலர் பவுல் அவர்களிடத்தில் வரும்போது, அவர் எந்தவிதத்திலும் அவர்களை கண்டிதம் பண்ணக்கூடாது.

விசுவாசிகளை அவர்களுடைய விசுவாசத்தில் ஊன்றக்கட்டுவதற்கு கர்த்தர் பவுலுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். அந்த அதிகாரத்தைப் பவுல் பயன்படுத்த விரும்புகிறார். அவர்களைக் கண்டிதம்பண்ணவோ, அவர்களுடைய விசுவாசத்தை இடித்துப்போடவோ பவுல் விரும்பவில்லை.

கொரிந்தியர்கள் இயேசு கிறிஸ்துவின்மீது தாங்கள் வைத்திருக்கிற விசுவாசத்திலும், தேவகிருபையிலும் பெருகவேண்டுமென்று பவுல் விண்ணப்பம்பண்ணுகிறார். அவர்களுடைய விசுவாசம் வர்த்திக்கவேண்டுமென்று பவுல் எதிர்பார்க்கிறார். அவர்கள் பொல்லாங்கு செய்யாமல் நலமானதைச் செய்யவேண்டுமென்று பவுல் தேவனிடத்தில் அவர்களுக்காக விண்ணப்பம்பண்ணுகிறார்.

கடைசியாக சகோதரரே
2கொரி 13 : 11-14

2கொரி 13:11. கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள்; நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.

2கொரி 13:12. ஒருவரையொருவர் பரிசுத்தமுத்தத்தோடு வாழ்த்துங்கள்.

2கொரி 13:13. பரிசுத்தவான்களெல்லாரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

2கொரி 13:14. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு அநேக புத்திமதிகளைச் சொல்லுகிறார். அவர்கள் பரிபூரணமடைய வேண்டும். அன்பில் பெருகியிருக்க வேண்டும். ஒருவர்மீது ஒருவர் அன்புகூரவேண்டும். சந்தோஷமாயிருக்க வேண்டும். ஆறுதலடைந்திருக்க வேண்டும். விசுவாசிகள் ஏகசிந்தையுள்ளவர்களாகயிருக்கவேண்டும். மற்ற விசுவாசிகளோடு சமாதானமாயிருக்க வேண்டும். ஆத்துமாக்களில் சகோதர சிநேகம் நிரம்பியிருக்கவேண்டும். விசுவாசிகள் சமாதானத்தில் ஜீவிக்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அது பிரிவினையாக மாறிவிடக்கூடாது.

தேவன் அன்புக்கும் சமாதானத்திற்கும் காரணராகயிருக்கிறார். தேவன் அவர்களோடு கூடயிருப்பார் என்னும் வாக்குத்தத்தத்தோடு பவுல் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். அன்பிலும் சமாதானத்திலும் ஜீவிக்கிறவர்களோடு தேவன் கூடயிருக்கிறார். தேவனே அன்புக்கும் சமாதானத்திற்கும் காரணராகயிருக்கிறார். சமாதானத்தை விரும்புகிறவர்களை தேவனும் விரும்புகிறார்.

விசுவாசிகள் ஒருவரையொருவர் வாழ்த்துமாறு பவுல் கொரிந்தியருக்குச் சொல்லுகிறார். தன்னுடைய உடன் ஊழியர்களெல்லோரும் கொரிந்தியருக்கு வாழ்த்துதல் சொல்லுவதாக எழுதுகிறார்.

இந்த நிருபத்தின் இறுதியில் பவுல் அப்போஸ்தல ஆசீர்வாதத்தைச் சொல்லி, இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார். அப்போஸ்தல ஆசீர்வாதம் மிகவும் முக்கியமானது. தேவன் அப்போஸ்தலருக்கு விசுவாசிகளை ஆசீர்வதிக்க அதிகாரங் கொடுத்திருக்கிறார். அப்போஸ்தலர்கள் தங்களுடைய சுயநாமத்தினால் விசுவாசிகளை ஆசீர்வதியாமல், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலும், வல்லமையினாலும் ஆசீர்வதிக்கிறார்கள். அப்போஸ்தல ஆசீர்வாதத்தை நாம் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். இந்த ஆசீர்வாதம் நமக்குச் சொந்தமாகவேண்டும்.